ஜோதி

ஆசிரியர் வெ. சாமிநாத சர்மா

சுடர் 4 விக்கிரம௵ கார்த்திகை மீ கதிர் 5

டிசம்பர்-1940

அடுத்த பக்கங்களில்

நமது நியாய சபை	—		1
அன்றாட உலகம்	—		7
ஐஸக் நியூடன்	—	"வானசாஸ்திரி"	13
துலாக்கோல்	—		14
சமுதாய ஒப்பந்தம்	—	வெ. சா.	16
பர்மாவில் இந்திய நாகரிகம்	—	சி. நாகையா	18
நாம் என்ன செய்ய வேண்டும்?	—	வி. எம். துரைசாமி	21
அரசாங்க உத்தியோகங்கள் இந்தியாவிலும் மற்ற நாடுகளிலும்		"நாராயணசிவன்"	25
மகான்கள் யார்?	—	வ. பார்த்தசாரதி	31
முக்தார் அகமத் அன்சாரி	—	"ஒரு காங்கிரஸ் வாதி"	33

விவசாயம்	—	"தேசிகன்,"	37
சிலப்பதிகாரம் விதிகாட்டிய வழி	—	மா. சரமா B. A. (Hons)	49
கவி யரர்?	—	பிரேம்சந்த்	57
சாதனை பயில்வாருக்கு	—	"சுவாமி துரியானந்தர்"	58
சில அறிவு மொழிகள்	—		63

"ஜோதி" கிடைக்குமிடங்கள்

1என். மாணிக்கம் பிள்ளை
நியூஸ் ஏஜெண்ட்,
தென்பாதி, சீகாழி.

2 கே. மகாதேவ ஐயர்.
நியூஸ் ஏஜண்ட்,
பேரளம், தஞ்சை ஜில்லா.

3 பாரதி பிக்சர் பாலேஸ்,
கல்லுக் கட்டி, காரைக்குடி.

4 'சக்தி' காரியாலயம்,
5, அரண்மனைக்காரன் தெரு. சென்னை.

5 ஆர். வி. பதிராவ்
நியூஸ் ஏஜண்ட்,
திருநெல்வேலி ஜங்ஷன்

6 தி. ஈசன் பிரிண்டிங் ஒர்க்ஸ்,
48, வடக்கு ஆவணி மூலவீதி, மதுரை.

ஜோதி

சுடர் 4 டிசம்பர்-1940. கதிர் 5

சுலபமா?

உலகத்தில் சரித்திர காலந் தொட்டு அதிகார சக்திக்கும் சுதந்திர சக்திக்கும் எப்பொழுதுமே போராட்டம் நடைபெற்றுக் கொண்டு வந்திருக்கிறது. இந்த இரண்டு சக்திகளுக்குமிடையே எத்தனையோ ரத்த ஆறுகள் ஓடியிருக்கின்றன; எத்தனையோ பிண மலைகள் குவிந்திருக்கின்றன; ஆயினும் இந்தப் போராட்டத்திற்கு ஓய்வு ஏற்படவில்லை. எத்தனையோ பெரிய மனிதர்கள் இந்த இரண்டு சக்திகளையும் சமரஸப் படுத்திவைக்க முயன்றிருக்கிறார்கள்; இன்னமும் முயன்று கொண்டிருக்கிறார்கள். ஆனால் இவர்கள் தங்கள் முயற்சியில் வெற்றிபெறவில்லை. அதுமட்டுமல்ல; உபய கட்சிகளும், இவர்களுக்கு, ஒரு மகானுக்குரிய மதிப்பைக் கொடாமல் அவர்களை அவமதித்திருப்பதோடு கூட, மறந்தும் விட்டிருக்கின்றன. ஏன்? அநேக சந்தர்ப்பங்களில் இவர்களைத் துரோகிகளாகக் கருதித் தூக்குமேடையில் ஏற்றுவித்திருக்கின்றன. பதினெட்டாவது நூற்றாண்டில் உண்டான பிரெஞ்சு புரட்சியைத் தீ மூட்டி வளர்த்ததாகக் கருதப் பெறும் டாண்டனும் (Danton) ரோபெஸ் பியரும் (Robespierre) அதிகார சக்தியைத் தழுவிக்கொள்ள முயன்றதனாலல்லவோ மேற்படி புரட்சித் தீயிலேயே வீழ்த்தப்பட்டு விட்டார்கள்?

ஓய்வு கொள்ளாமல் இந்த இரண்டு சக்திகளும் போராடிக் கொண்டிருப்பதற்குக் காரணந்தானென்ன? ஏதோ காரணம் இருக்கத்தானே வேண்டும்? அஃதென்ன வென்று சிறிது தூவிப் பார்ப்பதில் இன்று நமது சிந்தனையைச் செலுத்துவோமா?

1. அதிகார சக்திக்கு அறிவு நிரம்ப உண்டு; ஆனால் இதயமில்லை. சுதந்திர சக்தியின் இதயம் விசாலமானது; ஆனால் அதன் அறிவு எப்பொழுதுமே தடுமாறி நிற்கிறது.

2. அதிகார சக்தி, தன் அறிவு பலத்தைக் கொண்டு சுதந்திரசக்தியை

அடக்கப் பார்க்கிறது. சுதந்திர சக்தியோ, விசாலமான தனது இருதய ஊற்றிலே அந்த அதிகார சக்தியை ஸ்நானஞ் செய்விப்பதன் மூலமாக அதனை அசைத்துக் கொடுக்கப்பார்க்கிறது.

3. அதிகார சக்தி, ஆயுத பலத்தைத் தன்முன்னே தள்ளிக் கொண்டு முன்னேறப் பார்க்கிறது. சுதந்திர சக்தியோ ஆன்ம பலத்தைத் தன் பக்கத் துணையாகக் கொண்டு சாந்தி கீதத்தைப் பாடிய வண்ணம் உலகத்தை வலம் வருகிறது.

4. அதிகார சக்தி, பிறருடைய துன்பத்தில் தன் இன்பத்தை நுகர்கிறது. சுதந்திர சக்தியோ, தான் துன்பத்தை அநுபவித்து மற்றவர்களுக்கு இன்ப மூட்டுகிறது.

5. அதிகார சக்தியை யாரும் போற்றுகிறார்களில்லை; ஆனால் எல்லோரும் பின்பற்றுகிறார்கள். சுதந்திர சக்தியை எல்லோரும் போற்றுகிறார்கள்; ஆனால் யாரும் பின்பற்றுகிறார்களில்லை.

6. அதிகார சக்தி, கடவுளைத் தன் கருவியாக உபயோகித்துக் கொள்கிறது; சுதந்திர சக்தி, தான் கடவுளின் கருவி யென்று கருதுகிறது.

7. அதிகார சக்தி, ராஜ தந்திர மேடையில் ஏறி அமர்ந்து கொண்டு உலகத்தை ஆளப்பார்க்கிறது; சுதந்திர சக்தியோ சத்திய பீடத்தில் தலை வணங்கி நின்று கொண்டு உலகத்திற்குத் தொண்டு செய்ய முயல்கிறது.

8. அதிகார சக்தி, உலகம் தனக்கு உழைக்கும் பொருட்டு இருக்க வேண்டுமென்று விரும்புகிறது. சுதந்திர சக்தி, உலகத்திற்காகத் தான் உழைத்து, உலகத்தை வாழ்விக்க வேண்டுமென்று ஆசைப்படுகிறது.

இந்த மாதிரியான முரண்பாடுகள் இந்த இரண்டு சக்திகளுக்கும் அடிப்படையிலேயே இருப்பதனால்தான், இவைகளுக்கிடையே ஓயாத போராட்டம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இந்த உண்மையை, சுதந்திரப் போராட்டத்திலே ஈடுபட்டிருக்கிறவர்கள் தெளிவுபட உணர்ந்து கொள்ளுதல் நல்லது.

சுதந்திரம் என்பது ஏதோ ஒரு ஸ்தூல வஸ்து போலவும் அது, மரத்திலிருந்து பழம் பறிப்பது போலச் சுலபமாகப் பறிக்கப்படலாமென்றும் நம்மிலே சிலர் இப்பொழுது கூட நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். இப்படிப்பட்டவர்கள் பாவம், அரசியல் சம்பந்தமான வாதப் பிரதிவாதங்களில் ஆரவாரத்தோடு கலந்தும் கொள்கிறார்கள். இந்த மாதிரியான காட்சிகளைப் பொதுவாக நமது பாரத தேசத்திலும், சிறப்பாகத் தமிழ் நாட்டிலும் அடிக்கடி காண்கிறோம். சுதந்திரம் அவ்வளவு எளிதாகக் கிடைக்கக் கூடிய பொருளாயிருந்தால் அதனை அமிர்தத்திற்கு ஒப்பிட்டிருக்க மாட்டார் பாரதியார். தேவர்கள் லேசாக அமிர்தத்தைத் பெற்றுவிட வில்லை. அசுரர்களுடன் அவர்கள் நடத்திய போர் புராணப் பிரசித்தி பெற்றதல்லவா?

பாற்கடலில் அமிர்த கலசம் தோன்றுவதற்கு முன்னர், தேவர்களுக்கு

எத்தனையோ இடையூறுகள் ஏற்பட்டன; எத்தனையோ பொய்த் தோற்றங்கள் அவர்களுக்குத் தோன்றின; ஆயினும் அவர்கள் சலித்துப்போகவில்லை; தங்கள் லட்சியத்திலேதான் குறியாயிருந்தார்கள். இவ்வளவு சிரமப்பட்ட பிறகுதான் அவர்களுக்கு அமிர்தம் கிடைத்தது. இதனால் அந்த அமிர்தத்திற்கு அதிகமான மதிப்பு ஏற்பட்டிருக்கிறது. சிரமப்பட்டுப் பெறுகிற ஒரு பொருளுக்குத் தான் அதிக மதிப்பு; அதற்குத் தனிப் பெருமையும் உண்டு. சாதாரணமாக மார்க்கெட்டுகளில், கையினால் செய்யப்படுகிற பொருள்களுக்கு விலை அதிகமாயிருப்பதையும், யந்திர சாதனங்களைக் கொண்டு செய்யப்படுகிற பொருள்களுக்கு விலை குறைவாயிருப்பதையும் பார்க்கிறோம். இதற்குக் காரணம் என்ன? கையினால் செய்யப்பட்ட பொருள் என்றால், அது கஷ்டப்பட்டுச் செய்யப் பட்டது என்று தெரிந்து கொள்கிறோம். அதாவது அந்தப் பொருளில் உழைப்புச் சக்தி அதிகம் அடங்கியிருக்கிறது. உழைப்பிலன்றோ உயிர் இருக்கிறது. உயிருக்கு நாம் பெருமை கொடுக்கிறோமா? உடலுக்குப் பெருமை கொடுக்கிறோமா? உயிருக்குத்தானே. கஷ்டப்படாமல் சுதந்திரம் கிடைத்துவிடுவதாயிருந்தால் அஃது உயிரில்லாத உடல் போலத்தான். உயிரில்லாமல் எப்படி உடல் இராதோ அதைப் போல் கஷ்டப்படாமல் சுதந்திரமும் கிடைக்காது. இந்த உண்மையையும் சுதந்திரப் போராட்டத்திலே ஈடுபட்டிருக்கிறவர்கள் உணர்ந்து கொள்ளுதல் நல்லது.

கஷ்டப்படாமல் சுதந்திரம் பெற வேண்டுமென்று நினைப்போர் ஒரு புறமிருக்கட்டும். பிறர் கஷ்டப்பட்டு நமக்குச் சுதந்திரம் சம்பாதித்துக் கொடுத்து விட வேண்டுமென்று கூட நம்மிலே சிலர் நினைக்கிறார்கள். தினசரிப் பத்திரிகைகளை மட்டும் படித்து விட்டுப் பூரண அரசியல் ஞானம் பெற்று விட்டதாகக் கருதிக் கொண்டு அதே தோரணையில் பேசுகின்ற சிலர் என்ன கூறுகிறார்களென்று கேட்டுப் பாருங்கள். “அட, இவ்வளவு சங்கடமான நிலையில் பிரிட்டன் இருக்கிறபோது கூட, இந்தியாவுக்குச் சுயராஜ்யம் கொடுக்க மாட்டேனென்கிறதே என்று நம்மவரிலே எத்தனை பேர் பேசவில்லை? இப்படிப் பேசுகிறவர்கள், பிரிட்டனிடமிருந்து எந்தவிதமான சுயராஜ்யத்தை எதிர்பார்க்கிறார்கள்? அல்லது இந்தியாவுக்கு எந்தவிதமான சுயராஜ்யம் தேவையென்று நிர்ணயித்திருக்கிறார்கள்? அதாவது இப்படிப் பேசுகிறவர்கள், தாங்கள் பேசுவது இன்னதென்று தெரியாமலேயே பேசுகிற கோஷ்டியுடன் தான் சேர்க்கப்பட வேண்டும்.

பிறர் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கையில், அந்தக் கஷ்டத்தை நமக்குச் சாதகமாக உபயோகித்துக் கொள்ள வேண்டுமென்று நினைக்கிற மனப்பான்மை இருக்கிறதே அது நைந்து போன மனப்பான்மை. பிரிட்டனுடைய கஷ்டத்தை நமக்கு நன்மையாக உபயோகித்துக் கொள்ளப் பார்க்கிறோம். நாம் கஷ்டப்பட்டுச் சுதந்திரத்தைச் சம்பாதிக்க வேண்டுமென்ற எண்ணமே நமக்கு இல்லை. மற்றவர்களுடைய உழைப்பிலே ஊதியம் பெறப் பார்ப்பது, பாரத தேச

த்து நாகரிகத்திற்கே விரோதமானது. 'தான் வருந்திப் பிறர்க்குதவும் தயை பிறந்த' நாட்டாராகிய நாம், நாம் உழைத்துச் சம்பாதிக்கிற எண்ணத்தையும் விட்டு விட்டு, பிறருடைய கஷ்டத்தை நமக்கு அநுகூலமாக உபயோகித்துக் கொள்ளப் பார்க்கிறோம். என்ன விந்தை! நாம் எவ்வளவு கீழான நிலைக்கு வந்து விட்டோம்!

சுதந்திரம் சுலபமாகப் பெறப்படுவதுமில்லை; சுலபமாகக் கொடுக்கப்படுவதுமில்லை. ஒரு சிறிய உதாரணத்தை இங்குத் தருகிறோம். கி. பி. பதினைந்தாவது பதினாறாவது நூற்றாண்டுகளில் இத்தலி தேசம், பல பல மாகாணங்களாகப் பிரிந்திருந்தது. ஒவ்வொரு மாகாணத்தையும் தனித்தனிச் சிற்றரசர்கள் சுயேச்சாதிகாரத்துடன் ஆண்டு வந்தனர். இந்தச் சிற்றரசர்களுக்குள் அடிக்கடி போர்கள் நடை பெற்று வந்தன. ஜனங்கள் பலவித இன்னல்களை, யடைந்தார்கள். அவர்களுக்குச் சுதந்திரம் என்றால் இன்னதென்றே தெரியாமலிருந்தார்கள். மேற்படி சிற்றரசர்கள், தங்களுடைய ஆடம்பர வாழ்க்கைக்காக ஜனங்களுடைய பொருளையும் உயிரையும் விளையாட்டுக் கருவிகள் போல் உபயோகித்து வந்தனர். இந்த மாதிரியான நிலைமையில் ப்ளாரென்ஸ் என்ற மாகாணத்தை லோரென்ஸோ—டி—மெடிஷி (Lorenzo-de-Medice) என்பவன் ஆண்டு வந்தான். இவன் தன் சத்துருக்களைத் தேசப் பிரஷ்டம் செய்து அடக்கி விட்டான். தன் குடிஜனங்களை, அடிக்கடி கேளிக்கூத்துகள் நடத்தித் திருப்தி செய்வித்தான். ஜனங்களோ இவன் மீது விரோதங் கொள்ளாதபடி தங்கள் கவனத்தை வீணான பொழுது போக்குகளில் செலுத்தினர். இந்தச் சமயத்தில் ஸவோனரோலா (Savonarola) என்ற ஒரு மகான் தோன்றி, ஜனங்களுக்கு நற்போதனைகள் செய்ய ஆரம்பித்தான். அவர்களுடைய சுதந்திரம் பறிக்கப் பட்டிருப்பதையும், அது காரணமாக அவர்களுடைய வாழ்க்கை நிலை கீழாகப் போயிருப்பதையும் தெளிவாக எடுத்துக் காட்டினான். இவையெல்லாம் லோரென்ஸோவுக்குப் பிடிக்கவில்லை; எப்படி பிடிக்கும்! ஸவோனரோலாவை நயத்தினாலும் பயத்தினாலும் தன் பக்கம் திருப்பப் பார்த்தான். முடிகிற காரியமா? இப்படியிருக்கிற போது, லோரென்ஸோவுக்கு நோய் கண்டது. மரணப் படுக்கையில் கிடந்தான். வைத்தியர்கள் யாரும் அவனை சொஸ்தப்படுத்த முடியவில்லை. கடைசியில் கடவுளின் துணையை நாடினான். தனக்குப் பாவ மன்னிப்பு அளிக்குமாறு செய்ய ஸவோனரோலாவை அழைத்துவருமாறு ஏவினான். அந்த புனித ஆத்மாவான ஸவோனரோலாவும், கல்மஷ மற்ற மனதுடன் லோரென்ஸோவிடம் வந்து அவனுக்குச் சில இதோப தேசங்கள் செய்து விட்டுப் பிறகு 'லோரென்ஸோ' நீ மூன்று காரியங்களைச் செயய வேண்டும்' என்றான். 'ஐயனே, அவையென்ன' என்றான் லோரென்ஸோ. 'முதலாவது, கடவுளின் திருக்கருணையில் நீ பூரண நம்பிக்கை கொள்ள வேண்டும்.' 'அம்மெதனக்குப் பூரணமாக இருக்கிறது' என்று உடனே கூறி விட்டான் லோரென்ஸோ. 'இரண்டாவது, நீ அநியாயமாகப் பிறரி

டமிருந்து பறிமுதல் செய்து கொண்ட சொத்துக்களை உரியவர்களிடம் சேர்ப்பித்து விடுமாறு செய்ய வேண்டும்' என்றான் ஸவோனரோலா. இது லோரென்ஸோவுக்கு ஆச்சரியத்தையும் துக்கத்தையும் கொடுத்தது. ஆயினும், தன்னைச் சிறிது சமாளித்துக் கொண்டு 'அப்படியே ஆகட்டும்' என்ற பாவனையில் தலையசைத்தான். 'மூன்றாவது, ப்ளாரென்ஸ் ஜனங்களுக்கு நீ சுதந்திரம் அளிக்க வேண்டும்' என்று கம்பீரமாகக் கூறினான் ஸவோனரோலா. இதைக் கேட்ட லோரென்ஸோ வெறுப்பும் சலிப்பும் கொண்டவனாய் முகத்தை மறு பக்கம் திருப்பிக் கொண்டு விட்டான்; அப்படியே பிராணனையும் விட்டு விட்டான். ஸவோனரோலாவும் அவனுக்குப் பாவ மன்னிப்புக் கொடாமலே திரும்பி விட்டான். சுதந்திரமானது ஜனங்களிடமிருந்து பறிக்கப்பட்டு, பின்னர் அதிகாரமாக இறுக்கி வைத்துக் கொள்ளப்படுகிறது. அந்த அதிகாரத்தை விட்டுக் கொடுக்க யாருமே, எப்பொழுதுமே சம்மதிக்க மாட்டார்கள். மரணப் படுக்கையிலே கூடத்தான்! ஆனால் இதற்காக, சுதந்திர தேவதையை ஆராதிக்கிறவர்கள், தங்கள் ஆராதனையை நிறுத்துவார்களா? தங்கள் முயற்சியில் சலிப்புக் கொள்வார்களா? மாட்டார்கள். சுதந்திரத்திற்காகத் துன்பம் அநுபவிப்பதையே ஓர் இன்பமாக இவர்கள் கொண்டு விடுகிறார்கள். ஏனென்றால், தாங்கள் அநுபவிக்கிற துன்பம் தங்களுக்காக வல்ல; சுதந்திரத்திற்காக என்பதை இவர்கள் தெரிந்து கொண்டு விடுகிறார்கள். சுதந்திரந்தான் இவர்கள் லட்சியம்; மற்றவையெல்லாம் வழிப் பிரயாணந்தான். நடை வழியில் எத்தனையோ கல்லும் முள்ளும் தட்டுப்படுவது சகஜந்தானே. அவைகளைக் கண்டு கோபித்துக்கொண்டிருந்தால் மேலே நடக்க முடியுமா? இந்த உண்மையையும், சுதந்திரத்திற்காகப் போராடுகிறவர்கள் தெரிந்து கொள்ளுதல் நல்லது.

இவ்வளவெல்லாம் கூறிய நாம் சுதந்திரம் என்றால் என்னவென்பதைத் தெரிவிக்க வேண்டாமா? சுதந்திரம் என்றால் என்னவென்பதைப் பற்றி வியாக்கியானஞ் செய்து அறிஞர்கள் பலர் எழுதியிருக்கிறார்கள். இவர்களிற் பெரும்பாலோர் சுதந்திரத்தை, ஒரு தத்துவமாக விளக்கிக் காட்டியிருக்கிறார்கள். ஆனால் ஒரு சிலர், தங்கள் சுதந்திர எண்ணத்தை அநுஷ்டான பூர்வமாகக் கொண்டு வந்து காட்டியிருக்கின்றனர். இவர்களில் ஒருவனும், அமெரிக்கக் குடியரசின் பதினாறாவது பிரஸிடெண்டாயிருந்தவனுமான அப்ரஹாம் லிங்கன் (Abraham Lincohn) என்பவன், சுதந்திரத்தைப் பின் வரும் வாசகத்தால் விவரிக்கிறான்:—

தனிப்பட்ட மனிதன் ஒவ்வொருவனும், தன்னிஷ்டப்படி காரியங்களைச் செய்யவும், தன் உழைப்பின்பலனை அநுபவிக்கவும் உரிமையுடையவனாயிருக்க வேண்டும். ஆனால் அவன் அப்படி காரியங்களைச் செய்வதும், உழைப்பின் பலனை அநுபவிப்பதும், மற்றவர்களுடைய உரிமைகளுக்குப் பாதகமில்லாமல் இருக்க வேண்டும். இப்படியே ஒவ்வொரு சமுதாயமும், ராஜ்யம் என்ற தோரணை

> யில், மற்றொரு ராஜ்யத்தின் உரிமைகளில் தலையிடாதபடி, தன்னிஷ்டப் பிரகாரம் காரியங்களைச் செய்யும் உரிமை பெற வேண்டும். இப்படியே ஒரு பொது அரசாங்கமானது, பொதுவாக எல்லாரையும் பாதிக்கக் கூடிய விஷயங்களில் தலையிடலாமே தவிர, ஜனங்களுடைய மற்ற விஷயங்களில் தலையிடக் கூடாது.

இதைவிடச் சுருக்கமாக சுதந்திரத்தைப்பற்றி வேறு யாரும் கூறியிருக்க முடியாது.

இந்தச் சுதந்திரத்தைப் பற்றி நாம் நினைக்கிறபோது, நமது தாய்நாட்டைப்பற்றியும் நினைக்காமலிருக்க முடியவில்லை. அப்படி நினைக்கிறபோது மகாகவி தாந்தே, (Dante) இத்தலியைப்பற்றிப் பாடிய சில அடிகள் நமது ஞாபகத்திற்கு வருகின்றன.

> ஹா! அடிமை இத்தலியே? துயரத்தின் தாயகமே! மாலுமியில்லாமல் புயற்காற்றில் அகப்பட்டுக்கொண்டு தத்தளிக்கின்ற கப்பலே! நீ மாகாணங்களின் தாயாயில்லை; விபசார விடுதியின் பெண்ணாயிருக்கின்றாய்!

மந்திரிகள்—கைதிகள்!

இந்தியாவில் அடக்கு முறைக் காற்று கொஞ்சம் வேகமாகவே வீசத் தொடங்கியிருக்கிறது. மாஜி மந்திரிகளில் பெரும்பாலோர் இப்பொழுது சிறைக்கோயிலில் தவங்கிடக்கிறார்கள். இந்தச் சம்பவங்கள் நமக்கு எவ்வித ஆச்சரியத்தையும் கொடுக்கவில்லை. ஆனால் இரண்டு சந்தேகங்கள் மட்டும் நமக்கு உதிக்கின்றன.

1. காங்கிரஸ் கட்சியினர், அதிகாரமில்லாமல் பதவி யேற்றுக்கொண்டதற்குப் பிராயச்சித்தமாக இந்தச் சிறைவாசமா?

2. பொதுவாக தேசத்தில் அமைதிநிலவியிருக்கிற ஒரு சமயத்தில் பொறுப்புள்ள மந்திரிப்பதவிகளை ஏற்றுக்கொண்டிருந்தவர்கள் இங்ஙனம் சிறையில் வைக்கப்படுவதை வேறெந்த நாட்டிலேனும் காணமுடியுமா?

இவர் யார்?

சமீபத்தில் நாம் இத்தாலிய இதிகாசமொன்றைப் படித்துக்கொண்டிருந்தோம். அதில் பின்வரும் வாசகம் காணப்படுகிறது:—

> கி. பி. பதின்மூன்றாவது நூற்றாண்டில், இத்தாலியர்களிடையே ஒரு நம்பிக்கை ஏற்பட்டிருந்தது. அதென்னவென்றால் ஆசியா கண்டத்தை ஆள்கின்ற ஓர் அரசன் தோன்றுவான். அவன் கிறிஸ்துவ தர்மத்தைப் பாராட்டுகிறவன்; இயற்கை வாழ்வு நடத்துகிறவன்; தங்கத்திலோ வெள்ளியிலோ அவனுக்கு ஆசையில்லை; குடிசைகள் நிரம்பிய நாட்டிலே அவன் பிறந்தவன். அவன் ஒரு காலத்தில் மேனாட்டை அடக்கியாள்வான். சிறு கொடுங்கோலர்களை அழிப்பான். அமைதி நிலவும் சர்வலோக சாம்ராஜ்யமொன்றை ஸ்தாபிப்பான்.

இப்படிப்பட்ட மகான் யாரோ தெரியவில்லையே. கிறிஸ்துவுக்குப்பின் காந்தியா?



1940

நவம்பர்

1 டார்டனல்லை ஜெர்மனி தாக்குவதாயிருந்தால் துருக்கிக்கு ருஷ்யா உதவி செய்யுமெனக் கூறுவது பொருந்தாதென்றும் அதைப்பற்றிய சிரத்தையே ருஷ்யாவுக்கில்லையென தெரிவதாகவும் அங்கோரா செய்தி கூறுகிறது.

அல்பேனியாத் துறைமுகங்களிலும், தலைநகர்மீதும் பிரிட்டிஷ் விமானங்கள் பலமாகத் தாக்கின. அல்பேனியா இத்தாலி வசமுள்ள நாடு.

கிரீஸில் இத்தாலியப் படையின் முன்னேற்றம் தடைப்படவில்லையென்றும், காலநிலைமை ஒத்ததாக இல்லாதிருந்தாலும் இத்தாலியர்கள், விரோதிகளையெதிர்த்து வருவதாகவும் ரோம் செய்தி கூறுகிறது.

ஜெர்மன் வர்த்தகப் பிரதிநிதிகள் இன்று மாஸ்கோ போய்ச் சேர்ந்தனர்.

துருக்கி தேசிய சபையில் இன்று தலைவர் இனோனு ஒரு அறிக்கை வெளியிட்டார். அதில், துருக்கியும் பிரிட்டனும், பால்கன் நாடுகளின் நிலைமையைக் கவனித்து வருவதாகவும், ருஷ்யாவுக்கும் துருக்கிக்குமிடையில் சிநேகபாவமான முறை திரும்பி வருவதாகவும் தெரிவித்தார்.

2 இந்தியக் கடற்படைக்கென்று தயாரிக்கப்பட்டுள்ள பீரங்கிக் கப்பலொன்றுக்கு இன்று, இந்தியா மந்திரி அமெரி நாமகரணம் செய்து பேசியபோது, இப்போது நடக்கும் போராட்டம் சாம்ராஜ்யமுழுவதிலும் நடக்கப்போகும் போராட்டத்திற்கு பூர்வ பீடிகையாகும் எனக் குறிப்பிட்டார்,

21 வயதிலிருந்து 40 வயதுக்குட்பட்டவர்களில் இதுவரை ராணுவப்பயிற்சி பெறாதவர்கள், உடனே ராணுவப்பயிற்சி துவக்க முன்வர வேண்டுமென துருக்கி சர்க்கார் உதரவிட்டிருக்கிறது.

3 லண்டனிலும், மாகாணங்களிலும் இன்னும் விசேஷமான பாதுகாப்பு அறைகள் ஆழத்தில் கட்டப்படும் என உள்நாட்டுப் பாதுகாப்பு இலாகா மந்திரி தெரிவித்தார்.

இன்று சென்னையில், ஸ்ரீமான் ராஜகோபாலாச்சாரியார் ஒரு கூட்டத்தில் பேசுகையில், கலவரப்படாமல் தேசத்தின் நன்மையில் கவனம் செலுத்தி யாவரும் வேலை செய்ய வேண்டும் எனக் குறிப்பிட்டார்

கோரக்பூர் ஜில்லா ஜெயிலில் இன்று பண்டித ஜவஹருடைய வழக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு மூன்றுமணி நேரம் விசாரணை நடந்தது. பண்டிதர், எழுத்து மூலம் ஒரு ஸ்டேட்மெண்ட் தாக்கல் செய்ததைத்தவிர விசாரணையில் கலந்து கொள்ளவில்லை. இந்திய வில் சட்டப்படி ஸ்தாபிக்கப் படடிருப்பதாகச் சொல்

லப் படும் கவர்ன்மெண்டு விஷயத்திலும் இராஜப் பிரதிநிதி விஷயத்திலும் துவேஷம் வளர பிரசாரம் செய்வது தமது கடமையும் உரிமையும் ஆகும் என்றார்.

4 கிரேக்க சர்க்காருக்கு லண்டனி லிருந்து 2 கோடி பவுன்வரை பண உதவி கிடைத்திருக்கிறதாம்.

ஜெர்மனியும் இத்தாலியும் அரசியல் ராணுவத் துறையில் தற்போது எய்தியுள்ள நிலைமையை முன்னிட்டு தங்களுடைய எதிரிகளுக்கு எந்த விதமான சமாதான யோசனையும் விடுவிக்கக் காரணமில்லையென ஜெர்மன் சர்க்கார் ஒரு அறிக்கை விட்டிருக்கிறார்கள்.

சென்னைக் கார்ப்பரேஷன் மேயராக இன்று ஸ்ரீமான் ஸி. பாசுதேவ் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

5 பிரிட்டிஷ் பிரதம மந்திரி மிஸ்டர் சர்ச்சில் இன்று பார்லிமெண்டில் பேசுகையில், நாம் கிரீசுக்கு நம்மாலானவரை உதவி செய்வோம். இவ்வார்த்தையை மிகவும் தாராளமான முறையில் பொருள் படுத்திக் கொள்ளவேண்டும் என்று குறிப்பிட்டதோடு, எதிரிகளின் குண்டுவீச்சால் இதுவரை 14000 பேர் உயிரிழந்தும் 20000 பேர் பலத்த காயமடைந்தும் போயிருக்கின்றனர். அவர்களிற் பெரும்பாலோர் லண்டன் வாசிகளே. நமது நாசகாரிகளும் விமானங்களும் பெட்ரோல் நிரப்பிக்கொள்ள அயர்லாந்தின் தெற்கு மேற்குக் கரைகளை உபயோகித்துக் கொள்ள நமக்கு வசதியில்லாதிருப்பது வருந்தத் தக்கது என்றும் கூறினார்.

பண்டித ஜவஹர்லால் நேருவுக்கு இன்று நான்குவருஷக் கடினகாவல் தண்டனை விதிக்கப்பட்டது.

புதியடில்லியில் இந்தியா சட்டசபையின் கூட்டம் இன்று ஆரம்பிக்கப் பட்டது.

காங்கிரஸ் காரியக்கமிட்டிக் கூட்டம் இன்று வார்தாவில் கூடியிருக்கிறது.

சோவியத் சர்க்கார் நடுநிலைமைக் கொள்கையையே கையாண்டு வருமென்றும், தனது பாதுகாப்பு அரண்களை அது பலப்படுத்திக் கொண்டிருப்பதாகவும் ருஷ்யசர்க்காரின் பத்திரிகையான பிரவ்டா கூறுகிறது.

6 கிரேக்க சர்க்காருடைய வேண்டுகோளுக் கிணங்க பிரிட்டிஷ் சர்க்கார் 50லட்சம் பவுன் கடன்கொடுத்து உதவியிருக்கின்றனர்.

லண்டனிலுள்ள ஜப்பானிய ஸ்தானிகர் இன்று ஜப்பானுக்குப் புறப்படும் கப்பலில் பிரயாணமானார்.

இந்திய சர்க்கார், யுத்தச் செலவுக்கு ஈடுசெய்ய புதியவரி மசோதா கொண்டுவந்திருப்பதால் அதை எதிர்ப்பதற்காக மத்திய சட்டசபைக் கூட்டத்திற்கு காங்கிரஸ் அங்கத்தினர்கள் செல்ல வேண்டுமென காங்கிரஸ் காரியக்கமிட்டி தீர்மானித்திருக்கிறது.

இந்திய மத்திய சட்டசபைக்குத் தெரிந்தெடுக்கப் பட்டிருக்கும் ஸ்ரீமான் சுபாஷ் சந்திரபோஸ் காவலில் இருப்பதால், அவர் இச்சபைக்கு வர வசதியளிக்க வேண்டுமென்று இன்றைய மத்திய அசெம்பிளியில கொண்டுவரப்பட்ட அவசரத் தீர்மானம் தலைவரால் அங்கீகரிக்கப் படவில்லை.

அமெரிக்கத் தலைவர் தேர்தல் நடைபெற்றதில் மூன்றாவது முறையாக மிஸ்டர் ரூஸ்வெல்ட் தலைவராகத் தேர்ந்தெடுக்கப் பட்டார்.

7 சத்தியாக்கிரகத்தின் இரண்டாவது நபராக காந்திஜியின் ஆசிரமத்தைச் சேர்ந்த ஸ்ரீபிரம்ம தத்தராய் நிர்மல் என்பவர் நியமிக்கப் பட்டு அவர் சத்தியாக்கிரகம் செய்வதற்காக சேவாக்கிராமத்தி லிருந்து புறப்பட்டு கைதுசெய்யப் பட்டார்.

இன்று லண்டன் காமன்ஸ் சபையில் வழக்கம்போல பண்டித ஜவஹருக்கு நான்கு வருஷக் கடினகாவல் தண்டனை கொடுத்திருப்பது பற்றிக் கேள்விகள்

கேட்கப் பட்டன. இந்தியா மந்திரி பதிலளித்தார்.

சீனாவில், தாங்கள் ஆக்கிரமித்திருக்கும் பிரதேசங்களிலிருந்து மேலும் ஜப்பானியப் படைகள் பின்வாங்குமென சுங்கிங் செய்தி கூறுகிறது.

மிஸ்டர் திவேலரா இன்று ஐரிஷ் பார்லிமெண்டில் பேசுகையில், நம்முடைய துறைமுகங்களை அந்நியருக்குக் கொடுப்பதென்பது முடியாத காரியம். யுத்தத்தில் ஈடுபட்டிருக்கும் எந்தத் தேசமும் நம்முடைய துறைமுகங்களைக் கைப்பற்ற முயலுமாயின் நாம் தீவிரமாக எதிர்ப்போம். நடுநிலைமை வகிப்பதே நமது திட்டம் எனக் குறிப்பிட்டார்.

தனிப்பட்டவர்களின் சத்தியாக்கிரகம் விஸ்தரிக்கப் பட்டிருப்பதால் தம்முடைய உபவாச யோசனையை நிறுத்தி வைத்திருப்பதாய் காந்திஜி ஒரு அறிக்கை விட்டிருக்கிறார்.

ருஷ்யப் புரட்சியின் 23வது வருஷவிழா இன்று ருஷ்யாவில் கொண்டாடப் பட்டபோது பாதுகாப்பு மந்திரி பேசுகையில் உலகநிலைமை மிக நெருக்கடியாக இருக்கிறது. பல ஆச்சர்யப் படத்தக்க சம்பவங்கள் திடீரென நிகழலாம் எனக் கூறினார்.

8 சமீபத்தில் நடைபெற்ற ஜெர்மன் குண்டு வீச்சால் "டவர் ஆப் லண்டன்" என்று அழைக்கப்பெறும் சரித்திரப் பிரசித்தி பெற்ற லண்டன் கோபுரம் சேதப்பட்டு விட்டதாய்ச் சொல்லப் படுகிறது.

சென்னையில், ஸ்ரீமான் எஸ். ஸ்ரீனிவாசய்யங்கார் ஒரு கூட்டத்தில் பேசுகையில் தெருக்களைச் சுத்தம் செய்வதால் மட்டும் நகரத்தை அழகுபடுத்தி விடமுடியாது. தரித்திரமும் பிணியும் இருக்கும்வரை நகரம் சுத்தமாகாது. பக்கிரிகள் தேசவிடுதலையைச் சம்பாதிக்க முடியாது எனக் கூறினார்.

9 காலேஜ் மாணவர்கள் ஆர்ப்பாட்டங்களில் கலந்து கொண்டால் அவர்களுக்கு சர்க்கார் உத்தியோகம் கொடுக்கப்பட மாட்டாதென சென்னை சர்க்கார் ஒரு அறிக்கை விட்டிருக்கிறார்கள்.

பிரிட்டிஷ் மாஜி பிரதம மந்திரி மிஸ்டர் நெவில் சேம்பர்லேன் இன்று மாலை தமது கிராமாந்தர வாசஸ்தலத்தில் காலமானார்.

10 ஹரிஜன் பத்திரிகையை நிறுத்திவிட நேர்ந்து விட்டது பற்றி காந்திஜி ஒரு அறிக்கை விட்டிருக்கிறார்.

இன்று பத்திரிகை ஆசிரியர்களின் மஹாநாடு சென்னை ஹிந்து பத்திரிகையின் ஆசிரியர் ஸ்ரீமான் கே. ஸ்ரீனிவாசன் தலைமையில் டில்லியில் ஆரம்பமாகியது. பத்திரிகைகளுக்குச் சில நிர்ப்பந்தங்களை விதித்து சர்க்கார் பிறப்பித்த உத்திரவின் காரணமாகவே இம் மகாநாடு கூட்டப் பட்டது.

இந்தியாவில், பத்திரிகைகளின் மீது சில நிர்பந்தங்களை விதித்துப் போட்ட உத்திரவை சர்க்கார் வாபஸ் வாங்கிக் கொண்டதாய்த் தெரிவித்திருக்கின்றனர். மாகாணங்களிலும், மத்தியிலும் பத்திரிகைப் பிரதிநிதிகளடங்கிய ஆலோசனைக் கமிட்டிகள் நியமிக்கப் படுமாம்.

துருக்கியின் தலைவரும் தந்தையுமாயிருந்த கமால் அத்தாதுர்க்கின் வருஷாப்திக தினம் இன்று இஸ்தாம்பூலில் கொண்டாடப் பட்டது.

கோயம்புத்தூர்ஜில்லா அரசியல் மகாநாடு இன்று பல்லடத்தில் டாக்டர் டி. எஸ். எஸ். ராஜன் தலைமையில் நடைபெற்றது. ஸ்ரீமான் ராஜகோபாலச்சாரியர் மேற்படி மகாநாட்டைத் திறந்து வைத்தார்.

11 ருஷ்யாவின் பிரதம மந்திரியும் அந்நிய நாட்டு மந்திரியுமான மிஸ்டர் மொலடவ் இன்று பெர்லினுக்குப் பிரயாணமானார்.

இன்று இரவு எதிரி விமானங்கள் சூயஸ் கால்வாய் பகுதியில் குண்டுகளை போட்டதாகவும், கெய்ரோவுக்கு அருகி

ளுள்ள ஒரு தோட்டத்தின் மீதும் சில குண்டுகள் விழுந்ததாகவும் எகிப்து யுத்த இலாகா அறிக்கை கூறுகிறது.

இந்திய சட்டசபையின் இன்றையக் கூட்டத்தில் வரிமசோதா சம்பந்தமான விவாதம் ஆரம்பமாகியது. காங்கிரஸ் அங்கத்தினர்கள் இதில் கலந்து கொண்டனர்.

12 ருஷ்யப் பிரதம மந்திரியும் வெளிநாட்டு மந்திரியுமான மிஸ்டர் மொலடவ் இன்று பெர்லினுக்கு வந்து சேர்ந்தார் வான் ரிப்பன்ட்ராப், ஜெனரல் கீடல் முதலியோர் ஸ்டேஷனில் அவரை வரவேற்றனர். மொலடோவும் ஹிட்லரும் சந்தித்துப் பேசினர்.

13 இன்று ஹிட்லர், மிஸ்டர் மொலடொவுக்கு ஒரு விருந்து நடத்தினார்.

ஆஸ்திரேலியக் கடற்கரை யருகில் ஜெர்மன் யுத்தக் கப்பலகள் இருப்பதாகவும் இவற்றைக் கண்டுபிடிக்கத் தீவிர முயற்சி யெடுக்கப்படுமெனறும் ஆஸ்திரேலியக் கடற்படை மந்திரி அறிவித்தார்.

சத்தியாக்கிரக இயக்கம் விரிவு படுத்தப் பட்டிருக்கிறதை அனுசரித்து சத்தியாக்கிரகம் செய்ய 1500பேர் கொண்ட ஜாப்தா ஒன்றைக் காந்திஜி தயாரித்திருப்பதாகத் தெரிகிறது.

14 ருஷ்யப் பிரதம மந்திரி மாலடொவ் இன்று பெர்லினிருந்து மாஸ்கோவுக்குப் பயணமானார்.

ஜவஹர் கைது செய்யப்பட்டதைக் கண்டித்து சென்னை, ஐக்கிய மாகாணக் காலேஜ் மாணவர்கள் நடத்திய ஆர்ப்பாட்ட சம்பந்தமாய் காந்திஜி ஒரு அறிக்கை விட்டிருக்கிறார்.

பண்டித ஜவஹர்லாலின் பிறந்தினம் இன்று பல இடங்களில் கொண்டாடப் பட்டது.

15 பீஹார் கலால் சட்டப்படி பிறப்பித்த மதுவிலக்கு அறிக்கை செல்லாது என இன்று பாட்னா ஐகோர்ட்டு ஸ்பெஷல் பெஞ்சில் தீர்ப்புக் கூறப்பட்டது. காங்கிரஸ் மந்திரிகளால் இந்த உத்திரவு 1938 ஏப்ரல் மாதம் போடப்பட்டதாகும்.

லண்டனில் எதிரிகளுடைய விமானத் தாக்குதல் கொஞ்சம் பலமாக இருந்ததாய்ச் சொல்லப்படுகிறது.

16 லண்டனில் எதிரிகளின் விமானத் தாக்குதல் கொஞ்சம் பலமாக இருந்தது. சேதமும் ஏற்பட்டதாய்த் தெரிகிறது.

17 இன்று சத்தியாக்கிரகம் செய்த பிரிஜ்லால் பியாணி கைது செய்யப்பட்டார்.

வங்க மாகாணப் பிரதம மந்திரி பஸ்லுல் ஹக் இன்று, ஐக்கிய மாகாண முஸ்லிம் மாணவர் மகாநாட்டை ஆரம்பித்து வைத்துப் பேசுகையில், எங்களுக்கு மற்ற எல்லாவற்றையும்விட இஸ்லாமே பெரிது என்று கூறினார்.

இன்று சர்தார் படேல் கைது செய்யப்பட்டார்.

18 இத்தலியின் வெளிநாட்டு மந்திரி சியானோவும், ஸ்பெயின் வெளிநாட்டு மந்திரி ஸூனரும் இன்று ஹிட்லரைப் பேட்டி கண்டு பேசினார்.

ஜப்பானியப் படைகள் நானிங் பகுதியிலிருந்து வரவழைக்கப் பட்டனவேதவிர சீனப் படைகளால் துரத்தி யடிக்கப் படவில்லை யென்று ஜப்பானிய சர்க்கார் அறிக்கை கூறுகிறது.

பல்கேரியா மன்னர் இன்று ஹிட்லரைக் கண்டு பேசினார்.

கல்கத்தா ஸ்டேட்ஸ்மன் பத்திரிகை ஆசிரியர் மிஸ்டர் ஆர்தர் மூர் இன்று சேவாக் கிராமத்தில் காந்திஜியைக் கண்டுபேசினார்.

19 இந்தியா சட்டசபையின் இன்றைய கூட்டத்தில் வரி மசோதாவை ஆலோசனைக் கெடுத்துக் கொள்ள வேண்டுமென்ற பிரேரணை தோற்றுப் போயிற்று.

பிரெஞ்சு இந்தோ-சீனாவுக்கும் தெய்லந்துக்கும் அந் நாடுகளின் எல்லையில் யுத்தம் மூண்டிருப்பதாய்த் தெரிகிறது.

இனிமேல் புதிதாக பிரான்சில் ஏற்படுத்தப் போகும் அரசியலைப் பற்றி இன்று மார்ஷல் பேடன் பேசினார்.

20 டில்லியில் ராஜாங்கசபை, இந்திய சட்டசபை இவற்றின ஐக்கியக் கூட்டத்தில் இன்று வைசிராய் பேசினார்

டாக்டர் டி. எஸ். எஸ். ராஜன் இன்று திருச்சியில் கைது செய்யப்பட்டார்.

21 பார்லிமெண்ட் பருவக் கூட்டத்தைக் கலைக்கும் முறையில் மா. த. மன்னர் பிரான் பிரசங்கம் லார்டு சபையில் வாசிக்கப்பெற்றது.

பிரிட்டிஷ் பிரதம மந்திரி வெளி நாட்டு மந்திரி, இந்தியா மந்திரி முதலியவர்கள் தற்போதைய யுத்த நிலையைப்பற்றி சொற்பொழிவுகள் மூலமாகவும், அறிக்கைகள் மூலமாகவும் விஷயங்களைத் தெரிவித்தார்கள்.

பெஷாவரில் கடுமையான பூகம்பம் ஏற்பட்டது.

இந்திய பாதுகாப்பு சட்டத்தின்கீழ் மத்திய மாகாண மாஜி பிரதம மந்திரி பண்டித ரவி சங்கர் சுக்லா, மாஜி கல்வி மந்திரி ஸ்ரீ. எஸ். வி. கோக்கேல், மாஜி மந்திரி ஸ்ரீ ஸி. ஜே. பருக்கா, பம்பாய் மாஜி பிரதம மந்திரி ஸ்ரீ பி ஜி. கெர், மாஜி ரெவின்யூ மந்திரி ஸ்ரீ மொரார்ஜி தேசாய், ஐக்கிய மாகாண ஜனப்பிரதிநிதி சபைத் தலைவர் ஸ்ரீ புருஷோத்தமதாஸ் தாண்டன், சென்னை ஜனப் பிரதிநிதி சபையின் உபதலைவி ஸ்ரீமதி ருக்குமணி லக்ஷ்மிபதி, 'மாதுர்பூமி' ஆசிரியை ஸ்ரீமதி ஓக் முதலியவர்கள் கைது செய்யப்பெற்றனர்.

இந்திய நிதி மசோதா மே. த. வைஸ்ராயால் சர்டிபை செய்யப்பெற்று ஸ்டேட் கவுன்சிலுக்கு அனுப்பிவைக்கப்பெற்றது.

22 ஜெர்மனி சென்றிருந்த ஸ்பெயின் வெளிநாட்டு மந்திரி ஸினர் சூனர் ஸ்பெயின் திரும்பினார்.

இந்தியப் பாதுகாப்பு சட்டத்தின்கீழ் மத்திய மாகாண மாஜி மந்திரி பண்டிட் துவாரக பிரசாத் மிஸ்ரா, பம்பாய் மாஜி மந்திரி ஸ்ரீ எல். எம். படேல் முதலியவர்கள் கைது செய்யப்பெற்றனர்.

இந்தியாவில் ஆகாயவிமானம் செய்வதற்கு நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ள வேண்டுமென்று சிபார்சு செய்த பண்டித குன்ஸ்ருவின் தீர்மானம் டில்லி ராஜாங்க சபையில் ஏகமனதாய் நிறைவேறியது.

23 ஜெர்மனி, இத்தாலி, ஜப்பான் ஆகிய அச்சு நாடுகள் ஒப்பந்தத்தில் ருமேனியா சேர்ந்துகொண்டது.

பிரிட்டிஷ் யுத்த தேவைகளைப்பற்றி அமெரிக்காவிலுள்ள பிரிட்டிஷ் ஸ்தானிகர் லார்டு லோதியன் ஓர் அறிக்கை வெளியிட்டிருக்கிறார்.

24 இந்திய பாதுகாப்பு சட்டத்தின்கீழ் ஐக்கிய மாகாண மாஜி பிரதம மந்திரி பண்டித கோவிந்த வல்லப பந்த், ஸ்ரீமதி மணிபென் படேல் முதலியோர் கைது செய்யப்பெற்றனர்.

பூஜ்ய போப்பாண்டவர் உலக சமாதானத்தை முன்னிட்டு ஆண்டவனை நோக்கி ஒரு வாரம் உண்ணாவிரதமிருக்கப்போவதாக ஓர் செய்தி கூறுகிறது.

25 புதிய டில்லியில் கூடிய யுத்த சப்ளை மகாநாடு முடிவடைந்தது.

சிந்து மாகாணத்தில் ஹிந்து-முஸ்லீம் ஒற்றுமையை நிலைநாட்டுவதற்கு ஹிந்து-முஸ்லீம் சமரச போர்டு நியமிக்கப் பெறும் என்று ராஷ்டிரபதி தெரிவிக்கிறார்.

26 சைனா-ஜப்பான் போராட்டத்தில் ஜப்பான் ஓர் புதிய முறையைக் கையாளப்போவதாக ஓர் செய்தி கூறுகிறது.

இந்தியாவில் 'நாஷனல் ஹெரால்டு' பத்திரிகையிடம் 3000 ரூபாய் செக்யூரிட்டி கேட்கப்பெற்றிருக்கிறது.

இந்திய பாதுகாப்பு சட்டத்தின்கீழ் ஐக்கிய மாகாண மாஜி நீதி மந்திரி டாக்டர் கைலாஸ் நாத் கட்ஜு, சென்னை மாகாண மாஜி ரெவின்யூ மந்திரி ஸ்ரீ டி. பிரகாசம் மாஜி மந்திரி ஸ்ரீ கோபால்ரெட்டி முதலியவர்கள் கைதுசெய்யப்பெற்றனர்.

மகாத்மா காந்திக்கு ரத்தக்கொதிப்பு ஏற்பட்டிருக்கிறது.

27 பர்மாவில் ஊ-சோ மந்திரி சபையில் ஊ-பா-ஈன் கல்வி மந்திரியாக நியமனம் செய்யப்பெற்றார்.

இந்து மகா சமுத்திரத்தில போர்ட் பிரின்பேன் எனும் பிரிட்டிஷ் கப்பல்,

நாஜி ரெய்டரால் மூழ்கடிக்கப்பெற்றதென அறிவிக்கப்பெறுகிறது.

மத்திய தரைக் கடலில் கடல் போராட்டம் நடைபெற்றது.

ருமேனியாவில் மாஜி பிரதம மந்திரி முதலியோர் சுட்டுக்கொல்லப்பட்டனர்.

இந்திய பாதுகாப்பு சட்டத்தின்கீழ் பிஹார் மாகாண மாஜி பிரதம மந்திரி ஸ்ரீ கிருஷ்ண சின்ஹா, பம்பாய் ஜனப் பிரதிநிதி சபைத்தலைவர் ஸ்ரீ ஜி. வி. மவலாங்கர், சென்னை மாகாணத்தில் ஸ்ரீ கிருஷ்ணசுவாமி பாரதி, ஸ்ரீ கே. வரதாச்சாரி முதலியோர் கைது செய்யப் பெற்றனர்,

மகாத்மா காந்தி குணமடைந்திருப்பதாக அறிவிக்கப்பெறுகின்றது.

இந்திய மத்திய அசெம்பிளியின் அதிக லாபவரி மசோதா நிறைவேறியது பிறகு அசெம்பிளியின் இப் பருவக்கூட்டம் ஒத்திவைக்கப்பெற்றது.

28 இந்தியாவில் நடைபெற்ற கிழக்குதேசங்கள் மகாநாட்டிற்கு பர்மா தூதுகோஷ்டியின் தலைவராகச் சென்றிருந்த சர். பா. மூன் ஆகாயவிமான மூலமாக இரங்கூன் வந்து சேர்ந்தார்,

இந்திய ராஜாங்க சபையில் நிதி மசோதா நிறைவேறியது.

29 லெப்டினன்ட் ஜெனரல் ஆகின்லெக் இந்தியாவின் பிரதம சேனாதிபதியாக மன்னர் பிரான் அங்கீகாரம் செய்திருக்கிறார்.

இந்திய பாதுகாப்பு சட்டத்தின்கீழ் சென்னை ஜனப்பிரதிநிதி அங்கத்தினர்களான ஸ்ரீ மள்ளிபுட்டி பள்ளம் ராஜு, ஸ்ரீ சேலம் சுப்ரமண்யம், ஸ்ரீ மொஹைதீன் குட்டி முதலியோர் கைதுசெய்யப் பெற்றனர்.

30 இந்தியாவில் டிசம்பர் முதல் தேதியிலிருந்து அமுலுக்கு வரவிருக்கும் தபால், தந்தி கட்டண விகிதங்கள் சம்பந்தமாகவும், வருமானவரி விகித உயர்வு சம்பந்தமாகவும் அறிவிக்கப்பெற்றிருக்கிறது.

இந்திய பாதுகாப்பு சட்டத்தின்கீழ் ஸ்ரீ அசப் அலி, ஸ்ரீ வி. வி. கிரி, ஸ்ரீ ஷாந்தி லால்ஷா, டாக்டர் கோபிசந்த் பார்க்வா முதலியோர் கைதுசெய்யப்பெற்றனர்,

---

எனக்கு எண்ண சுதந்திரம் வேண்டும்; இருதய சமத்துவம் வேண்டும்; ஆத்ம சகோதரத்துவம் வேண்டும்; வேண்டாம், இனியும் பந்தம வேண்டாம். மனிதன், சங்கிலிகளை இழுத்துக் கொண்டு செல்லச் சிருஷ்டிக்கப்படவில்லை; தன் சிறகுகளைப் பரப்பவே சிருஷ்டிக்கப்பட்டிருக்கிறன்.

—விக்டர் ஹ்யூகோ.

—"வான சாஸ்திரி"

ஐஸக்நியூடன்

கீழே இருந்து கொண்டு மேலே ஒரு கல்லை எறிந்தால் அந்தக் கல்லானது மேலே போகாமல் மறுபடியும் பூமியின் மீது வந்து விழுந்து விடுகிறது. இதற்குக் காரணம் பூமிக்குள்ள ஆகர்ஷண சக்திதான். பூமிக்கு இந்தச் சக்தி உலகம் தோன்றின நாள் தொட்டு இருந்து கொண்டு தானிருக்கிறது. ஆனால், இதனை விஞ்ஞான ரீதியாக ருஜுப்படுத்தி, பூமிக்கும் ஆகாயத்திற்கும் இருக்கிற தொடர்பைப்பற்றி ஏற்பட்டிருந்த பல மூடக் கொள்கைகளை அகற்றிய பெருமை ஸர் ஐஸக்நியூடன் என்ற மகானைச் சேர்ந்தது.

நியூடன், இங்கிலாந்திலுள்ள லிங்கன் ஷைர் என்ற மாகாணத்தைச் சேர்ந்த உல்ஸ்தோர்ப் என்ற கிராமத்தில் 1642ம் வருஷம் டிஸம்பர் மாதம் 25ந் தேதி பிறந்தான். இவனுடைய கர்ப்ப வாசத்தின்போதே இவன் தந்தை பரலோக பிராப்தியானான். இதனால் நியூடனுடைய பாலிய வாழ்க்கை வறுமையும் துக்கமும் கலந்ததாகவே இருந்தது. ஆனால், பிற்காலத்தில் உலக மேதாவிகளில் ஒருவனாக இவன் பிரகாசிப்பான் என்பதற்கான அறிகுறிகள் இவனது சிறுபிராயத்திலேயே காணப்பட்டன. சுமார் பன்னிரண்டு வயதிற்குள் இவன் ஒரு சிறிய நீர்க்கடியாரம், காற்றுயந்திரம், ஆள் உட்கார்ந்தால் உடனே செல்லக் கூடிய வண்டி முதலியவைகளைத் தன் கையாலேயே செய்தான். இவனுடைய நுட்பமான அறிவைப் பார்த்து இவன் தாயார் இவனை மேலே படிக்க வைக்கத் தீர்மானித்தாள். அப்படியே இவன் தன் 18வது வயதில் கேம்ப்ரிட்ஜ் சர்வகலாசாலையைச் சேர்ந்த ட்ரினிடி காலேஜில் கொண்டு சேர்க்கப்பட்டான். அங்கு கணித சாஸ்திரத்தில் அதிகமான அக்கரை செலுத்திப் படித்தான். நாளா வட்டத்தில் எம். ஏ. பட்டமும் பெற்றான். பின்னர் அதே கல்லூரியில் கணித போதகாசிரியனாக நியமனம் பெற்றான். இதற்குப் பின்னரே இவன் பல சிறப்பட்ட ஆராய்ச்சிகள் நடத்தி அழியாத புகழ்பெற்றான்.

1688ம் வருஷம் நியூடன் கேம்ப்ரிட்ஜ் சர்வகலாசாலையின் பிரதிநிதியாக பார்லிமெண்டுக்குத் தெரிந்தெடுக்கப்பட்டான். சுமார் இரண்டு வருஷ காலம் பார்லிமெண்ட் அங்கத்தினனாக இருந்தான். ஆனால், பார்லிமெண்ட் விவாதங்களில் இவன் அதிகமாகக் கலந்துகொண்டதாகத் தெரியவில்லை.

நியூடன் 1727ம் வருஷம் மார்ச்சு மாதம் 20ந் தேதி திங்கட்கிழமை 85வது வயதில் ஆண்டவன் திருவடி நீழல் அடைந்தான்.



மாதவீ கங்கணம்

வழிநூல் ஆசிரியர்: ஸ்ரீ வே. கா. ராமநாதன் பி ஏ. பி. எல்; வெளியிட்டோர்: அல்லயன்ஸ் கம்பெனி, மயிலாப்பூர், சென்னை; டபிள் கிரவுன் 1 x 16 அளவு; இரண்டு பாகங்கள்; பக்கம் 566, விலை: ரூ 3-4-0

ஸ்ரீ ரமேசசந்திரதத்தர் அரசாங்க உத்தியோகஸ்தராக இருந்து காலங் கழித்து விட்ட போதிலும், தாய் நாட்டையும் தாய் மொழியையும் அவர் மறந்து போகவில்லை. இவ்விரண்டுக்கும் அதிகமான சேவைகள் செய்திருக்கிறார். வங்க இலக்கியத்திற்கு, இவர் இயற்றிய நூல்கள், ஒரு மெருகிட்ட மாதிரி இப்பொழுதும் சோபிக்கின்றன. இவர் வங்க பாஷையில் இயற்றிய 'மாதவீ கங்கணம்' என்ற நூலின் மொழி பெயர்ப்பே இந்தத் தமிழ் 'மாதவி கங்கணம்.' மொழி பெயர்ப்பாசிரியரான ஸ்ரீ ராமநாதன், தமது வேலையைப் பொறுப் பறிந்து மிக அழகாகச் செய்திருக்கிறார். கதை, சரித்திர சம்பந்த மாதலால், தொடர்ந்து படிப்பதற்கு மிகவும் சுவாரஸ்யமாயிருக்கிறது. இதுபோல் இன்னும் பல நூல்களையும் ஸ்ரீ ராமநாதன் மொழி பெயர்த்து வெளியிட்டால் நன்று யிருக்கும்.

நியூடன் தற்பெருமையில்லாதவன். உலகத்திலே கற்றுக் கொள்ள வேண்டிய விஷயங்கள் எவ்வளவோ இருக்கின்றன என்றும் அவற்றில் தனக்குத் தெரிந்தவை மிகச் சொற்பமே என்றும் இவன் அடிக்கடி சொல்லி வருவான். நியூடனுக்கு ஆடம்பர வாழ்க்கை என்பதே பிடிக்காது. உணவிலும், உடுப்பிலும் மிகவும் சிக்கனமாகவே இருப்பான். ஆயினும் தாராள மனதுடையவன். பிறருடைய கஷ்டங்களைப் பார்த்து இரக்கங் கொண்டு அவர்களுக்குத் தன்னாலியன்ற அளவு உதவி செய்வான். "இறந்து போகிற வரையில் கொடுத்துக் கொண்டிராதவர்கள் ஒன்றுமே கொடாதவர்கள்" என்று இவன் அடிக்கடி சொல்வது வழக்கம். தனது வருமானத்தில் பெரும்பாகத்தை ஏழைகளின் கஷ்ட நிவாரணத்திற்கும், கல்வி அபிவிருத்திக்கும் கொடுத்து வந்தான்.

தீனபந்து ஆண்ட்ரூஸ்

எழுதியவர்: ஸ்ரீ தி ஜ ர; வெளியிட்டோர்: அல்லயன்ஸ் கம்பெனி, மயிலாப்பூர், சென்னை; டபிள் கிரவுன் அளவு 1 x 16; பக்கம் 87; விலை 10 அணா.

இந்த மாதிரியான ஒரு நூலை ஸ்ரீ தி. ஜ. ர விட மிருந்தோ அல்லது அல்லயன்ஸ் கம்பெனியாரிட மிருந்தோ நாம் எதிர்பார்க்க வில்லை. தீனபந்து ஆண்ட்ரூஸைப் பற்றி புதிய விவரங்கள் பல தெரிந்து கொள்ள வேண்டுமென்ற ஆவலுடையாரும், இந்தப் புஸ்தகத்தை வாங்கிப்படித்து ஏமாற்றமடையக் கூடும். தவிர, புஸ்தகத்தின் விலை மிக அதிக மென்று நாம் அஞ்சுகிறோம்,

தனவணிகர் தன்மை

ஸ்ரீ. RM. SM. கதிரேசனார் நிகழ்த்திய வானொலி விரிவுரை; வெளியிட்டோர்; செட்டிநாடு நூற்பதிப்புக் கழகம், தேவகோட்டை; பர்மாவில் புத்தகம் கிடைக்குமிடம் ஸ்ரீ SM. சிதம்பரம் செட்டியார், அவுப்போ, தாராவாடி ஜில்லா, டபிள் கிரவுன் அளவு 1x16; பக்கம்: 117; விலை: 12 அணா.

இந்த நூலுக்கு முன்னுரை, அணிந்துரை, சிறப்புரை முதலிய பல இருக்கின்றபோது, நமது மதிப்புரை தேவையா? ஸ்ரீ கதிரேசனார், தமது பிரசங்கத்தில, தனவணிக சமூகத்தாரின் அரிய தன்மைகளைப்பற்றி அழகான பாஷையில் அலங்கரித்துப் பேசியிருக்கிறார். புஸ்தகம் பார்வைக்கு மிக நன்றாயிருக்கிறது.

வரப் பெற்றோம்

கல்வித் தேவர் அவர்களால் தொகுக்கப்பட்டு இரங்கூன் மங்கமாரி வீதி நவீனகதா புத்தகசாலையினரால் வெளியிடப்பெற்ற 'திருப்புகழ் நூறு' என்ற நூல் வரப் பெற்றோம். விலை 4 அணா.

உலகத்திலே கஷ்டமான காரியங்கள் மூன்று. ஒரு ரகசியத்தை ரகசியமாக வைத்துக் கொள்வது; காலத்தை ஒழுங்காகச் செலவழிப்பது; துன்பத்தைச் சகித்துக் கொள்வது; மகனே! இறந்து போனவர்களைப் பற்றிக் குறை கூறாதே. வயதானவர்களுக்கு மரியாதை செய். கோபத்தை அடக்கு. எதிலும் அவசரப் படாதே. நாவை அடக்கு. முடியாத காரியங்களுக்குப் பிரயத்தனப் படாதே. உனது நண்பர்களுக்குக் கஷ்டம் நேரிட்ட காலத்தில் உன்னுடைய உண்மையான நட்பை நீ காண்பிக்க வேண்டும். கெட்ட வழியாகச் சம்பாதிக்கும் பணத்தைவிட நஷ்டம் ஏற்பட்டால் அதுவே நல்லது என்று கருது.

—சில்லோ

— வெ. சா.

சமுதாய ஒப்பந்தம்

(ரூஸ்ஸோ எழுதியது)

5. ஆரம்ப சம்பிரதாயத்திற்குச் செல்வது அவசியம்

இதுவரையில் நான் எவ்வெவற்றை மறுத்து வந்தேனோ அவ்வவற்றையெல்லாம் நான் ஏற்றுக்கொள்வதாகவே வைத்துக்கொள்வோம். அப்படியானால் கூட சுயேச்சாதிகாரத்தை ஆதரிக்கிறவர்களுடைய கட்சி வலுப்பெற்றதாகத் தெரியவில்லையே. ஒரு கூட்டத்தை அடக்கிவைப்பது என்பதற்கும், ஒரு சமுகாயத்தை ஆள்வது என்பதற்கும் எப்பொழுதுமே ஒரு பெரிய வித்தியாசம் இருந்துகொண்டுதானிருக்கும். தனிப்பட்ட மனிதர்கள், அவர்கள் எத்தனை பேராயிருந்த போதிலும் ஒருவர் பின்னொருவராக ஒரு தனிப்பட்ட மனிதனுக்கு பந்தகப்படுவார்களானால், அது—அப்படி பந்தகப்படுவது—ஆண்டான் அடிமை விஷயமாகிறதே தவிர, ஒரு சமுதாயம்—அதற்குத் தலைவன் என்ற ஹோதா ஏற்படவில்லை. இப்படித்தான் எனக்குத் தோன்றுகிறது. வேண்டுமானால் முதற் பிரிவினரை—அதாவது ஆண்டான்—அடிமை பாத்தியமுடையவர்களை ஒரு கூட்டத்தினர் அல்லது தொகுதியினர் என்று சொல்லிக்கொள்ளுங்கள். ஆனால் அவர்களை ஒரு சங்கமாகக் கருதவே முடியாது. ஏனென்றால் அவர்களுக்குச் சமுதாய சொத்தும இல்லை; அரசியல் பரம்பரையும் இல்லை. மேற்படி ஆண்டான் அல்லது எஜமானன், இந்த உலகத்தில் பாதி பாகத்தைத் தனக்கு அடிமைப் படுத்திக்கொண்ட போதிலுங்கூட அவன் ஒரு தனிப்பட்ட மனிதனே. (அவனுக்கு வேறெவ்வித அந்தஸ்தும் கிடையாது.) அவனுடைய பாத்தியதைகள் மற்றவர்களுடைய பாத்தியதைகளினின்று பிரித்துப்பார்க்கிறபோது, தனிப்பட்ட மனிதனுடைய பாத்தியதைகள்தான். அவன் இறந்துவிட்ட பிறகு, அவனுடைய ஏகாதிபத்தியம், நெருப்புப்பட்ட ஒரு மரமானது எப்படி சாம்பலாகி உருத்தெரியாமல் போய்விடுகிறதோ அதைப்போல் ஒற்றுமையின்றி சிதறிப்போய்விடுகிறது. (1)

ஒரு ஜாதி, ஓர் அரசனுக்குத்தன்னை ஒப்புக்கொடுத்துவிடலாமென்று க்ரோஷியஸ் கூறுகிறான். இவனுடைய சித்தாந்தப்படி, ஒரு ஜாதி, ஓர் அரசனுக்குத் தன்னை ஒப்புக்கொடுப்பதற்கு முன்னர் வரைதான் ஜாதியென்று அழைக்

1 மஹா அலெக்ஸாந்தருடைய கிரேக்க ஏகாதிபத்தியம், அவனுடைய மரணத்திற்குப் பின்னர் சிதறுண்டு போனதை இங்கு நினைவுபடுத்திக் கொள்ளலாம்,

கப்படலாமே தவிர, அதற்குப் பின்னர் இல்லை (2) இங்ஙனம் ஒப்புக் கொடுப்பதாகிற செயல் பொதுஜனச் செயலாகும். பொதுஜனங்கள் ஒன்று கூடி இந்தமாதிரியான ஒரு தீர்மானத்தை நிறைவேற்றிய பிறகுதான கொடுப்பதாகிற செயல் நடைபெறுகிறது என்பதாகவே நாம் கொள்ள வேண்டும். எனவே, எந்தச் சட்டப்படி ஜனங்கள் ஓர் அரசனைத் தெரிந்தெடுக்கிறார்களோ அந்தச் சட்டத்தைப் பரிசீலனை செய்வதற்கு முன்னர், எந்தச் சட்டப்படி ஒரு ஜாதி, ஜாதியாகியதோ அந்தச் சட்டத்தைப் பரிசீலனை செய்து பார்க்கவேண்டும். ஏனென்றால் இந்தச் சட்டந்தான் முதன் முதலாக ஏற்பட்ட சட்டம்; இதுவே சமுதாயத்தின் உண்மையான அஸ்திவாரம்.

ஏற்கனவே ஒரு சம்பிரதாயம் ஏற்பட்டிருக்காவிட்டால், அல்லது அரசனைத் தெரிந்தெடுக்கிற காரியமானது ஏகமனதாக நடைபெற்றிருக்காவிட்டால், பெரும்பான்மையோருடைய முடிவுக்குச் சிறுபான்மையோர் கட்டுப்பட வேண்டுமென்கிற நியதி என்ன இருக்கிறது? பத்துப்பேர் இஷ்டப்படாதபோது, நூறுபேர் மட்டும் தங்களுக்குள் ஒன்று சேர்ந்து கொண்டு ஓர் எஜமானனைத் தெரிந்தெடுக்கிற உரிமையை எங்கிருந்து பெற்றார்கள்? ஒருவனுக்கே, பல ஓட்டுகள் கொடுக்க உரிமையுண்டு என்ற சட்டமே சம்பிரதாயத்தின் பேரில் ஏற்பட்டதுதான். ஒரு தடவையாவது ஒற்றுமைப்பட்ட ஒரு காரியத்தைச் செய்ய வேண்டுமென்கிற எண்ணத்தை அடிப்படையாகக் கொண்டே இந்தச் சம்பிரதாயம் ஏற்பட்டது.

2 ஜாதி (நேஷன்) என்று சொன்னாலே அதற்குச் சில உரிமைகளும் அந்தஸ்துகளும் இருக்கின்றன வென்பது பெறப்படுகிறது. அந்த ஜாதியானது, வேறொருவனுக்கு அடிமைப்பட்டு விட்டதேயானால் அது தன் உரிமைகளையும் அந்தஸ்துகளையும் இழந்ததாகிறது அப்பொழுது அதனை எப்படி ஒரு ஜாதியென்று அழைக்கமுடியும்?

“ஜோதி” அன்பர்களுக்கு

தற்போதைய ஐரோப்பிய யுத்தம் எப்படி விஷம் போல் பரவி வருகிறதோ அப்படியே காகித விலையும் நாளுக்கு நாள் விலையேறிக் கொண்டே வருகிறது. இந்த நிலைமையில், பக்கங்களைக் குறைத்து வெளியிட வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டிருக்கிறது. இந்த நிர்ப்பந்தம் தற்காலிகமாகத்தான் இருக்கும். அது வரையில் வாசகர்கள், பொறுமையுடனிருந்து “ஜோதி”க்கு ஊக்க மூட்டி வருவார்களாக.

மானேஜர்.

—சி. நாகையா

பர்மாவில் இந்திய நாகரிகம்

பழங்காலச் சரித்திரத்தைப் புரட்டிப் பார்த்தால், பர்மியரில் ஒரு வகுப்பினராகிய பியூ ஜாதியார், மிகச் செல்வாக்குடனிருந்து வந்த விபரங்களைக் காணலாம். பர்மாவின் மேல் பகுதியிலும், மத்திய பகுதியிலும் அந்த ஜாதியார் ஏராளமாய்ப் பரவியிருந்தார்கள். சுமார் 2000 வருடங்களுக்கு முன்னே, புரோம் என்னும் ஊருக்குச் சமீபமாயுள்ள வட்டாரங்களில், அச்சமூகத்தார், மற்றப் பகுதிகளைவிட, ஜனத்தொகையில் மிகுந்திருந்தார்கள். பியூ ஜாதியார், திபேத்-பர்மிய கலப்புடையவர்கள். மேலும், இப்போதுள்ள பர்மிய சமூகத்தாருக்கு, அவ்வகுப்பார் முன்னோர்களாவார்கள். கி. பி. 13 வது நூற்றாண்டுகள் வரை, பியூ ஜாதியார் வம்சவழி இருந்து கொண்டுதானிருந்தது. அறவே அற்றுப் போய்விடவில்லை. அவர்களுடைய பாஷை, பேச்சளவில் மட்டுமல்லாது எழுத்தளவிலும் உபயோகிக்கப்பட்டு வந்திருக்கிறது. பர்மிய 1287 ஆம் ஆண்டில், அதாவது சற்றேறக்குறைய 15 ஆண்டுகளுக்கு முன்னே, பகானில் நாட்டப்பட்ட சிலாசாஸன மொன்றில், பியூ வாசகங்கள் தீட்டப்பட்டிருப்பதைக் காணலாம். நாளடைவிலே அந்த ஜாதியார், தற்கால பர்மிய சமூகத்தில் கலந்து விட்டனர்.

2,000 வருடங்களுக்கு முன்னால், இந்தியாவிலிருந்து இந்து சமூகத்தார், கடல் தாண்டி கீழ்ப்பிரதேசங்களில் குடியேற ஆரம்பித்தார்கள். பர்மாவின் கீழ் பகுதியிலும், ஸ்ரீ க்ஷேத்திரா என்னும் நகர்ப்புறத்திலும் ஏராளமாய்க் குடியேறி வசிக்கலானார்கள்.

அக்காலத்தில், இந்திய சமூகத்தாரிடமிருந்து பழக்க வழக்கம், கடவுள் வழிபாடு, நாகரிகம், ஒழுக்கம், அட்சரங்கள் முதலியவற்றைப் பியூ ஜாதியார் கிரகித்துக் கொண்டிருக்கிறார்கள்.

இந்துக்களின் கொள்கையெனச் சொல்லப்படும் சடங்குகளில் பலவற்றை, இப்பொழுதுங்கூட பர்மியர்கள் விடாமல் கையாண்டு வருகின்றனர். முடியிறக்குதல், காது குத்துதல், விவாகம் போன்ற மங்களகரமான சடங்குகள், இந்துக்களின் சம்பிரதாயத்தை யநுசரித்தே பர்மியர்களால் கையாளப்பட்டு வருகின்றன. விக்கிரக ஆராதனையில், இந்துக்களால் பெரிதும் பூஜிக்கப்படுகிற, பரமேஸ்வரன், விநாயகர், சரஸ்வதி போன்ற விக்கிரகங்களை இவர்கள் தொழுதிருக்கின்றனர். பிற்காலத்திலேதான் பௌத்த மதம் உன்னத ஸ்தானத்தைப் பெற்று, எங்கும் தீவிரமாய்ப் பரவலாயிற்று.

தென்னிந்தியாவில் வழங்கப் பெற்று வந்த கடம்ப அட்சரங்கள், கி. பி 300 ஆம் ஆண்டு முதல் பியூ ஜாதியாரால் உபயோகிக்கப்பட்டு வந்திருக்கின்றன.

மேலும், நாடு, நகரம், நதி முதலானவைகளுக்கு இந்தியப் பெயர்களை இட்டு அழைத்து வந்திருக்கிறார்கள். உதாரணமாக சில ஊர்களின் பெயர்களை, இங்கே குறிப்பிடுவது அவசியமாகும்.

"ஸ்ரீ க்ஷேத்திரா, சாயாவதி, ஹம்சாவதி, சாவித்திரி, மிதிலா, கேதுமதி, ரத்னபுரம், அமராபுரம்"

மேற்கண்ட ஊர்கள் இப்பொழுது முறையே கீழ் வரும் விதமாய்ப் பொதுஜனங்களால் அழைக்கப்படுகின்றன.

புரோம் (ஸ்ரீ க்ஷேத்திரா) தாராவடி (சாயாவதி) ஹாந்தாவாடி (ஹம்சாவதி) தாவட்டி (சாவித்திரி) மெய்ட்டிலா (மிதிலா) டவுஞ் (கேதுமதி) மாண்டலே (ரத்னபுரம) அமராபுரா (அமராபுரம்)

இவ்விதமிருக்க, பர்மாவுக்கும், வட இந்தியாவுக்கும் ஏற்பட்டிருந்த தொடர்பைப் பற்றிச் சிறிது கவனிப்போம். இந்திய வட மேற்குப் புறத்தைச் சேர்ந்த காஷ்மீர தேசத்து அரசர் ஸாக ராஜன் சகாப்தத்தை மாற்றி அமைத்ததும், ஸ்ரீ க்ஷேத்திரத்தில் சுமுந்தரி ராஜன சகாப்தத்தை மாற்றி அமைத்ததும் ஒத்திருக்கிறது.

ஸ்ரீ க்ஷேத்திரா வென்னும் புராதன நகரில், போபோஜீ பயா என்றழைக்கப்படும், பண்டைக் காலத்தில் கட்டப்பெற்ற பௌத்த கோவிலொன்றிருப்பதைப் பார்க்கின்றோம். அப்புண்ய ஸ்தலத்திற்குச் சமீபத்திலே, பூர்த்து பிராமணர்கள் சம்பந்தமான உருவங்கள் செதுக்கப்பட்ட நாற்சதுரக்கற்கள், ஜீவ ஜந்துக்களின் உருவங்கள் அமைக்கப்பட்ட கற்கள், திரிசூலாயுதங்கள். லிங்கங்கள் முதலானவை காணப்படுகின்றன. மற்றுஞ் சில பகுதிகளில் கௌதம புத்தர், மாரன், நாகம், பிரஹ்மா, இந்திரன், சிவன், ஆண், பெண், மான் போன்ற உருவங்கள் அமைக்கப்பட்ட கற்சிலைகள் கிடப்பதைக் காண்கிறோம். பியூ பாஷைபால் பொறிக்கப்பட்ட சிலா சாஸனங்கள் மட்டுமன்று; சமஸ்கிருதம், பாலி முதலிய பாஷைகளால் தீட்டப்பட்டிருக்கும் வாசகங்கள் காணப்படுகின்றன பியூ அட்சரங்கள் கி. பி 500க்கு மேல், 1100 ஆண்டுகளுக்குள்ளாக ஏற்பட்டவைகளாகும். இவ்விதமாக, தென்னிந்தியா வட இந்தியா, மத்திய இந்தியா இவைகளோடு பர்மியர் அதிக தொடர்பு வைத்திருந்தார்கள் என்பது காணக்கிடக்கிறது.

சீன ட அவ்ன்மீன் அரச வமிசத்தைச் சேர்ந்த சரித்திர மொன்றில், பர்மாவைப் 'பியூ' தேச மென்பதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. கி. பி. 618 முதல் 907ம் ஆண்டுகளுக்குள்ளாக அவ்விதம் கூறப்பட்டிருக்க வேண்டும். மேலும், அந்த சீன அரச வம்சத்து சரித்திரத்தில், பியூக்களைப் பற்றி சில விவரங்கள் தரப்பட்டிருக்கின்றன. அவை வருமாறு:—

"பியூ ஜாதியார் பௌத்த மதத்தைத் தழுவிக் கொண்டிருக்கிறார்கள். மர வீடுகளைக் கட்டிக் கொண்டு வசிக்கிறார்கள். ஈயம், தத்த நாகம் இவற்றால் தயாரிக்கப்பட்ட தகடுகளைக் கூரையாய் வேய்ந்து கொள்பவர்கள், வான சாஸ்திரத்தில் நல்ல ஆற்றல் பெற்றவர்கள். முகமன் கூறும் போது, ஒருவர், மற்

ருவருக்கு கைலாகு கொடுத்துக் கொள்கிறார்கள். ஜீவ காருண்ய சீலர்கள், பட்டு நூல் ஆடைகளை அணிந்து கொள்வதில்லை. பெரும்பாலும் பருத்தியாலாக்கப்பட்ட உடைகளையே உடுத்திக் கொள்கின்றனர். பயறு, நெல், சோளம், கரும்பு இவைகளைப் பயிர் செய்து ஜீவிக்கின்றனர். பிறையை பொத்த வடிவத்தில் அமைந்துள்ள சிறு தங்கம், வெள்ளிகளை நாணயமாகப் புழங்கிக்கொள்கிறார்கள். பண்டமாற்று வியாபாரத்தில் பஞ்சு, சலவைகைகள், பண்பாணை முதலானவைகளை கையாளுகின்றனர். புருஷர்கள் குல்லா வைத்துக் கொள்கின்றனர். (நாம் இன்று நேரில் பார்ப்பது போல) பெண்கள் கூந்தலைப் பிரமனை போல் சுற்றிக் கட்டிக் கொள்வதோடு அதிலே முத்துச் சரங்களையும் அணிந்து கொள்கிறார்கள். வீதிகளில் செல்லும் பொழுது விசிறிகளைக் கையில் வைத்துக் கொள்கிறார்கள்.

ஊரைச் சுற்றிலும் மதில்கள் எழுப்பப்பட்டிருக்கின்றன. அவைகளுக்குப் பசுமை நிறத்தில் சாயம் பூசப்பட்டிருக்கிறது. அரண்மனைகள் பொன் மயமாயும், வெள்ளி மயமாயும் ஜ்வலிக்கின்றன. அரசர் புறப்படும் பொழுது, பல்லக்கிலாவது, யானைமீதாவது அமர்ந்து கொள்வார். பரிவாரக் கோஷ்டியில், இருநூறு, முந்நூறு பேர்களுக்குக் குறைச்சலில்லை.

உத்தேசம் க. பி. 754 ஆம் ஆண்டாயிருக்கலாம், நாபச்சேச (யுனான்) அரசர் ஐராவதி நதியின் மேல பாகம் முழுவதையும் கைப்பற்றிக்கொள்ளலானார். அப்பால், கி. பி 808-9 ஆம் ஆண்டில் அந்த மன்னர், "பியூக்களின் வேந்தன்" என்பதாக, தன்னை பிரகடனப்படுத்திக் கொண்டார். அவ்விதம் அவர் பெருமையடித்துக் கொண்டாலுங்கூட, ஸ்ரீ க்ஷேத்திராவை அரசு புரியும் மன்னராயிருக்க வில்லை. கி பி. 832 ஆம் ஆண்டில், சீன அரசர் எதிர்த்துப் போராடி, மூவாயிரம் பியூ மக்களைக் கைது செய்து, அவ்வளவு பேர்களையும் யுனான்புவுக்கு அழைத்துச் சென்று தங்குவதற்கு இடவசதிகள் செய்து கொடுத்தார். 858 ஆம் ஆண்டில், பியூ ஜாதியாரால், அம்மன்னருக்கு தங்க விக்கிரகமொன்று காணிக்கையாகச் செலுத்தப்பட்டது. 863 ஆம் ஆண்டில் கச்சின் முதலிய ஜாதியார்கள் யுத்தத்திற்காக சீன மன்னருக்கு ஆட்களைக் கொடுத்துதவினார்கள். கி பி. 900-ல் பர்மாவும், அதையொட்டிய வேறுசில பகுதிகளும், முக்கியமான ஊர்களும் சீனர் ஆதிக்கத்திலிருந்து வந்தன. கி. பி. 1000 வரையில் சீனர்களால், பர்மியர்கள், பியூக்கள் என்பதாய் அழைக்கப்பட்டு வந்திருக்கிறார்கள். அதைப் போன்று அரக்கானியர்களும் ஆச்ச மூகத்தாரை 1200 ஆம் ஆண்டு வரையிலும் அழைத்து வந்திருக்கிறார்கள்.

பியூ ஜாதியார், பகான் உச்ச நிலையிலிருந்த காலம் வரையிலும் பிரக்யாதியோடிருந்து வந்திருக்கின்றனர்.

குறிப்பு:—'ஸ்ரீ க்ஷேத்திரா' என்னும் ஊர், புராதன தலைநகராகும். இது, புரோமுக்குச் செல்லும் ரயில் பாதைக்கு வடபாரிசத்தில், அதாவது புரோமுக்கும் போஸாவுக்கும் இடையிலே இருக்கிறது புரோமிலிருந்து சுமார் 4 மைல்கள் தூரத்திலிருக்கும். முக்கல்களைப் போன்று முக்கோணத்திலே, மிகப் பழமையான மூன்று ஸ்தூபிகள் அப்புராதன நகரினை ஞாபகப் படுத்துபவையாய் இன்றும் காட்சியளித்துக்கொண்டிருக்கின்றன.

—வி. எம். துரைசாமி

நாம் என்ன செய்ய வேண்டும்?

நானும் என் மனைவியும் அடிக்கடி அரசியல், கலை, நாகரிகம், பொருளாதாரம் இவைகளைப்பற்றிப் பேசுவோம். எங்களுடைய தாய்ப் பாஷை தமிழ் விஷயம் எங்கள் சம்பாஷணையில் புகுந்துவிட்டதானால் அது எங்களுடைய வெகு நேரத்தை யெடுத்துக் கொண்டுவிடும்.

ஒருநாள் இரவு எட்டுமணியிருக்கும். ஆகாயம் நிர்மலமாயிருந்தது. நல்ல நிலவு. நானும் என் மனைவியும் வீட்டின் முற்றத்தில் உட்கார்ந்தோம். வழக்கம்போல் எங்கள் பேச்சு ஆரம்பமாயிற்று. அன்று நான் ஆங்கிலத்தில் பொருளாதார சம்பந்தமாய்ப் படித்த புத்தகத்திலுள்ள விஷயங்களை அவளிடம் சொன்னேன். தமிழில் இப்படிப் புத்தகங்களை வெளி வரக் காணோமே! ஏன் ஒருவரும் எழுத மாட்டேனென்கிறார்கள்? என்று அவள் என்னைக் கேட்டாள். நான் என்ன பதில சொல்வது? பதில் கூறுபனுமிலை ஏதோ சில விஷயங்களைச் சொன்னேன். புத்தகங்கள் வெளிவராததற்கான காரணங்களை அவளும் நன்கு அறிவாள். ஆனதால் மௌனம் கொள்வதில் அவள் ஜாஸ்தி சிரமப்படவில்லை.

பழைய இலக்கியங்கள்

நம்முடைய பாஷையிலே உன்னதமான பல இலக்கிய நூல்கள் இருக்கின்றன. அவை புராதனப் பெருமை வாய்ந்தவை. நம்முடைய மூதாதையரின் நாகரிகத்திற்கும் உயர்ந்த கொள்கைகளுக்கும் எடுத்துக்காட்டாயிருப்பவை. அந்நூல்களிலுள்ள பாக்களைக் கொஞ்சம் கவனித்தோமானால் அவற்றிலே மிளிரும் சம்பாஷணைகளும் அலங்காரங்களும் அப்படியே நம் மனதைக் கவ்வி விடுகின்றன. கையேட்டுப் பிரதிகளிலே கிடந்த நம்முடைய இந்த இலக்கியங்களை சில குறிப்பிடத்தக்க பெரியார்களும், இரண்டொரு ஸ்தாபனங்களும் புத்தக வடிவில் கொணர்ந்ததற்கு தமிழர்கள் நன்றி செலுத்துகிறார்கள், அவர்களை வாழ்த்துகிறார்கள். சமீபத்தில் நான் கலித்தொகை யெனும் நூலைப் பார்த்தேன். புத்தக வடிவில் ஏற்கனவே இது வெளியாகி யிருந்ததுதான். ஆனால் நான் பார்த்தது மிகவும் குறைந்த விலையில் நல்ல முறையில் வெளியிடப்பட்டிருப்பதாய் எண்ணினேன். கனவானும் தனவானுமாகிய ஒருவர் முழுப் பொறுப்பேற்றுக் கொண்டு இந் நூலை இம்முறையில் வெளியிட்டிருப்பதைத் தெரிந்து என் மனம் மகிழ்ந்தது. இவ்வித எண்ணம் எல்லோருக்கும் உதிப்பதில்லை. சில பேருக்குத்தானிருக்கும். அச் சில பேரும் நிறைய இருக்கவேண்டும். தமிழ்ப் பாஷைக்குத் தேவை அது.

நம்முடைய புராதன இலக்கியங்கள் பல பெருமைகளுக் கிலக்காயிருப்பினும் அவற்றைத் தமிழர்கள் யாவரும் படித்து ரசிக்க முடியாது; அனுபவிக்க முடியாது. ஏன்? தற்காலத் தமிழ்நாடு அந்தநிலைமையிலில்லாததே அதற்குக் காரணம். நன்றாகப் படித்

திருக்கும் பண்டிதர்கள்தான் அவற்றை நயம்பட ரசிக்க முடியும்; அனுபவிக்க முடியும்.

தற்கால உலகம்

கட்டை வண்டியிலேறி ஒரு மணிக்கு நான்கு மைல் தூரம் பிரயாணம் செய்த காலம் ஒன்றிருந்தது எனக்கு நன்றாக ஞாபகமிருக்கிறது. எங்களுடைய கிராமத்திற்கு நான்காவது மைலில் அப்போதுதான் போடப்பட்டிருந்த ரோட்டில் ரெயில்வண்டி ஓடியது. அந்த ரெயில் ரோட்டிற்குப் பக்கத்தில் எங்களுடைய ஒரு புன்செய் நிலமிருக்கிறது. நானும் என் தமக்கையும் அந்தப் புன்செய்க்குப் போயிருந்தோம். அதற்கு முன்னே ரோட்டுக்கு மண்வெட்டிப் போட்டு நீள நீளமான இரும்புகளை அதன்மேல் போடுவதை நாங்கள் பார்த்திருக்கிறோம். ஆனால் அதன்மீது மாடோ, குதிரையோ பூட்டாமல் வண்டி புகையை விட்டுக்கொண்டு ஓடி வந்ததைப் பார்த்து நாங்கள் ஆச்சரியப் பட்டோம். பக்கத்து ஜனங்களோடு நாங்களும் வேடிக்கைபார்க்க ஓடினோம். எங்களால் அந்த வண்டியைத் தொடர முடிந்தால்தானே! ஆனால் இப்போது அந்த வண்டியைப்பார்த்து நான் ஆச்சரியப் படுவதில்லை. நானே பலமுறை அந்த வண்டியிலேறிப் பிரயாணம் செய்திருக்கிறேன். ஐம்பது மைலுக்கப்பால் இருக்கிற என்னுடைய பெரிய தகப்பனார் ஊருக்கு இரண்டு நாள் பகல் பூராவும் நடந்து போய்ச் சேர்வார்களாம். பின்னே மூன்றுமணி நேரத்தில் நானே அந்த ஊருக்குப் பலதடவை போய் வந்திருக்கிறேன். இதெல்லாங்கூடப் பழைய காலமாகிவிட்டது. மணிக்கு இருநூறு முன்னூறு மைல் பறந்து செல்கிற ஆகாய விமானங்களை நாம் பார்க்கிறோம். இயற்கையிலே புதைந்து கிடந்த இந்தச் சக்திகளையெல்லாம் கண்டு பிடித்தவர்கள் நம்மைப் போன்ற மனிதர்கள்தான் என்பதை நினைக்கும்போது நம்மை அறியாமலே நாமும் பெருமை கொள்கிறோமில்லையா? பரந்து விரிந்து கிடக்கும் இந்த உலகம் நம் கண் எதிரே கிடக்கிறாப் போலிருக்கிறது கனவிலும் நினைக்க முடியாத எத்தனையோ புதுமைகள் நம் கண்முன்னே நடக்கின்றன. அரசியல், பொருளாதாரம், விஞ்ஞானம், ரசாயனம் முதலிய எல்லாத் துறைகளிலும் தினேதினே பல புதுமைகள், பல புரட்சிகள் நடைபெற்று வருவதை நாம் பார்க்கிறோம்; கேட்கிறோம். இந்த வகையிலே மேனாட்டார் வெகுதூரம் முன்னேறியிருக்கிறார்கள். அநேக நன்கொடைகளை இந்த உலகத்திற்கு அளித்திருக்கிறார்கள். இதற்காக உலகம் அவர்களுக்கு நன்றி செலுத்தக் கடமையுண்டு. இவ்விதம் கண்டு பிடிக்கப் பட்ட பொருள்களின் உபயோகம் மாறுபட்டதாயிருக்கலாம். அது வேறுவிஷயம். அதை இங்கு போட்டுக் குழப்பக் கூடாது. மனிதர்களாலே சாத்தியப் படாத காரியங்கள் இவ்வுலகத்தில் ஒன்றுமேயில்லை யென்பது பிரத்தியட்சமாக நிரூபிக்கப் படுகின்றன. ஆனதால் இந்த உலகத்திலே நாமும் வாழவேண்டுமானால் நாமும் முன்னேறிச் செல்ல வேண்டும். முன்னேறிச் செல்பவர்களுடைய காலடிச் சத்தம் நம்முடைய அடைத்துக் கிடக்கும் வீட்டு வாசற்கதவைக் கட்டும்போதும் நாம் நம்முடைய கண்களை மூடிக்கொள்ள முடியாது. பராமுகமாயிருந்தோ

மானால், முன்னேறிச் செல்லும் அந்தக் கால்களால் நாம் நசுக்கப்பட வேண்டியதுதான். ஆனால், நம்முடைய நிலைமையும் அப்படித் தானிருக்கிறது. நாம் அந்தக் கால்களுக்குக் கீழேதான் கிடக்கிறோம். அவர்களோடு நாமும் முன்னேறிச் செல்ல வேண்டுமானால் நம்முடைய தூக்கத்தைத் தொலைக்க வேண்டும். நம்முடைய கண்களைத் திறந்து கொண்டால் மட்டும் போதுமோ? நம்முடைய அறிவுக் கண்களும் திறக்க வேண்டாமா? இதற்குத் தற்கால நூல்கள்—புத்தகங்கள் தேவை. இந்நூல்கள் நம்முடைய தமிழ்ப் பாஷையில் எழுதி வெளியிடப்பட வேண்டும்.

இந்நூல்கள் என் வெளியிடப்படவில்லை?

நம்முடைய தமிழ்நாட்டில் எத்தனையோ அறிஞர்களிருக்கிறார்கள். மேற்கண்ட விஷயங்களில் திறமையோடு நூல்கள் எழுதுபவர்களுக்குப் பஞ்சம் கிடையாது. ஆனால் தங்களுடைய அறிவை, ஆராய்ச்சித் திறனைத் தமிழ் மக்களின் முன்னே சமர்ப்பிப்பதற்கு அவர்களுக்கு வசதியில்லை. பாசிபடிந்த குளம்போல் எங்கேயோ மூலைகளிலே வாழ்க்கைப் போர் நடத்திக் கொண்டிருக்கிறார்கள் அவர்கள். மற்றும், சொற்ப வசதியுள்ளவர்கள், தங்களுடைய கையிலிருப்பதையும் போட்டுப் புத்தகம் வெளியிட்டால் விற்பனையாகுமா? அதுவும் அறிவு தரும் நூல்களாச்சே. விலை போகுமா என்று அஞ்சுகிறார்கள். அவர்கள் அஞ்சுவதற்குக் காரணமில்லாமலுமில்லை.

பயத்திற்குக் காரணம்

இந்தியா பல மாகாணங்களையுடையது. இதைப் பல நாடுகள் என்று கூறலாம். அந்தந்த நாட்டாரும் தாங்கள் பிறந்த நாடு, தங்களுடைய தாய்மொழி இவற்றில் அளவற்ற காதல் கொள்வது இயல்பு. ஆனால் நமது தமிழ் நாடு இதற்கு நேர்விரோதமாயிருப்பதில் முனைந்திருக்கிறது. நமக்கு நம்முடைய நாட்டின் மீதோ, நம்முடைய தமிழ்மொழியின் மீதோ ஆசை கிடையாது; அன்பு கிடையாது. வங்காளிகள், தங்களுடைய நாட்டையும் பாஷையையும், பொன்னே போல் போற்றுகிறார்கள். "என்னுடைய காண்டீபத்தையும், என்னையும் அவமதிப்பவர்கள் யாராயிருந்தாலுஞ் சரி அவர்களுடைய சிரத்தைக் கொய்து விடுவேன்" என்று அருச்சுனன் சொன்னதாகப் படித்திருக்கிறோம். இந்தப் பிரதிக்கினையுள்ளவர்கள் வங்காளிகள். மாராட்டி, குஜராத்தி இந்த மாகாணங்களும் இதற்குப் பின்தங்கியதல்ல. காலஞ்சென்ற நமது தலைவர் திலகருடைய ஆராய்ச்சித்திறனையும், புலமையையும் உலகத்தார் அறிந்துகொள்வதற்குக் காரணமாயிருந்தது அவர் எழுதிய கீதா ரகஸ்யம் என்னும் நூல். பர்மாவில் மாந்தலே ஜெயிலிலிருக்கும் போது அதை அவர் எழுதியிருக்கிறார். அதை எந்த பாஷையில் அவர் எழுதினார் தெரியுமா? தன்னுடைய சொந்த மாராட்டி பாஷையில் எழுதியிருக்கிறார். பின்னே அந்நூல் பல பாஷைகளில் மொழி பெயர்க்கப்பட்டிருக்கிறது. ஆங்கில ஞானம் நிறைய உள்ளவர் அப்பெரியார் என்பதை நாம் அறிவோம். ஆங்கிலத்திலே அந்நூல் எழுதி வெளியிடப்பட்டிருந்தால் அவருக்கு நிறையப் பொருளுங்கூட கிடைத்திருக்கும். ஆனால் அவர் அறிஞரல்லவா?

மகாத்மா காந்தியடிகள் சத்திய

சோதனை யென்னும் நூல் எழுதினார். ஆங்கிலத்திலே அழகுபட எழுதுவதில் நிபுணர் என்று பிரசித்தம் அடைந்தவர் காந்தியடிகள். ஆனால் அந்த நூலை தன்னுடைய குஜராத்தி பாஷையிலே தான் எழுதினார்.

1938ம் வருஷத்தில் காங்கிரஸ் மகாசபையின் வருஷக் கூட்டம் ஹரிபுரா என்னும் ஊரில் நடைபெற்றதல்லவா? இவ்வூர் குஜராத் மாகாணத்தைச் சேர்ந்தது. காங்கிரஸ் விழா நடக்கும்போது வரும் பத்திரிகைப் பிரதிநிதிகளில், குஜராத்தி பாஷைப் பத்திரிகைப் பிரதிநிதிகளுக்குத்தான் முதல் ஸ்தானம் கொடுக்க ஏற்பாடு செய்திருப்பதாய் பத்திரிகையில் படித்தேன். இதற்காக நான் ஆச்சரியப்படவில்லை.

நான் அறிந்தமட்டில் தமிழ்நாட்டோடு ஐக்கியமாகாணத்தைச் சேர்க்கலாம். ஆனால் பின்னை அவர்களுடைய ஹிந்துஸ்தானி பாஷையில் அரிய பல நூல்கள் வெளியிடப்படுகின்றன. பல துறையில் பல நூல்கள் வெளிவருகின்றன. இன்னும் சிறந்த முறையில் வெளிவருவதற்கு நல்ல முயற்சிகள் செய்யப்படுகின்றன. குறிப்பிட்ட சில தனவந்தர்களும் இம்முயற்சிக்கு நிறைய உதவி செய்து வருகிறார்கள்.

சிலர் கேட்கலாம், மாகாணப்பற்று, பாஷைப்பற்று இருப்பது கெடுதியில்லையா வென்று. இல்லை, ஆம் என்ற இரண்டு பதில் கூறலாம். தேசத்தின் பொதுநலனுக்காக, நம்முடைய பாஷைப்பற்றையோ மொழிப்பற்றையோ நாம் பூரணமாகத் தியாகம் செய்யலாம். இல்லையேல் அது பற்றல்ல. பயித்தியம் என்றுதான் கூறவேண்டும். நமக்கு நம்முடைய நாட்டின்மீது ஆசையில்லை. நம்முடைய மொழியின் மீது நமக்குக் காதல் இல்லை. இதனுடைய பலனை நாம் பூரணமாகவும் அனுபவிக்கிறோம். சாதாரணக் கதைகளைப் படித்துப் பொழுதைப் போக்குகின்றோம். நம்முடைய வாழ்க்கைக்கு வழி காட்டக்கூடிய விஷயங்களைப் பற்றி சிந்திப்பதுகூட இல்லை. நம்முடைய அறிவு பிரகாசிப்பதற்கானதைச் செய்கின்றோமில்லை அதை நசுக்குகின்றோம். நம்முடைய இதயத்தை அழுக வைத்துவிடுகிறோம். புழுக்கள் நுழைவதற்குக் கேட்பானேன்.

நாம் என்ன செய்யவேண்டும்?

ஒரு காலத்தில் மேனாட்டார் விஷயங்களைத் தேடி அலைந்தார்கள். இதற்காக அவர்கள் பட்ட சிரமம் மிகமிக. பல தேச பாஷைகளைக் கற்றார்கள். பல தேச சரித்திரங்களை ஆராய்ந்தார்கள். ஏன்? அவர்களுக்கு எண்ணங்கள் தேவையாயிருந்தன. அதை உணர்ந்தார்கள் அவர்கள். நம்முடைய தேசத்தில் பிறந்து சிறப்புற்றிருந்த சாணக்கியனையும் சந்திரகுப்தனையும் நாம் இப்போது தெரிந்துகொள்ள வேண்டுமானால் கிரீஸ் தேசத்தார் எழுதி வைத்துப்போன நூல்களிலிருந்துதான் தெரியவேண்டியிருக்கிறது. ஆனதால், மேனாட்டார் அப்பொழுது செய்த காரியத்தை நாம் இப்போதாவது செய்ய முற்படுவோம். பிற பாஷையில் உள்ள பழைய புதிய நூல்களை வெளியிடுவோம். வேண்டியது நமக்குச் சிந்தனைதான்; எண்ணந்தான். சிந்திக்கத் தொடங்கிவிட்டால் காரியத்தில் பாதி முடிந்தமாதிரி என்று ஒரு பேரறிஞர் கூறியிருக்கிறாரல்லவா?

—"நாராயணசிவன்"

அரசாங்க உத்தியோகங்கள்—இந்தியாவிலும் மற்ற நாடுகளிலும்

அரசாங்கங்களின் சிக்கலான பிரச்னைகளில் உத்தியோகஸ்தர்களின் சம்பளம் மிக முக்கியமானதாகும். அன்னிய ஆதிக்கத்துக்காளாகியுள்ள இந்தியாவில் இப்பிரச்னை ஒரு இணையற்ற நிலைமைக்குக் கொண்டுவரப் பட்டுள்ளது. இங்கு நடந்துவரும் முறை ஒரு தனிப்பட்ட வகைக் கூட்டத்தாரை,—அந்தஸ்தில் இணையற்றவர்—என்று கருதிக் கொள்வோரை உற்பத்தி செய்திருக்கிறது. இவர்களது அந்தஸ்து, பிறவியினாலோ, பணத்தினாலோ, வியாபாரத்தாலோ ஏற்பட்டதல்ல. அவர்கள் சர்க்காரில் வகித்துவரும் ஸ்தானங்களினால் ஏற்பட்டவையே.

பிரஜைகளின் பொருளாதார நிலையை அனுசரித்து சர்க்கார் உத்தியோகஸ்தர்களின் சம்பளங்கள் நிர்ணயிக்கப் பெற வேண்டுமென்பது உலகம் ஒப்பும் நியதி.

ஒரு தேசத்தின் வருமானம், நிர்வாகச் செலவுக்காகவே வியர்த்தம் செய்யப் பெறாது பிரஜைகளுக்கு உபயோககரமான விதத்தில் விநியோகிக்கப் பெற வேண்டுமென்பது தேசப் பொருளாதார சட்டத்தின் அடிப்படையான தத்துவம். உலகமெங்குமே இத் தத்துவத்தை யுணர்ந்து மிகுதியான பணம் சர்க்கார் உத்தியோகஸ்தர்களின் சம்பளங்களில் செலவழிந்து விடாதபடி கவனித்து வருகிறார்கள். மற்றுமோர் கவனிக்க வேண்டிய முக்கியமான விஷயம், சர்க்கார் உத்தியோகஸ்தர்களுக்கும் மற்ற தனிப்பட்ட காரியாலய உத்தியோகஸ்தர்கள், வியாபாரிகள், டாக்டர் வக்கீல் முதலிய தொழில் செய்வோர் ஆகிய இவர்களுக்குமிடையே பெருத்த வித்தியாச மேற்படுத்தி சர்க்கார் உத்தியோகஸ்தர்களென்ற ஒரு தனிப்பட்ட வகுப்பாரை உற்பத்தி செய்துவிடக் கூடாதென்பது தான். இவ்விதம் செய்வதால் தேசத்தின் இளைஞர்கள் உபயோக கரமானதும் ஆனால் நிச்சயமற்றதுமான புதிய உற்பத்தி மார்க்கங்களி லீடுபடுவதை விட்டு விட்டு நிலையான சர்க்கார் உத்தியோகங்களில் மோகம் கொண்டு விடுவதால் தேசத்தின் பொருளாதார அபிவிருத்தி மிகவும் பாதிக்க இடமாகிறது.

இந்தியாவில் உயர்ந்த சம்பளவிகிதம் ஏற்பட்டது எவ்விதம்?

பொதுவாக பிரிட்டிஷ் உத்தியோகஸ்தர்களுக்கும், சிறப்பாக ஐ.ஸி.எஸ். வர்க்கத்தினர்களுக்கும் உயர்ந்த சம்பளம் ஏற்பட்டதற்கு மூலகாரணம் வெகு காலத்திற்கு இப்பதவிகள் ஐரோப்பியர்களின் ஏக போக உரிமையாயிருந்து வந்ததுதான். இந்த ஏக போக உரிமை போய்

விட்ட தென்றாலும் முக்கியமான உத்தியோகங்களும் உயர்ந்த உத்தியோகங்களும் ஐரோப்பியர்களுடையதாகவே இருந்து வருகின்றன. உள்நாட்டுத் தொழிலாளிக்குப் பதிலாக வெளிநாட்டார் வேலை செய்வது, செலவை அதிகரிக்கச் செய்யுமென்பது ஆக்ஷேபமற்ற உண்மையாகும். மேலும் சம்பளத்தை நிர்ணயிக்கும் உரிமை அதே வகுப்பாரிடம் ஒப்படைத்திருப்பது இப்பொழுதிருந்துவரும் நிலைமைக்குக் காரணமாயிருப்பதில் ஆச்சர்யமில்லையல்லவா? ஐ. ஸி. எஸ். வர்க்கத்தார் அநீதமான முறையைக் கையாளாமவிருப்பதற்காக அபாரமான சம்பள மேற்படுத்தப் பெற்றதென்று சரித்திரங்கள் கூறுகின்றன.

பண்டைக்கால நிலைமைகள் எவ்விதமிருப்பினும் தற்காலத்தில் பொது ஜனங்கள், உயர் உத்தியோகங்களில் ஏற்படும் தவறுதல்களை பொறுத்துக் கொண்டிருக்க மறுக்கிறார்கள். உயர்ந்த உத்தியோங்களுக்கும் குறிப்பிட்ட உத்தியோகங்களுக்கும் குறைந்த சம்பளத்தில் இந்தியர்கள் இருந்து வரத் தயாராயிருந்துவருவதால் உயர்ந்த சம்பளங்களிருந்துவர வேண்டியதற்கு அவசியமில்லை. உயர்ந்த சம்பளம் லஞ்சத்தையும் இதர கெடுதல்களையும் ஒழிக்கக் கூடியதா என்பதும் யோசிக்க வேண்டிய ஒன்று. சர்க்கார் உத்தியோகஸ்தர்களின் நல்லொழுக்கமும் உண்மைத்தனமும் இரண்டு விஷயங்களைப் பொறுத்திருக்கிறது. (1) சேர்க்கும் ஆட்கள் (2) அவர்களை மேல்பார்த்தல். மற்ற நாகரிக மடைந்த தேசங்களைப்போல் இத்தேசத்திலும் சர்க்கார் உத்தியோகங்களுக்கு லாயக்கான நல்லொழுக்க முள்ளவர்களும் அறிவாளிகளும் எப்பொழுதுமே கிடைக்க இடமிருக்கிறது. தகுந்தபடி நிர்வாகம் செய்யவும் திறமையுள்ளவர்களிருக்கிறார்கள்.

ஐ. ஸி. எஸ். வர்க்கம்.

தற்காலத்தில் இந்தியாவைப்போல் உயர்ந்த சம்பளம் நடப்புள்ள வேறெந்தத் தேசமும் கிடையாது. இந்தியாவிலுள்ள விசேஷ உரிமைகள் பெற்றுள்ள ஐ. ஸி. எஸ். வர்க்கத்தினைப்போல் உலகத்தில் வேறெந்த தேசத்திலும் பார்க்க வியலாது. தற்பொழுது ஒரு பிரிட்டிஷ் ஐ. ஸி. எஸ். மாதம் ரூ600 சம்பளத்தில் ஆரம்பித்து 20வருஷ காலத்தில் மாதம் ரூ2600 சம்பளத்தைப் பெறுகிறார். இந்தப் பெரும் சம்பளத்துக்கு மேல் நெடுநாள் லீவ் (Furlough) பென்ஷன் முதலியவை தாராளமாய்க் கொடுக்கப் படுகிறது.

இந்தியாவிலுள்ள ஒரு பிரிட்டிஷ் ஸிவிலியனுக்கு அவரது உத்தியோக காலத்தில் மூன்றுதடவை இங்கிலாந்துக்குப் போய்வர அவருக்கும் அவரது பெண்ஜாதிக்கும் சில சந்தர்ப்பங்களில் குழந்தைகளுக்குங் கூட முதல் வகுப்புச் செலவு அனுமதிக்கப்படுகிறது. முன்காலத்தில் அவர் ஓய்வு பெறுங் காலத்தில் கொடுப்பதாக உறுதி கூறப்பெறும் 1000 பவுன் கொடுப்பதற்கு அவரது சம்பளத்தில் 100க்கு 4 வீதம் அவர் கொடுக்க வேண்டியதிருந்தது. இஸ்லிங்டன் கமிட்டியார் இது அநீதமெனக்கருதி அவருக்குக் கொடுக்க வேண்டிய தொகையை இந்திய வரிகொடுப்

போர் தலையில் சுமத்திவிட்டார்கள். ஒரு ஸிவிலியன் தனக்குக் கிடைக்குமென்று நம்பும் தொகை ரூ2600 என்று நிர்ணயப்படுத்தப் பெற்றுள்ளதாக நினைத்துவிட வேண்டாம். மாகாண அரசாங்கக் காரியதரிசிகள் மாதம் ஒன்றுக்கு ரூ2,750 வாங்குகிறார்கள். ஒரு டிவிஷனின் கமிஷனர் மாதம் ஒன்றுக்கு ரூ3,200 வாங்குகிறார். பிரதம காரியதரிசிக்கும் ரெவின்யூ போர்ட்டு அங்கத்தினருக்கும் மாதம் ஒன்றுக்கு ஏறக்குறைய ரூ3750 சம்பளம் கொடுக்கப் பெறுகிறது. மத்தியசர்க்கார் காரியதரிசியின் மாதச்சம்பளம் ரூ4000. வைசிராயின் அந்தரங்கசபை அங்கத்தினர்கள் ஒவ்வொருவருக்கும் மாதம் ஒன்றுக்கு வரும்படி ரூ6,665. அதிபாக்கியசாலிகளான சில ஸிவிலியன்களுக்கு கவர்னர் ஸ்தானம் அளிக்கப் பெற்று அந்த ஹோதாவில் அவர்கள் மாதம் ஒன்றுக்கு ரூ10000 சம்பளத்தைப் பெறுகிறார்கள். ஐ. ஸி. எஸ். வர்க்கத்தாருடைய உரிமைகளைப் பற்றி ஸர் எட்வர்ட் ப்ளன்ட் என்பவர் கீழ்க்கண்டவாறு எழுதியுள்ளார். "1935வது வருடத்து இந்தியா கவர்ன்மெண்டு சட்டப்படி அவர்களது பாதுகாப்பு பூர்த்தியாக்கப் படுகிறது. பழைய பாதுகாப்புகளுடன் புதிய சில பாதுகாப்புகளும் சேர்க்கப் பெற்றுள்ளன. பார்லிமெண்டாலன்றி இதர வகைகளில் மாற்றமுடியாதபடி பதிவு செய்யப்பட்டு விட்ட படியால் பாதுகாப்பின் பலம் அதிகரிக்கப்படச் செய்துள்ளது." அதிகாரிகளின் பம்பளம்தேச ஜனங்களின் பொருளாதார நிலைமையைப் பொருத்திருக்க வேண்டுமென்று சொன்னேனல்லவா. அதனை மனதில் வைத்துக் கொண்டு இந்தியாவின் சம்பள விகிதத்தையும் இதர நவீன முறையிலுள்ள அமெரிக்க ஐக்கிய அரசாங்கம், பிரான்ஸ், ஜப்பான் ஆகிய தேசங்களில் நடப்பிலுள்ள சம்பள விகிதங்களையும் ஒப்பிட்டுப் பார்த்தால் இந்தியாவில் சம்பளவிகிதம் எவ்வளவு உச்சஸ்தானத்தை அடைந்திருக்கிறதென்பது வெகு எளிதில் தெரிய வரும்.

பிரிட்டிஷ் யுனைடெட் கிங்டம்.

பிரிட்டிஷ் யுனைடெட் கிங்டம் உலகத்திலுள்ள பணம்படைத்த தேச அரசாங்களிலொன்று. இந்தியப் பொருளாதார அமைப்பை அத்துடன் உவமைப்படுத்திச் சொல்லுவது கூடப் பொருந்தாது. ஐக்கிய அரசாங்கத்தில் ஒரு தனி நபரின் சராசரி வருமானம் ரூ 1,240. இந்தியாவில் ஒரு தனி நபரின் வருமானம் ரூ 80 எனலாம். அதாவது பதினைந்திலொருபாகம். ஐக்கிய அரசாங்கத்தின் ரெவின்யூ வருமானமோ இந்தியாவினுடையதைவிட எண்மடங்கதிகமானது. ஐக்கிய அரசாங்கத்தின் வாழ்க்கைத்தரமும் வருமான விகிதமும் மிக அதிகமாக இருந்தும் அங்கு சர்க்கார் உத்தியோகஸ்தர்களின் சம்பளவிகிதம் இந்தியாவைவிட மிகக்குறைவானதாகவே இருந்து வருகிறது. அங்கு ஒரு ஸிவில் ஸர்விஸ்காரன் ஒரு இலாகாவின் நிரந்தர காரியதரிசி பதவியை யடையும் போது எதிர்பார்க்கக் கூடிய உயர்ந்த சம்பளம் மாதம் ஒன்றுக்கு ரூ 3,333. இவ்வித உத்தியோகஸ்தர்களின் எண்ணிக்கை விரல்விட்டு எண்ணக்

கூடியதே. அங்கு நிர்வாக இலாகா உத்தியோகஸ்தர்களின் மொத்த எண்ணிக்கை 1140. இதில் பெரும்பான்மையோர் மாதம் ஒன்றுக்கு ரூ 777 முதல் ரூ 1000 வரையுள்ள சம்பளம் கொண்டே திருப்தி யடைகிறார்கள். இவ்வித மிருப்பினும் தகுந்த சம்பளம் கொடுக்காவிடில் இளைஞர்களுக்கு சர்க்கார் உத்தியோகங்களைவிட இதர தொழிலோ வியாபாரமோ கவர்ச்சியாய் விடுமென்ற கூச்சல் இங்கிலாந்தில் கிடையா தென்பதோடு இந்தியாவில் சதா இருந்துகொண்டே இருக்கிறது.

உலகத்திலேயே பெரும் சாம்ராஜ்யமாயிருந்து வந்ததும் இருந்துவருவதுமான பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தின் பிரதம மந்திரிக்கு வருஷச் சம்பளம் இந்திய வைஸ்ராயின் சம்பளத்தில் பாதித் தொகைதான். இந்திய வைஸ்ராய்க்கு அலவன்ஸைத் தவிர்த்து வருஷம் ஒன்றுக்கு ரூ2,56,000 சம்பளமாகும். வியநார்ட் எம்.ஸ்கிப் என்பவர் தன்னுடைய "இந்தியாவின் தற்கால நிலை" என்னும் புத்தகத்தில் இந்தியவைசிராய் இந்தியாவில் வசூலிக்கப்படும் ஒவ்வொரு ஆயிரம் ரூபாய்க்கு ஒரு ரூபாய் வீதமும் பிரிட்டிஷ் பிரதம மந்திரி இங்கிலாந்தில் வசூலிக்கப்பெறும் ஒவ்வொரு பதினாயிரம் ரூபாய்க்கு ஒரு ரூபாய்வீதமும் சம்பளம் பெறுவதாய் குறிப்பிட்டுள்ளார். இவரது கணக்குப்படி இந்திய வைஸ்ராய் பிரிட்டிஷ் பிரதமமந்திரியைவிட பதின் மடங்கு சம்பளம் வாங்குகிறாரென்று ஏற்படுகிறது. இங்கிலாந்து மந்திரி சபையில் பெரும்பாலாருக்கு மாதம் ஒன்றுக்கு ரூ 5555 தான். இந்திய வைஸ்ராயின் அந்தரங்க சபை அங்கத்தினருக்கு மாதம் ஒன்றுக்கு சம்பளம் ரூ 6666. அதாவது 100 க்கு இருபதுவீதம் அதிகமாகக் கிடைக்கிறது.

பிரான்ஸ்

பல வருடங்களுக்கு முன் இந்தியாவின் மாகாண ஸிவில்ஸர்விஸ் சம்பள விகிதத்தைப்பற்றிப் பேசும்போது ஸர் ஜான் ஸ்டார்ச்சி என்பவர் பிரான்ஸ் உயர்தர உத்தியோகஸ்தர்களுக்கு இந்தியாவில் நாட்டுமக்களுக்குக் கொடுக்கும் சம்பளத்தைவிட மிகக் குறைவானதென்று சொல்லியுள்ளார். தானுள்பட உள்ள இந்தியன் ஸிவில்ஸர்வீஸ் சம்பளத்தைவிட பிரஞ்ச் ஸிவில்ஸர்வீஸ் சம்பளம் எவ்வளவு மடங்கு குறைவானதென்று அவர் குறிப்பிடவில்லை. 1929 ஆம் வருஷத்து சம்பளச் சீர்திருத்தப்படி பிரஞ்சு ஸிவில்ஸர்விஸ் உத்தியோகஸ்தர்களின் சம்பளம் வருஷம் 1 க்கு 8500 பிராங்கிலிருந்து 1,30,000 பிராங்குகளாகும். அதாவது மாதம் ஒன்றுக்கு ரூ 75 லிருந்து ரூ 1,100 வரையிலுமாகும்.

ஜப்பான்

சமீப காலத்தில் ஜப்பானில் ஒரு தனி மனிதனின் வருமானத்தைக் கணக்கிட வசதியில்லாமற் போயினும் 1933 ஆம் வருடத்திலுள்ள புள்ளியை பொருத்தமானதாக எடுத்துக் கொள்ளலாம். இது ஏறக்குறைய 184 யென் அல்லது 143 ரூபாயாகும். ஆகவே ஜப்பானின் தனி நபரின் வருமானம் இந்தியாவினுடையதைவிட நூற்றுக்கு எழுபத்தைந்து அதிகமானதாகும். ரெவின்யூ வருமானமும் இந்

திய மத்திய சர்க்காரின் வருமானத்தைவிட நூற்றுக்கு நாற்பது அதிகமானதாகும். ஜப்பானில் உயர்தர ஸிவில் ஸர்வெண்ட்டின் சம்பளம் மாதம் ஒன்றுக்கு ரூ 64 விருந்து ரூ 334 வரையுள்ளது. மகத்தான ஜப்பான் ஸாம்ராஜ்யத்தின் பிரதம மந்திரிக்கு இந்தியாவில் முதல் முதலாக வேலைக்குவரும் பிரிட்டிஷ் ஸிவிலியனுக்குக் கொடுக்கப்படும் சம்பளமாகிய ரூ 622 தான் கொடுக்கப்படுகிறது. இதர ஜப்பானிய மந்திரிகளின் மாதச் சம்பளம் ரூ 375 விருந்து ரூ 440 வரையிருந்து வருகிறது. இந்தியாவில் ஒரிஸா மாகாண பிரதம காரியதரிசிக்கு மாதம் ஒன்றுக்கு ரூ 2, 150ம் வங்காள மாகாண பிரதம காரியதரிசிக்கு ரூ 5, 333ம் கொடுக்கப் பெறுகிறதென்பதைக் கவனிக்கவும். ஏறக்குறைய பஞ்சாப் மாகாண ஜனத் தொகையைக் கொண்ட கொரியா மாகாண கவர்னருக்கு மாதம் ஒன்றுக்கு ரூ 440 சம்பளமாயிருக்கும்போது பஞ்சாப் கவர்னருக்கு இதைவிட பத்தொன்பது மடங்குள்ள ரூ 8, 333 சம்பளம் கொடுக்கப் பெறுகிறது. இந்தியாவில் மிகவும் குறைந்த சம்பளமுள்ள கவர்னர் வடமேற்கு எல்லைப்புற மாகாண கவர்னர் தான். இவரது மாதச்சம்பளம் ரூ 1, 900 ஆகும். இதுகூட ஜப்பான் சர்க்கார் காரியதரிசிகள் சம்பளத்தைவிட ஐந்து மடங்கு அதிகமானதாயிருக்கிறது.

கனடா, தென்னாப்பிரிக்கா

பிரிட்டிஷ் குடியேற்ற நாடுகளாகிய கனடாவையும் தென்னாப்பிரிக்காவையும் உதாரணமாய் எடுத்துக் கொள்ளுவோம். கனடாவில் தனிநபரின் வருமானம் இந்தியாவினுடையதைவிட பதினேழு பங்கான 1400 ரூபாயாகும். கனடாவின் ஜனத்தொகை இந்திய மத்திய மாகாணத்தினுடையதை விட சற்று குறைவானதேயாயினும் முன் சொன்னதின் ரெவின்யூ, பிந்தியதைவிட பதினொரு மடங்காகும். ஆயினும் 1 37 ஏப்ரல் மீ முதல் தேதிக்கு முன் மத்திய மாகாண நிர்வாக சபையங்கத்தினருக்குக் கொடுக்கப்பட்டு வந்த சம்பளத்திற்கும் மிகக் குறைவான ரூ 3375 தான் கனடாவின் பிரதமமந்திரிக்குச் சம்பளமாகக் கொடுக்கப்படுகிறது. தென்னாப்பிரிக்க யூனியனின் ஜனத்தொகையை இந்தியாவின் மிகவும் ஏழ்மையான அஸ்ஸாம் மாகாணத்துடன் ஒப்பிடலாம். தென்னாப்பிரிக்கயூனியனின் ரெவின்யூ வருமானம் அஸ்ஸாம் வருமானத்தின் இருபது மடங்காகும். தென்னாப்பிரிக்கா யூனியனின் பிரதமமந்திரியின் மாதச் சம்பளம் 1937 ஏப்ரல்மீ முதல்தேதிக்கு முன் அஸ்ஸாம் நிர்வாகசபை அங்கத்தினருக்குக் கொடுக்கப்பட்டு வந்த சம்பளத்தைவிட ரூ300 அதிகமுள்ள ரூ 3,888 தான். யூனியனின் நிர்வாக உத்தியோகஸ்தர்களின் சம்பளம் ரூ 1777 ஆயிருக்க இந்தியாவில் ஏழ்மைநிறைந்த அஸ்ஸாம் மாகாணத்தில் மாதம் ஒன்றுக்கு ரூ 2000 சம்பளம் பெறும் 20 இம்பீரியல் ஸர்வீஸ் உத்தியோகஸ்தர்களிருந்து வருகிறார்கள்.

அமெரிக்க ஐக்கிய அரசாங்கம்

பிரான்ஸ், ஜப்பான், கனடா தென்னாப்பிரிக்கா யூனியன் ஆகியவைகளோடு ஒப்பிடும்போது மட்டிலுமல்லாது சக்திவாய்ந்த அமெரிக்க ஐக்கிய

அரசாங்கத்தோடு ஒப்பிடும்போதும் இந்தியாவின் சம்பள விகிதம் அபாரமானதுதான். அந்த டாலர் தேசத்தில் ஒரு தனி நபரின் வருமானம் ரூ 1845. இந்தியாவில் தனி நபரின் வருமானத்தின் 23 மடங்கு. அமெரிக்க ஐக்கிய அரசாங்கத்தின் ஜனத்தொகை இந்தியாவினுடையதின் மூன்றிலொன்றே யாயினும் அத்தேசத்தின் ரெவின்யூ வருமானம் இந்தியாவினுடையதின் ஒன்பது மடங்காகும். அமெரிக்க ஐக்கிய அரசாங்கத்தின் தலைவர் இந்தியாவின் கவர்னர் ஜனரலைக் காட்டிலும் நிலைமையிலும், சக்தியிலும் சர்வதேசப் பெருமையிலும் எவ்வளவோ முக்கியத்துவம் வாய்ந்தவரெனினும் அவரது மாதச் சம்பளம் ரூ 17, 062தான். ஆனால் இந்திய கவர்னர் ஜெனரலின் மாதச் சம்பளம் ரூ 21, 333 ஆகும். அமெரிக்கப் பிரஸிடென்டின் மந்திரிசபை அங்கத்தினர் மாதம் ஒன்றுக்கு ரூ 3412 பெறுகிறார். இந்திய வைஸ்ராயின் நிர்வாகசபை அங்கத்தினரோவெனில் மாதம் ஒன்றுக்கு ரூ 6666 பெறுகிறார். புணைப் பெருமையைப் பற்றிச் சொல்லத் தேவையில்லாத நியூயார்க் ஸ்டேட் கவர்னரின் மாதச் சம்பளம் ரூ 5, 687. ஆனால் ஏறக்குறைய அதே ஜனத்தொகையைக் கொண்ட இந்திய மத்தியமாகாண கவர்னரின் மாதச் சம்பளம் ரூ 6000. டெல்ஹி மாகாணத்தில் எவ்வளவு ஜனத்தொகை இருக்கிறதோ அவ்வளவே தென் டகோட்டாவிலிருந்து வருகிறது. இந்த தென் டகோட்டா கவர்னரின் மாதச் சம்பளம் ரூ 692. ஆனால் டெல்ஹி மாகாண பிரதம கமிஷனர் மாதம் ஒன்றுக்கு ரூ 3000த்தை சம்பளமாகப் பெறுகிறார்.

இந்திய மயமாக்குவதின் பலன்

உத்தியோகங்களை இந்திய மயமாக்குவதற்கும் இக் கட்டுரைக்கும் அதிகமான சம்பந்தமில்லையெனினும் உயர்தர உத்தியோகங்களில் இந்தியர்களை நியமிப்பதால் சம்பள விகிதம் பெரிதும் குறையலாமென்று யாரும் எதிர்பார்க்கலாமென்பதைத் தெரிவிக்க விரும்புகிறேன். இந்தியா கவர்ன்மெண்டிலும் மாகாண கவர்ன்மெண்டிலும் இலாக்காக்களிலுமுள்ள ஐரோப்பிய உத்தியோகஸ்தர்களுக்குக் கொடுக்கப்படும் சம்பளம் இவ்வளவென்று துல்யமாய்ச் சொல்லிவிட முடியாது. 1939-40 ஆம் வருடத்து பாதுகாப்புச் செலவு பட்ஜட் எஸ்டிமேட்டிலிருந்து 50596 ஐரோப்பிய ஆபீசர்களும் சிப்பாய்களுமாய் ரூ 8, 2[illegible], 44, 910 ஐ ஒருமாதத்தில் பங்கிட்டுக் கொள்கிறார்களென்பது தெரியவரும். இந்திய ஆபீசர்களும் இதரர்களுமாயுள்ள 1, 51, 512 நபர்களின் மாதச் சம்பளத் தொகை ரூ 3, 66, 23, 560. இந்தப் புள்ளிகளைக்கொண்டு ஒரு ஐரோப்பிய நபருக்கு ரூ 1, 633ம் ஒரு இந்திய நபருக்கு ரூ 242ம் செலவாகிற தென்பதைக் காணலாம் ஆகவே ஒரு ஐரோப்பியனுக்கு இந்தியனைவிட ஆறுமடங்கு செலவாகிற தென்பது ஏற்படுகிறது. இந்தப் புள்ளிகளை மட்டும் வைத்துக் கொண்டு பார்த்தாலும் பிரிட்டிஷ் படைக்குப் பதிலாக இந்தியர்களை வைத்துக் கொள்வோமாயின் தேசத்திற்கு 7கோடி ரூபாய் லாபமாகிறது. எல்லா உத்தியோகங் களையுமே இந்திய மயமாக்கினால் தேசத்துக்கு 25 கோடியிலிருந்து 30 கோடிரூபாய் வரை மிச்சமாகுமென்று யாரும் நிச்சயமாய் எதிர் பார்க்கலாம்.

—வ. பார்த்தசாரதி

மகான்கள் யார்?

உலகத்திலே மகான்கள் என்று எல்லாரையும் நாம் அழைக்கிறோமா? இல்லை. எத்தனை இடையூறுகள் ஏற்பட்டாலும் அவைகளையெல்லாம் அலட்சியமாகவும் புன்சிரிப்போடும் சமாளித்துக் கொண்டு மற்றவர்களுடைய நலத்துக்காக ஓயாமல் உழைக்கிறார்களே அவர்களைத்தான் மகான்கள் என்று அழைக்கிறோம். அவர்களைத்தான் மானிடசமுதாயம் தனது இருதய பொக்கிஷத்தில் வைத்துப் பூஜை செய்கிறது.

எத்தனை மகான்கள், தங்கள் தேசத்தின் விடுதலைக்காகவும், தங்கள் ஜாதீய கௌரவத்தைக் காப்பாற்றுவதற்காகவும் எத்தனை விதமான கஷ்டங்கள் பட்டிருக்கிறார்கள்? மகனே! அவர்களுடைய புனிதமான சரித்திரங்களை நீ கேட்பாயானால் உனக்கு மயிர்க்கூச் செறியும்; உனது கண்களில் உன்னை யறியாமலே கண்ணீர் சொரியும். இப்படிப்பட்ட மகான்கள் ஒரு நாட்டிற்கு மட்டும் ஒரு காலத்திற்கு மட்டும் உரியவர்கள் என்று நினையாதே. அவர்களெல்லோரும் காலங் கடந்தவர்கள்; நித்திய புருஷர்கள். இப்படிப்பட்ட மகான்களின் வரிசையில் ஆண்கள் மட்டும் இல்லை; பெண்களும் இருக்கிறார்கள். சேவை செய்ய, தியாகம் செய்ய, உலகத்திற்கு உபகாரம் புரிய ஆண்களுக்கு மட்டுந்தான் உரிமையுண்டா என்ன? சக்தி யுண்டா என்ன?

மகாத்மா காந்தி, தென்னாப்பிரிக்காவிலுள்ள இந்தியர்களின் உரிமைகளுக்காகச் சத்தியாக்கிரகம் நடத்தி வந்தபோது சிறைசென்றார்; அங்கே கல்லுடைத்தார், எத்தனையோ எவ்வளவோ விதமான அவமானங்களையெல்லாம் அடைந்தார். தமது மனைவி மரணாவஸ்தையி லிருக்கிறாள் என்று தெரிந்தும் அவளை மறந்து, தமது தொண்டிலே ஈடுபட்டிருந்தார். இவையெல்லாம் எதற்காக? இந்திய ஜாதியின் கௌரவத்தைக் காப்பாற்றுவதற்காக. இதனால்தானே இவரை ஒரு மகானென்று உலகம் போற்றுகிறது.

ஸ்விட்ஜர்லாந்து என்ற மத்திய ஐரோப்பாவிலுள்ள சிறிய நாட்டைப் பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறாயல்லவா? இந்த நாட்டைப் பல வல்லரசுகள் சூழ்ந்து கொண்டிருக்கின்றன. ஆயினும் இது சுதந்திரமாகவே இருக்கிறது; சமாதானமாகவே வாழ்கிறது. இதற்கு, இந்த நாட்டு ஜனங்களுடைய தேசப்பற்று வீர மனப்பான்மை, ஒழுக்கம் முதலியவைதான் காரணம். ஆனால், இந்த நாட்டார் சுதந்திரம் பெறுவதற்காக எவ்வளவு சிரமப் பட்டனர் தெரியுமா? ஒரு சிறிய சம்பவத்தைக் குறிப்பிடுகிறேன் கேள்.

கி. பி. 1481ம் வருஷம் ஆஸ்திரியா தேசம், ஸ்விட்ஜர்லாந்தின் மீது

படை யெடுத்தது. ஸ்விட்ஜர்லாந்துக்குப் படைபலம் அதிகமில்லை. இதனால் சொற்ப படையைக் கொண்டே ஆஸ்திரியர்களை எதிர்க்க ஆரம்பித்தது. ஸெம்பாக் (Sempach) என்ற இடத்தில் போர் நடைபெற்றது. ஆஸ்திரியர்கள் நீண்ட ஈட்டிகளை கையிலேந்திக் கொண்டும், சுவர் மாதிரி இடைவிடாமல் வரிசையாக அணிவகுத்துக் கொண்டும் முன்னேறிச் சென்றார்கள். சொற்ப படையினரான ஸ்விஸ் காரர்கள் கையில் குறுகிய ஈட்டிகளே ஆயுதங்களா யிருந்தன. எனவே தோல்வியை ஒப்புக்கொண்டு கலைந்து போக வேண்டிய நிலையி லிருந்தார்கள். இந்தச் சமயத்தில் ஒரு போர்வீரன், தோல்வியை ஒப்புக்கொண்டு ஓட மனமில்லாதவனாய், தன் சகோதர போர்வீரர்களை மற்று மொருமுறை உற்சாகப் படுத்திப் பார்கலாமென்று தீர்மானித்தான். அப்படியே ஸ்விஸ் போர்வீரர்களைப் பார்த்து "என் தாய்நாட்டுச் சகோதரர்களே! நான் சுதந்திர யாதையைத் திறந்து விடுகிறேன். என் மனைவி மக்களைக் காப்பாற்றுங்கள்", என்று சொல்லிவிட்டு, மற்றப் போர்வீரர்களில் சிலருடைய ஈட்டிகளையும் வாங்கிக் கொண்டு ஒரே மூச்சாக ஆஸ்திரியப் படையின் நடுவில் நுழைந்து விட்டான். ஆஸ்திரியப்படை வழி விட்டது. அந்த வழியில் ஸ்விஸ் போர்வீரர்கள் ஜெய கோஷத்துடன் பிரவேசித்தார்கள். விங்க்ல்ரீட் (Winkelried) என்ற அந்த ஸ்விஸ் போர்வீரன் ஆஸ்திரியப் படைக்குள் நுழைந்து இறந்துவிட்டான் என்பதென்னவோ வாஸ்தவம். ஆனால் அவன் நாடு காப்பாற்றப் பட்டதல்லவா? இந்த யுத்தம் நடைபெற்றது 1481ம் வருஷம் ஜூலை மாதம் 9ந் தேதியன்று. இப்பொழுது கூட பிரதிவருஷம் ஜூலைமாதம் 9ந் தேதியை ஸ்விஸ் காரர்கள் தங்கள் தேசிய தினமாகக் கொண்டாடி வருகிறார்கள். விங்கேல்ரீட் என்ற தங்கள் தலைவனை வழிபடுகிறார்கள். இவனை ஒரு சாதாரண போர்வீரன் என்றுதான் நீ கருதுகிறாயா? இல்லவே இல்லை. இவன் ஒரு மகான். இதனால்தான் ஸ்விஸ் காரர்கள் இவன் வசித்த வீட்டை ஒரு யாத்திரை ஸ்தலம் போல் இன்றும் காப்பாற்றி வருகிறார்கள். இவன் அணிந்திருந்த சல்லடம், உபயோகித்த ஈட்டி முதலியவைகளும் காப்பாற்றப்பட்டு வருகின்றன. ஆங்காங்கு இவனுக்கு உருவச்சிலைகள் பல ஏற்பட் டிருக்கின்றன.

ஸ்விட்ஜர்லாந்து வாசிகளில் ஆண்களுக்கு மட்டுந்தான் இந்தச் சுதந்திரப் பற்று, தியாக உணர்ச்சி முதலியன இருக்கின்றன வென்று நினைக்கிறாயா? ஸ்விஸ் பெண்களின் வீரமும் தியாகமும் அந்த நாட்டு இதிகாசத்தில் மகா பிரசித்தமானது. மேற்படி ஸெம்பாக் யுத்தம் நடைபெற்ற சுமார் இருநூறு வருஷங்களுக்குப் பிறகு — அதாவது கி. பி. 1622ம் வருஷம் — ஆஸ்திரியர்கள் மீண்டும் ஸ்விட்ஸர்லாந்தின்மீது படையெடுத்தார்கள். சாமர்த்தியசாலிகளான ஆஸ்திரியர்கள் எவ்வித சந்தடியும் செய்யாமல் ஒருபெரும் படையினராக ஸ்விட்ஜர் லாந்திலுள்ள ஒரு கணவாயில் வந்து சேர்ந்தனர். அந்தக் கணவாயில் பல கிராமங்கள் இருந்தன. கிராம வாசிகளில் ஆண்கள், தங்கள் அறுவடை முதலியவற்றைக் கவனிக்க மலைமீது சென்றிருந்தனர். ஆஸ்திரியப் படை வந்த தருணத்தில்

—"ஒரு காங்கிரஸ்வாதி"

முக்தார் அஹமத் அன்சாரி

ஜனனம் 1880
மரணம் 1936
நாற்பத்திரண்டாவது காங்கிரஸ் தலைவர்

"நான் இறப்பதாயிருந்தால் டாக்டர் அன்சாரியினுடைய மடியிலேயே இறப்பேன்"

"நான், காந்திஜியைச் சாகவிட மாட்டேன்"

இந்தச் சொற்றொடர்கள் மகாத்மா காந்தியடிகளும் டாக்டர் அன்சாரியும் ஒருவருக்கொருவர் தங்களுக்குள் பரிமாறிக் கொண்ட வார்த்தைகளில்லை. அவர்கள் இருவரால் உலகத்திற்குச் சொல்லப்பட்ட வார்த்தைகள் இவை. மேற்கண்ட சொற்றொடரில், எவ்வளவு அன்பும் திட நம்பிக்கையும் பதிந்து கிடக்கின்றன!

டாக்டர் அன்சாரி 1880ம் வருஷம் டிசம்பர் மாதம் 25ந் தேதி ஐக்கிய மாகாணத்தைச் சேர்ந்த யுசுப்பூர் என்ற கிராமத்தில் பிறந்தார். இவருடைய தந்தையார் செல்வம் நிறைந்த ஒரு ஜமீந்தார். அன்சாரி சிறு வயதில் காசியில் கல்வி பயின்றார். அலகாபாத் கல்லூரியில் எப். எ பரீட்சையில் தேறி விட்டு, ஹைதராபாத் காலேஜில் சேர்ந்தார். சென்னை சர்வ கலாசாலையில் பி. எ. பட்டம் பெற்றார். ஹைதராபாத் சமஸ்தானத்தின் ஸ்காலர்ஷிப் உதவியைக் கொண்டு அன்சாரி மேல் படிப்புக்காக 1900ம் வருஷம் ஐரோப்பா சென்றார். எடின்பரோ சர்வ கலாசாலையில் சேர்ந்து எம். டி; எம். எஸ். பட்டம் பெற்றார். இப்பால் லண்டன் சர்வ கலாசாலையில் சேர்ந்து, எல். ஆர். சி. பி. பட்

பெண்கள் மட்டுமே கிராமங்களில் இருந்தனர். ஆஸ்திரியப் படை வந்ததைப்பார்த்த இந்தப் பெண்கள் அத்தனைப் பேரும் ஒன்று சேர்ந்தனர்; வீடுகளிலே கிடந்த மண்வெட்டி, கோடரி முதலிய அகப்பட்ட ஆயுதங்களைக்கையி லேந்திக்கொண்டு ஆஸ்திரியப்படையை எதிர்த்தனர். எதிர்பாராத இந்த எதிர்ப்பைக்கண்டு ஆஸ்திரியப்படை சிதறி ஓடிவிட்டது. ஸ்விட்ஜர்லாந்தின் சுதந்திரம் மீண்டுமொரு முறை காப்பாற்றப் பட்டது. யாரால்? பெண்களால்! இதனால்தான் இன்றுகூட ஸ்விட்ஜர்லாந்தில், பெண்களுக்கு அதிகமான சலுகைகளும் உரிமைகளும் இருக்கின்றன.

டங்களைப் பெற்று, லண்டனிலேயே தன்னுடைய டாக்டர் தொழிலை ஆரம்பித்தார். ஏழெட்டு வருஷம் கழிந்து 1911ம் வருஷம் தாய் நாடு திரும்பிய இவர் டில்லி நகரில் தன்னுடைய டாக்டர் தொழிலை ஆரம்பித்தார் தொழிலை ஆரம்பித்த கொஞ்ச காலத்திற்குள்ளேயே இவருடைய பெயர் பிரசித்தம் ஆகி விட்டது. சாதாரண ஜனங்கள் மட்டுமில்லை; பெரிய பெரிய ஜமீந்தார்கள், தனவந்தர்கள் முதலியோரும் இவரிடத்தில் தங்களுடைய நோய் குணப்படுவதற்காக வரத் தலைப்பட்டார்கள். பல சமஸ்தானாதிபதிகள், ஜமீந்தார்கள் தனவந்தர்கள் இவர்களுடைய குடும்ப வைத்தியராகவும் அன்சாரி இருந்தார். இவருடைய வைத்தியசாலையில் எப்பொழுதும் ஏராளமான கூட்டமிருக்கும். நோயாளிகள் இவரைக் காணுவதற்தாக இவருடைய வைத்தியசாலையின் முன்னே ஏழெட்டுத் தினங்கள் காத்திருப்பது சர்வ சாதாரணமாகும். நோயாளிகளிடத்தில் மிகவும் அன்பாக நடந்து கொள்வாரானதால், இவரைப் பார்த்தவுடனேயே நோயாளிகளுக்குப் பாதி நோய் குணமாகி விட்டது போல் தோன்றும். அரசியல் வாதிகள், அல்லது பொது நல ஊழியர்கள் யாரேனும் நோய்வாய்ப்பட்டவர் இவரிடம் சிகிச்சைக்காக வரின், அவர்களை மிகவும் அனுதாபத்தோடு கவனிப்பார். இந்த அருங் குணங்கள் இவருடைய இதயத்தில் பொதிந்து கிடந்ததால், நம்முடைய தேசத்தின் பிரசித்தமான நாலைந்து டாக்டர்களின் வரிசையில் இவரும் ஒருவராகப் பொது மக்களால் மதிக்கப்பட்டார்.

அன்சாரிக்கு அவருடைய இளம் பிராயத்திலேயே பொது நலச்சேவையில் அதிகமான பற்று ஏற்பட்டதாய்ச் சொல்ல வேண்டும். 1899ம் வருஷம் இவர் சென்னையில் மெடிகல் காலேஜில் வாசித்துக் கொண்டிருக்கும் போது முதன் முதலாக காங்கிரஸ் மஹா சபையின் கூட்டத்திற்குச் சென்றிருந்தார். இது முதல் இவருக்கு காங்கிரஸ் மஹா சபையின் தொடர்பு ஏற்பட்டு விட்ட தென்றே சொல்ல வேண்டும். அரசியல் காரியங்களில் பங்கெடுத்துக் கொள்வதிலே இவர் தவறியது மில்லை. 1912-13ம் வருஷம் துருக்கிக்கும் பால்கன் நாடுகளுக்குமிடையே யுத்தம் நடைபெற்ற காலத்தில், அகில இந்திய வைத்திய கோஷ்டி யொன்று இவருடைய தலைமையின் கீழ் துருக்கிக்கு அனுப்பப்பட்டது. 1917-18ம் வருஷங்களில் நம் தேசத்தில் நடந்த ஹோம்ரூல் கிளர்ச்சியிலும் இவர் முக்கிய பங்கெடுத்துக் கொண்டார். 1918ம் வருஷம் டில்லியில் நடைபெற்ற காங்கிரஸ் மஹா சபைக் கூட்டத்தோடு அகில இந்திய முஸ்லீம் லீக் மகா நாடும் நடைபெற்றது. அந்த மகா நாட்டின் வரவேற்புக் கழகத்தலைவரா யிருந்து இவர் ஆற்றிய சொற்பொழிவு தேசத்தின் நிலைமையை உள்ளபடி விளக்குவதாயிருந்தது. இந்தப் பிரசங்கம் சர்க்காரால் பறிமுதல் செய்யப்பட்டு விட்டது. 1919ம் வருஷத்தில் ரௌலட் சட்டத்தை யெதிர்த்து காந்திஜீ ஆரம்பித்த சத்தியாக்கிரக இயக்கத்தில் இவர் காந்திஜிக்கு முழு உதவியாயிருந்தார்

ஹிந்து முஸ்லீம் ஒற்றுமையில் இவருக்கு அசைக்க முடியாத நம்பிக்கையும் ஆர்வமும் உண்டு. ஹிந்து முஸ்லீம் இரு வகுப்பினரும் தங்களுக்குள்ளிருக்கிற சந்தேகம் அவநம்பிக்கை, அபிப்பிராய பேதங்கள் இவற்றை அறவே ஒழித்துவிட்டு இவர்களை ஒரு கொடியின் கீழ்நிறுத்துவதற்கு இவர் அரும்பாடு பட்டார். அரசியல் விஷயங்களிலே, பல சிக்கலான பிரச்னைகளைக் கிளப்பக்கூடிய மத சம்பந்தமான விஷயங்களைப் புக விடக் கூடாதென்பது இவருடைய அபிப்பிராயம். இதை வெளிப்படையாகச் சொல்வதிலும் இவர் தயங்கியது கிடையாது. 1923-ம் வருஷத்தில், லாலாலஜபதிராயும் இவருமாகச் சேர்ந்து சிறுபான்மையோர் சம்பந்தமாய் ஒரு ஒப்பந்தம் தயாரித்தார்கள். இதற்கு லஜபதி ராய்—அன்சாரி ஒப்பந்தம் என்று சொல்வதுண்டு. ஹிந்து முஸ்லீம் ஒற்றுமைக்காக 1924-ம் வருஷத்தில் காந்திஜி உபவாசம் ஆரம்பித்தார். இந்த உபவாசத்திற்குப் பின், மோதிலால் நேருவினுடைய தலைமையில் டில்லியில் நடைபெற்ற ஹிந்து முஸ்லீம் ஒற்றுமை மஹாநாட்டில் இவர் முழுப்பங்கெடுத்துக் கொண்டிருந்தார்.

இவருடைய சேவையால் உள்ளம் பூரித்த தேச மக்கள், 1927-ம் வருஷம் சென்னையில் நடைபெற்ற காங்கிரஸ் மகா சபைக்கு இவரைத் தலைவராகத் தெரிந்தெடுத்து தங்கள் நன்றியைத் தெரிவித்துக் கொண்டார்கள். தம்முடைய தலைமை யுரையில் இவர் ஹிந்து முஸ்லீம்களின் ஒற்றுமையைப்பற்றியும் அதனால் ஏற்படும் நன்மையைப் பற்றியும் வற்புறுத்தி யிருந்தார். அன்சாரியினுடைய தலைமையில் நடைபெற்ற சென்னை காங்கிரஸ் மிகவும் மகத்துவம் பொருந்தியதென்றே சொல்ல வேண்டும். இந்தியாவுக்கு வந்த சைமன் கமிஷனை தேச மக்கள் பகிஷ்கரிக்க வேண்டுமென்று நிச்சயமானது இந்தக் காங்கிரசில் தான். "இந்தியாவின் லட்சியம் பூரண சுயராஜ்யம்" என்ற தீர்மானத்திற்கு விதை போடப்பட்டது இந்தக் காங்கிரசிலேதான். பிரிட்டிஷ் சாமான்களைப் பகிஷ்கரிக்க வேண்டுமென்றுதீர்மானமானது இந்தக் காங்கிரசிலே தான். இந்தியாவின் சுதந்திர அரசியலைத் தயாரிப்பதற்கு காரியக் கமிட்டிக்கு அதிகாரம் கொடுக்கப் பட்டது இந்தக் காங்கிரசிலேதான். இது பின்னே "நேரு ரிப்போர்ட்" எனப் பிரசித்தமானது வாசகர்கள் அறிந்ததே. இந்த ரிப்போர்ட் தயாராவதில் தன்னுடைய முழு உதவியையும் அன்சாரி, கமிட்டிக்கு அளித்தார்.

1930 ம் வருஷம் இந்தியாவுக்கே ஒரு சோதனையான வருஷமல்லவா? மகாத்மா காந்தியுடைய தலைமையில காங்கிரஸ் சத்தியாக்கிரகம் ஆரம்பித்தது. காங்கிரஸ் சட்ட விரோதமான ஸ்தாபனம் என்பதாக சர்க்கார் அறிவித்து விட்டனர். சர்க்காருடைய சட்டத்திற்கு விரோதமாக காங்கிரஸ் காரியக் கமிட்டிக் கூட்டத்தை டில்லியில் தன்னுடைய வீட்டில் கூட்டியதால், 1930-ம் வருஷம் ஆகஸ்டு மாதம் 27ந் தேதி அன்சாரி கைது செய்யப் பட்டார். 6 மாதத் தண்டனை இவருக்குக் கிடைத்தது. தண்டனைக் காலம் பூர்த்தியாவதற்குச் சில தினங்கள் பாக்கி யிருக்கும் போது,

"காந்தி இர்வின்" ஒப்பந்தத்தின் காரணமாக 1931-ம் வருஷம் ஜனவரி மாதம் 25ந் தேதி விடுதலை செய்யப்பட்டார். காந்தி இர்வின் ஒப்பந்த மேற்படுங் காலையில், பல அரசியல் பிரமுகர்கள் அடிக்கடி கூடிச் சந்தித்துப் பேசுவதற்கும், காந்திஜி தங்கியிருப்பதற்கும் டில்லியில் இவருடைய வீடு பாக்கியமுடையதாயிருந்தது. அந்த நாளில், சர்க்கார் என்ற நிலைமையில் வைசிராயினுடைய ஜாகைக்கு எவ்வளவு மகத்துவமிருந்ததோ அதே மகத்துவம் தேசீய முறையில் இவருடைய வீட்டிற்கிருந்தது.

காந்தி இர்வின் ஒப்பந்தத்திற்குப் பின், லண்டனில் நடை பெற்ற வட்ட மேஜை மஹாநாட்டில் காங்கிரஸ் கலந்து கொள்ள முடிவு செய்ததல்லவா? இந்த வட்ட மேஜை மஹா நாட்டுக்கு அன்சாரியையும் ஒரு பிரதிநிதியாகத் தெரிந்தெடுக்க வேண்டுமென்று காந்திஜி சர்க்காரிடம் கேட்டுக் கொண்டார். ஆனால் சர்க்கார் செவிசாய்க்கவில்லை. இங்கிலாந்துக்குச் சென்ற பிற்பாடும் காந்திஜி இவரைத் தருவிப்பதற்குப் பிரயத்தனம் செய்தார். பிரயோசனப் படாது போயிற்று.

மகாத்மா காந்தியிடத்தில் அன்சாரிக்கு அளவற்ற பக்தியுண்டு. இதே போன்று காந்திஜியும் அன்சாரியைத் தன்னுடைய முழுமனதோடு நேசித்தார்

சமீபகாலத்தில் காந்திஜி, ஜனாப் ஜின்னாவுக்கு எழுதுகையில், "முஸ்லீம்கள் சம்பந்தப்பட்ட பிரச்னையில் நான் டாக்டர் அன்சாரியுடைய யோசனையையே கேட்பதுண்டு" என்று குறிப்பிட்டிருந்தது, காந்திஜிக்கும் அன்சாரிக்குமிடையேயிருந்த அந்யோந்யத்தைத் தெரிந்து கொள்வதற்குப் போதுமானது. தேச பக்தரும், தலைவருமான டாக்டர் அன்சாரி 1936-ம் வருஷம் மே மாதம் 9ந் தேதி சனிக்கிழமை இரவு 12-30 மணிக்கு தேக வியோக மடைந்தார்.

நான் ஒரு காரியவாதி. எனக்கு லட்சியந்தான முக்கியம். சாதனங்களைப்பற்றி நான் கவலைப்படுவதில்லை. என்னுடைய லட்சியத்தை அடைவதற்கு, எந்தச் சாதனங்களையும் நான் கையாளுவேன்.

—சாணக்கியன்

—"தேசிகன்"

விவசாயம்

நம்முடைய தேசத்தில் விவசாயிகளின் நிலைமை நாளுக்கு நாள் க்ஷீணித்துக் கொண்டே வருகிறதென்பது யாவரும் அறிந்த விஷயம். தங்களுடைய உழைப்பால், தங்களுடைய நிலங்களில் விளையும் தானியத்தால் உலகத்தையெல்லாம் ரட்சித்து வரும் விவசாயிகள், தங்களுக்கு அரை வயிறு நிறையக் கஞ்சி கிடைப்பதற்கும் வழியில்லாது அவதிப்படுகிறார்களென்றால் இது ஒரு அதிசயமான சங்கதிதான். எந்தத் தேசத்திலுமே, விவசாயிகளுக்கு இவ்வித அவதி வளர்ந்து வருமானால், அதை ஒரு செழிப்புள்ள நாடாகக் கருத முடியாது. அந்நிய நாட்டு அரசியல்களைப் பற்றியும், பொருளாதாரச் சிக்கல்களைப் பற்றியும் பத்திரிகைகளில் நீங்கள் பத்தி பத்தியாகப் படிப்பதற்கு விஷயங்கள் வரும். ஆனால், பக்கத்தில் வயிற்றுக்கில்லாது, வாடியேங்கி நிற்கிறானே அந்த விவசாயியைப் பற்றி நீங்கள் படிக்க முடியாது. எந்தத் தேசமும், செழிப்புற வேண்டுமானால், முதலில் விவசாயப் பிரச்னை தீர்க்கப்பட வேண்டும். இதை முன்னிட்டேதான் "ஜோதி" வாசகர்களுக்கு நான் இக்கட்டுரையைக் கொடுக்கிறேன். இதை நீங்கள் படித்து நன்றாக ரசித்தீர்கள், இப்படியுள்ள விஷயங்களை நீங்கள் நன்கு விரும்புகிறீர்கள் என்பதையும், உங்களுடைய விருப்பத்தால் ஏற்படும் பலனையும் நான் நேரடியாகத் தெரிய முடியாதுதான். ஆனால், "ஜோதி" தெரிந்து கொள்ளுமல்லவா?

சென்ற நூறு வருஷங்களாக நம்முடைய தேசத்தின் ஜனசங்கியை பெருகிக் கொண்டே வருகிறது. ஆனால், தேசத்தில் தொழில் வளர்ச்சி, ஜனப் பெருக்கத்திற்குத் தகுந்தபடி பெருகி வராது, நடைபெற்றுக் கொண்டிருந்த தொழில்களும் நசித்துப் போய்விட்டன. ஜனங்கள் பார்த்து வந்த இதர தொழில்கள் நசித்துப் போய்விட்டதால், அவர்கள் விவசாயத் தொழில் ஒன்றிலேயே ஈடுபட வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டு விட்டது. இதனுடைய பலன் என்ன ஆயிற்றென்றால் நம்முடைய தேசத்தின் பொருளாதார நிலைமையில் ஒருபெரிய, ஆனால் பயங்கரமான மாறுதலை ஏற்படுத்தி விட்டது. தேசத்தின் பெருவாரியான ஜனங்கள்விவசாயம் ஒன்றையே தங்களுடைய வாழ்க்கைக்கு முக்கிய ஆதாரமான தொழிலாகக் கொண்டதால் நிலங்களின் விலை ஏறத்தொடங்கியது. நாளடைவில் விவசாயம் செய்வதற்கேதுவான பூமிக்கும் பஞ்சம் ஏற்பட்டது.

தேசத்தின் அதிகப்படியான ஜனங்கள் விவசாயத்தொழில் ஒன்றிலேயே பிரவேசித்ததால், கீழ்க்கண்ட மூன்று வித பயங்கரமான நிலைமைகள் ஏற்பட்டன. (1) பெரும்பாலான விவசாயிகளுக்கு, அவர்களுடைய வாழ்க்கைத் தேவைக்குப் போதுமான தான்யம் விளையக்கூடிய நிலங்கள் இருப்பதற்கு வழியில்லாதுபோயிற்று. (2) படிப்படியாக, தங்களுடைய நிலத்தை இழந்துவிட்டு, கூலி வேலை செய்து தங்களுடைய வயிற்றை வளர்க்கும்படியான ஒரு கோஷ்டி கிராமங்கள் தோறும் பெருகியது. (3) விவசாயிகளிடத்திலிருக்கும் நிலங்களும் பல இடத்தில் பிரிந்து கிடக்கின்றன. அதாவது ஒரு விவசாயிக்கு நான்குஏக்கர் நிலமிருந்தால், அந்த நிலம் ஒரே இடத்திலில்லாமல் நான்கு இடங்களில் இருக்கின்றன. இதனால் லாபந்தரக்கூடிய விதமாய் விவசாயம் செய்ய வழியில்லாது போயிற்று.

லாபமில்லாத விவசாயம்

ஒரு விவசாயி. அவனுக்கு மூன்று குழந்தைகள். அப்படியானால் அந்த விவசாயி, அவனுடைய மனைவி, மக்கள் ஆக ஐந்துபேர் கொண்ட குடும்பம் அது. தன்னுடைய மனைவி மக்களுடைய சகாயத்தால் அவன் பத்து ஏக்கர் நிலம் சாகுபடிசெய்ய முடியும். நிலத்தை உழுவதற்கு ஒரு ஜோடி மாடுகளும் அவன் வைத்துக்கொள்ள வேண்டும். ஐந்துபேர் கொண்ட குடும்பம், ஒரு ஜோடி மாடு. இவ்வளவுக்கும் சாப்பாட்டிற்குக் கிடைத்து, கொஞ்சம் மீதம் வைக்கவேண்டுமானால், அந்தக் குடும்பத்திற்கு குறைந்தது பத்து ஏக்கர் நிலம் வேண்டியதிருக்கிறதென்பதாய் நாம் அறிகிறோம். பத்து ஏக்கர் நிலத்திற்குக் குறைந்திருக்குமானால், அந்த விவசாயிக்கும், அவனுடைய குடும்பத்திற்கும், ஒரு ஜோடி மாடுகளுக்கும் காணும்படியான வேலையிராது. அப்படி போதுமான வேலையில்லையானால், அதாவது அவனுக்கு, மேலே கண்டபடி நிலமில்லையானால், அவனுடைய குடும்பச் செலவுக்கும் மாடுகளை வைத்துக் காப்பாற்ற வேண்டிய செலவுக்கும் வரவுக்கும் கட்டுபிடியாகாது இந்த நிலைமையில், நாளடைவில் அந்த விவசாயி நிலங்களையும் மாடுகளையும்

விற்றுவிட்டு ஓட்டாண்டியாக வேண்டியதுதானே. கூலிவேலை செய்துதான் அவனும் அவனுடைய குடும்பமும் வயிறு வளர்க்கவேண்டும். இல்லையேல் கப்பலேறி அந்நிய நாடுகளில் மானங்கெட்ட வாழ்வு வாழவேண்டும். தேவைக்குப்போதுமான நிலம் இல்லையேயானால் அந்த விவசாயத்தில் லாபம் கிடைக்காது. நம்முடைய தேசத்திலே, பெரும்பாலான விவசாயிகளிடத்தில் அவர்களுடைய குடும்ப காலட்சேபத்திற்குப் போதுமான நிலம் இல்லை. நம்முடைய இந்தியாவில், ஒவ்வொரு விவசாயியிடத்திலும் சராசரியாக எவ்வளவு நிலமிருக்கிறதென்பதற்கு மாகாண வாரியாக சர்க்கார் கணக்கெடுத்திருக்கிறார்கள். அதாவது:—

மாகாணம்	ஏக்கர்	சென்ட்
சென்னை	4	5
வங்காளம்	3	—
பீகார்	3	—
அசாம்	3	—
மத்திய மாகாணம்	8	5
ஐக்கிய மாகாணம்	2	5
பம்பாய்	12	—
பஞ்சாப்	9	—

மேலே யிருக்கும் கணக்குப்படி பார்த்தால், பெரும்பாலான மாகாணங்களில், ஒவ்வொரு விவசாயிடத்திலும் ஐந்து ஏக்கர் நிலங்களுக்கும் குறைவாக இருப்பது விளக்கமாகத் தெரிகிறது. ஆனால் நாம் இங்கு இன்னொரு முக்கிய விஷயத்தையும் கவனிக்கவேண்டும். மேலே கொடுக்கப்பட்டிருப்பது சராசரி புள்ளியாகும். எத்தனையோ விவசாயிகளிடத்தில் இந்த ஐந்து ஏக்கர் நிலமும் இராதென்பதை நாம் மறந்துவிடக்கூடாது. இவ்வளவு குறைந்த நிலத்தையுடைய விவசாயி, லாபத்தை எதிர்பார்க்க முடியுமா? அப்படியானால் அவனுடைய கதியென்னவது? விவசாயிகளுடைய பொருளாதார நிலைமையைச் சீர்படுத்திவிட்டால் அவர்கள் க்ஷேமப்பட்டுவிடுவார்கள்; அவர்களுடைய கலி நீங்கிவிடும் என்று பல அறிஞர்கள் சொல்ல நான் கேட்டிருக்கிறேன். ஆனால் அவர்கள் நினைக்கிறபடி அவ்வளவு சுலபமாகத் தீர்த்துவிடக்கூடிய பிரச்னை இது இல்லையென்பதை அவர்கள் மறந்துவிடுகிறார்கள். இந்த விவசாயப் பிரச்னையைத் தீர்ப்பதற்கு நம்முடைய தேசத்தில் இதுவரை எத்தனையோ உபாயங்கள் கையாளப்பட்டிருக்கின்றன. ஆனால் பலன்தான் கிடைக்கவில்லை. சரியான காரணத்தைத் தெரிந்து அதற்குப் பரிகாரந் தேடாமல், மேல்போக்காகச் செய்யும் சீர்திருத்தங்களினால் எப்படி நன்மையேற்பட முடியும்? ஆனால் இப் பிரச்னையைத் தீர்ப்பதற்கு வழியில்லாமலுமில்லை. தேசத்தில் வேறு கைத்தொழில்களைப் பெருக்க வேண்டும். அளவுக்கு மீறி நிலங்களையே நம்பிக்கிடக்கும் ஜனங்களுக்கு இந்தத் தொழில் ஸ்தாபனங்களில் வேலை கிடைக்கும். இதனால் நிலத்தை நம்பி ஜீவிப்பவர்களின் எண்ணிக்கை குறையும். தேசத்தைப் பிடித்திருக்கிற தரித்திரம் விலகும். நம்முடைய தேசத்தின் பொருளாதார நிலைமை மிகவும் மோசமான ஸ்திதியை அடைந்துவிட்டது. இதை இன்னமும் இப்படியே வளரவிட்டுக் கொண்டு போனால் ஒரு பயங்கரமான நிலையை அடைந்துவிடும். அதனுடைய பலன்

என்ன ஆகுமென்பதைச் சொல்லவே தேவையில்லை. விவசாயத் தொழில் இருக்கிறதே அதைப்பற்றி நம்முடைய இதிகாச புராணங்களில் பல படப்புகழ்ந்து கூறியிருக்கலாம். புனிதமான தொழிலென்று புலவர்கள் பறை சாற்றியிருக்கலாம். ஆனால் அந்த விவசாயத் தொழில் நிச்சயமற்ற தொழில் என்பதை யாரும் மறுக்கமுடியாது. நிலத்திலே தன் கையிலிருக்கும் விதையைப் போட்டுவிட்டதனாலோ, அல்லது நாற்றை நட்டுவிட்டதனாலோ அது விளைந்து வீட்டுக்கு வந்துவிடுமென்று விவசாயி நம்பியிருக்க முடியாது. இயற்கையின் விளைவாக அதற்குப் பல கஷ்டங்கள் ஏற்படுகின்றன. சரியான பருவகாலங்களில் மழை பெய்யாத காரணத்தால் வேளாண்மை சாவியாகப் போய்விடலாம்; அல்லது அதிக மழையினால் அழிந்து போய் விடலாம். இன்னும் பூச்சி புழுக்கள் முதலிய எத்தனையோ தொந்தரவுகளும் உண்டு. இப்படியான நஷ்டங்களேற்பட்டு விடுமானால் அந்த விவசாயினுடைய பொருளாதார அஸ்திவாரமே ஆட்டங்கண்டு விடுகிறது. அவனும் அவனுடைய குடும்பமும் பட்டினி கிடந்து மடியவேண்டியவர்களாகிறார்கள். இதனுடைய பலன் விவசாயிகளை மட்டுந்தான் பாதிக்கிறதா? இல்லை. இயற்கையின் விளைவால் விவசாய வரும்படிக்கு நஷ்டம் ஏற்படுமானால், விவசாயிகளுடைய வாங்கும் சக்தி குன்றி விடுகிறது. அதாவது அவர்களுடைய நாணயப் புழக்கம் நின்று விடுகிறது.

இதனால் தேச வியாபாரம் பாதகம் அடைகிறது. தேசத்தின் மில்களிலே தயாரிக்கப்பட்ட உள் நாட்டுப் பொருள்களின் வியாபாரம் அடியோடு நஷ்டமாகிறது. இன்னமும் பாருங்கள்; விளைந்த தான்யங்களில், விவசாயிகள், தங்களுடைய குடும்பத் தேவைக்குப் போக மிஞ்சியவற்றை விற்று விடுகிறார்கள். அப்படி விற்கப்படும் தான்யம் இதர நாடுகளுக்குச் செல்கின்றன. ஒரு வருஷம் விளையாது போகுமானால் விவசாயிகள் தான்யத்தை விற்க முடியாது. அவனே பட்டினி கிடந்து சாகும் போது, விற்பதற்கு அவனிடத்தில் தான்யம் எங்கேயிருக்க முடியும்? இதனால் அந்த வருஷத்தில் ரெயில்வேக்களுக்கு வரும்படி குறையும். இன்னமும் கவனிப்போம். அளவுக்கு மிஞ்சிய தான்யத்தை மிச்சம் பிடித்து வைப்பது விவசாயிகளுக்கு வழக்கமில்லை. தீர்த்த யாத்திரையிலோ, தேர் திருவிழாக்களிலோ கைகூசாது செலவு செய்யும் சுபாவமுடையவர்கள் விவசாயிகள். ஆனால் விளையாது பஞ்சம் வந்து விடுமானால், அவர்களுடைய தீர்த்த யாத்திரை, தேர் திருவிழா எல்லாம் அடைபட்டு விடும். இதனாலும் ரெயில்வேக்களுக்கு வரும்படி குறையும். சர்க்கார், நிலங்களுக்கு வரியைக் குறைக்க வேண்டியதேற்படுகிறது. பஞ்சப் பிரதேசங்களுக்கு ஏராளமாகப் பொருளுதவியும் சர்க்கார் செய்ய வேண்டிய அவசியம் நேரிடுகிறது. இதனால் சர்க்கார் பட்ஜெட்டில் துண்டு விழுகிறது. இதை ஈடுசெய்ய இதர வரிகள் விதிக்க வேண்டி வருகிறது. இதனால் மற்றவர்களும் பாதிக்கப் படுகிறார்கள். அதாவது, விவசாயிகளுக்கு நேரிடும் பொருளாதாரக்

கஷ்டம், தேசம் பூராவிலும் உள்ள பொருளாதார அஸ்திவாரத்தையே நிலைகுலையச் செய்து விடுகின்றது. இத்தனை இக்கட்டுகளும் பொருந்தியதாய் விவசாயத்தொழில் இருப்பதால் அதை அடியோடு விட்டுவிட வேண்டும் என்பது என்னுடைய அபிப்பிராயமு மில்லை; யோசனையு மில்லை. அதுவும் நம்முடைய இந்தியா விவசாயம் பெருத்த நாடு. எதிர்காலத்திலும் இந்தியாவில் விவசாயம் சிரேஷ்டமான தொழிலாகத் தானிருக்கும். என்னுடைய அபிப்பிராயம் என்னவென்றால், நம்முடைய தேசத்தில் அளவுக்கு மீறிய ஜனங்கள் விவசாயத் தொழில் ஒன்றையே நம்பி வாழ வேண்டியநிலை யேற்பட்டிருக்கிறதென்பதே. இந்த நிலைமை நீடித்திருக்கும் எந்த தேசமும் உருப்பட முடியாது. சரியாகப் பிரித்தோமானால் நம்முடைய தேசத்தில் ஒரு ஆள் ஒன்றுக்கு இரண்டு ஏக்கர் நிலங்கூடக் கிடையாது. இவ்வளவு குறைந்த நிலத்தில் வரும் வரும்படியைக் கொண்டு வேறு எந்த நாட்டிலும் ஒரு குடும்பம் வாழவே முடியாது.

மூலப் பொருள்களை விளைவிக்கிற விவசாயத் தொழிலும், அவற்றைப் பண்டமாகச் செய்கிற தொழில் ஸ்தாபனங்களும் சேர்ந்தே அபிவிர்த்தியடைந்து வந்தால் தான் அந்த நாடு க்ஷேமமாயிருக்க முடியும். நாடு க்ஷேமம் என்றால் அதில் வாழும் மக்கள் க்ஷேமமா யிருக்கிறார்களென்பதே அர்த்தம். இந்த இரண்டு தொழில்களும், அதாவது, விவசாயமும், இதர தொழில் ஸ்தாபனங்களும் சேர்ந்து அபிவிருத்தி யாகும்படி யான முறைகள் கையாளப்படவில்லையானால் அது, அந்த இரண்டு தொழில்களின் வளர்ச்சியையுந்தான் பாதிக்கும். இந்த விதமாகத்தான் மற்ற இதர நாடுகளில் இரு தொழில்களும் விருத்தியடைந்து வருகின்றன.

நான் மேலே கூறியிருப்பனவற்றால், நம்முடைய தேசத்தில் தொழில் ஸ்தாபனங்கள் பெருகுவது எவ்வளவு அவசியமாயிருக்கிறதென்பது தெரியவரும். தேசத்தின் தரித்திரம் நீங்குவதற்காக தொழில் ஸ்தாபனங்கள் அவசியமாயிருக்கிறதென்பதல்ல; விவசாயத் தொழில் க்ஷேமமடைய வேண்டுமானால் அந்தத் தொழில் ஸ்தாபனங்கள் அவசியமா யிருக்கின்றன. இந்த இரு தொழில்களினுடைய வளர்ச்சியும் பிரிக்க முடியாது பின்னிக் கிடப்பவை. அடுத்து, நிலமில்லாதிருக்கும் தொழிலாளிகளைப் பற்றிக் கவனிப்போம்.

கிராமத் தொழிலாளிகளின் பிரச்னை

பல வருஷங்களாக நம்முடைய தேசத்தில், இதர கைத்தொழில்கள் நசித்துப்போகும்படியான நிலைமை யேற்பட்டு விட்டதால், தேசத்தின் பெருவாரியான மக்கள் நிலத்தையே நம்பி வாழும்படியான ஸ்திதியேற்பட்டதையும், இதனால் நாளடைவில் விவசாயத் தொழிலாலும் வாழமுடியாது, மக்களிற் பலர் கூலி வேலை செய்து வாழும் படியான நிலைமை யேற்பட்டிருப்பதையும் நான் மேலே கூறி யிருக்கிறேன். இந்தக் கோஷ்டியானது தினே தினே பெருகிக் கொண்டே தான் வருகிறது. சுமார் ஐம்பது வருஷங்களுக்கிடையில் நம்முடைய தேசத்தில, நில புலம் இல்லாத இந்தக் கோஷ்டியானது சுமார் ஆறு கோடி

ஜனங்களாகப் பெருகி யிருக்கிறது. இவர்களுடைய நிலைமை உண்மையில் மிகவும் பரிதாபகரமானது. கொஞ்சம் செழிப்புள்ள காலமா யிருந்தால் இவர்களுக்குக் கிராமங்களில் வேலை கிடைக்கும். அதைக்கொண்டு அவர்கள் வயிறு வளர்க்கலாம். அப்படியில்லையேல், அவர்கள், பக்கத்திலுள்ள நகரங்களில், விறகு விற்றோ, அல்லது இதர தொழில் செய்தோ தங்கள் வாழ்க்கையை நடத்த வேண்டியதிருக்கிறது. ஒரு நாளாவது, இவர்கள் வயிறு நிறையச் சாப்பிட்டிருப்பார்களாவென்பது சந்தேகந்தான். வயிற்றுக்கே உணவில்லாத போது உடையைப்பற்றிக் கேட்க வேண்டியதேயில்லை. மானத்தை மறைத்துக் கொண்டு ஒரு சிறு துணி அவர்கள் சரீரத்தில் தொங்கிக் கொண்டிருக்கும். இந்த நிலைமை வளர்வது தேசத்தின் எதிர்காலத்திற்கு நன்மை கொடுக்கக் கூடியதில்லை. ஒரு பயங்கரமான நிலைமையை ஏற்படுத்தும் என்பதில் நீங்கள் யாரும் சந்தேகங் கொள்ளத் தேவையே யில்லை. துரதிஷ்டவசமாக நம்முடைய தேசத்தில், நிலபுலமில்லாத இக்கோஷ்டியின் எண்ணிக்கை நாளடைவில் பெருகிக் கொண்டே தான் வருகிறது. இதோடு, பிச்சைக்காரர்கள், பயித்தியங்கள், வேசையர்கள் இவர்களுடைய எண்ணிக்கையும் பெருகி வருவதை நாம் மறந்துவிடக் கூடாது. இந்தக் கோஷ்டிகளின் எண்ணிக்கை பெருகி வருகிறதென்றால், தேசத்தில் தரித்திரம் பெருகி வருகிறதென்பதுதான் அர்த்தம்.

நிலபுலமில்லாத இந்தக் கோஷ்டியினுடைய பிரச்னைக்குப் பரிகாரம், தேசத்தில்தொழில் ஸ்தாபனங்களின் அபிவிருத்திதான். தொழில் ஸ்தாபனங்களின் அபிவிருத்தி யென்றால், தேசம் பூராவிலும் ஆங்காங்கு வெறும் மில்களாகவோ, தொழிற்சாலைகளாகவோ திறந்து விட்டாற் போதும் என்பதில்லை. சேர்ந்தே குடிசைக் கைத்தொழில்களும் வளர்ந்து வர வேண்டும். இன்று இந்தக் குடிசைக் கைத்தொழில்களைப் பற்றிய பிரசார முயற்சி நம்முடைய நாட்டில் நடைபெற்று வருவதை நான் அறிவேன். ஆனால் எதிர்காலத்திலும், இக்குடிசைக் கைத்தொழில் முயற்சி நத்தை வேகத்தில் நடைபெறக்கூடாது. உலகம், நத்தை வேகத்தில் போய்க் கொண்டிருக்க வில்லையல்லவா? இயந்திர சாதனங்களின் உதவி கொண்டு குடிசைக் கைத்தொழில்கள் வளர்ச்சியடைவதற்கு வகை செய்ய வேண்டும். இது வரை நான் கூறிவந்தவற்றால், விவசாயத் தொழில் லாபம் தரத்தக்க விதமாய் நடை பெறுவதற்கும், நிலபுல மில்லாத தொழிலாளிகளுடைய தரித்திரப் பிரச்னை தீருவதற்கும், தேசத்தில் தொழில் ஸ்தாபனங்கள் அபிவிருத்தியடைய வேண்டுமென்பது ஏற்படுகிறது. அடுத்து, நிலங்கள் பிரிந்து கிடப்பதைப்பற்றிக் கவனிப்போம்.

பிரிந்து கிடக்கும் நிலங்களின் பிரச்னை

நிலங்களை நம்பி ஜீவிப்பவர்களின் தொகை அதிகமாக ஆக, அதற்குத் தகுந்தாற்போல் நிலங்களின் விஸ்தரிப்புக்கு இடமில்லாமல் உள்ள நிலங்களை, ஒவ்வொரு விவசாயியும் அவர்களுக்குள் சிறு சிறு நிலங்களாகப் பிரித்துக் கொள்ளும்படி ஏற்பட்டது. அப்படிப் பிரித்துக் கொள்ளப்பட்ட

சிறிய சிறிய நிலங்களும் ஒரே இடத்தில் இல்லாமல் பல இடங்களில் இருக்கின்றன. அதாவது ஒரு விவசாயிக்கு நான்கு ஏக்கர் நிலங்கள் இருக்குமானால், அந்த நான்கு ஏக்கர் நிலங்களும் ஒரே இடத்தில் இல்லாமல் சிறு சிறு துண்டுகளாகப் பல இடங்களில் பிரிந்து கிடக்கின்றன. இவ்விதம் பிரிந்து கிடக்கும் நிலங்களை "சிறிய சிறிய" நிலங்கள் என்று மட்டும் சொல்லிவிட்டால் போதுமோ? அது எவ்வளவென்று தெரிய வேண்டாமா? ஆனால் இந்தச் சிறிய நிலங்களை ஏக்கர் கணக்கு வீதம் சொல்வதைப் பார்க்கிலும் சிறு உதாரண மூலமாகக் கூறுகிறேன். "ஜோதி" வாசகர்களே! உங்களிற் பெரும்பாலோர், நிலங்களிலே ஏர் உழுவதைப் பார்த்திருப்பீர்கள், இந்த ஏர், போய்த்திரும்புவதற்குக் கூட காணமுடியாத அவ்வளவு சிறிய நிலங்களாகப் பிரிந்து கிடக்கின்றன. நம்முடைய நாட்டில் சில கிராமங்களிலே இப்படியுள்ள சிறிய நிலங்களை நான் நேரில் பார்த்திருக்கிறேன். இந்த நிலங்களை இவர்கள் ஏர் கொண்டு உழுது நடுவதில்லை; மண்வெட்டி கொண்டு வெட்டி நட்டு விடுகிறார்கள் இப்படியுள்ள சிறிய சிறிய நிலங்களும் நம்முடைய தேசத்தில் ஒவ்வொரு விவசாயிக்கும் ஏராளமாக இருக்கிறதா வென்றால் அதுவுமில்லை. தேச முன்னேற்றத்திலே பற்றுள்ளவர்கள் இதை சிறிய பிரச்னை யென்று தள்ளிவிட முடியுமா? பம்பாய் மாகாணத்தின் ஒரு கிராமத்திலே; இந்தச் சிறிய நிலங்களைப்பற்றிப் பரிசீலனை செய்த பிரசித்தமான பொருளாதார நிபுணர் டாக்டர் ஹெரால்ட்மென் என்ன கூறுகிறார் என்பதைக் கேளுங்கள். "153 விவசாயிகளிடத்தில் 729 துண்டு நிலங்களிருக்கின்றன. இந்தத் துண்டு நிலங்களில் 463 ஒவ்வொரு ஏக்கர் விஸ்தீரணம் உள்ள நிலங்கள், மற்றவை ஏர் திரும்ப முடியாத சிறிய துண்டுகள்." இதிலிருந்து நாம் என்ன தெரிகிறோம்? விவசாயிகளிடத்தில் உள்ள நிலங்களிற் பெரும்பாலானவை, சிறிய சிறிய நிலங்களாகவும், அவைகளும் ஒரே இடத்திலில்லாமல் துண்டு துண்டாகவும் கிடக்கின்றன என்பது தெளிவாகிறதல்லவா!

இவ்விதம் நிலங்கள் பிரிந்து கிடப்பதால், விவசாயத்தில் லாபத்தை பெறப் பார்க்க முடியாது போகிறது. மற்றும், காலத்திற்குத் தகுந்தவாறு இயந்திர சாதனங்களைக் கையாண்டு விஞ்ஞான முறையில் விவசாயத்தை அபிவிர்த்தி செய்யவும் வழியில்லை. நிலங்கள் சிறிது சிறிதாகப் பிரிந்து கிடப்பதால் விவசாயிகளுக்கு என்னென்ன கஷ்ட நஷ்டங்கள் ஏற்படுகின்றன வென்பதை வரிசைப் படுத்திக் கீழே தருகிறேன்.

(1) பருவ மழை பெய்யாது, நட்ட பயிர் தண்ணீரில்லாது வாடுவதாக வைத்துக் கொள்வோம். கிணறு வெட்டி, தண்ணீர் இறைத்து அந்தப் பயிர்களை விவசாயி காப்பாற்றிவிடக் கூடும். ஆனால், நிலங்கள் பிரிந்து சிறிய சிறிய துண்டுகளாகக் கிடந்தால் அவன் எத்தனை கிணறுகள் வெட்டுவது? எப்படித் தண்ணீர் இறைத்து அவன் விளைய வைக்கமுடியும். நிலங்கள் ஒரே இடத்திலிருந்தால் அவன் பயிர்களைக் காப்பாற்றி விடமுடியும். அதற்கு வழியில்லை.

(2) நிலங்கள் மூலைக் கொன்றாகக் கிடப்பதால், ஒரு நிலத்திலிருந்து இன்னொரு நிலத்திற்குப் போவதற்கு அந்த விவசாயிக்கு அநாவசியமாகக் காலம் விரயமாகிறது. பெரும்பாலான கிராமங்களுக்கு நம்முடைய தேசத்தில் ரோட்டு வசதியே கிடையாது அப்படியிருக்க நிலங்களுக்கு ஊடே ரோட்டுக்கு எங்கேபோவது? மற்றவர்களுடைய வயல்களைக் கடந்து செல்ல வேண்டியதிருக்கிறது. இதனால் சண்டைகள், கலகம் உண்டாகின்றன. கிராமங்களில் உண்டாகும் பெரும்பாலான கலகங்கள் மேற்சொன்ன காரணத்தாலேயே ஏற்படுவதை, கிராமங்களில் வாழ்பவர்கள் நன்றாக அறிவார்கள்.

(3) துண்டு துண்டு நிலங்களாயிருப்பதால், விளைபொருள்கள் நஷ்டப்படாமல் காவல் ஏற்படுத்த முடியவில்லை.

(4) சிறிய சிறிய நிலங்களாக வரப்புப் போட்டுத்தான் தடுக்க வேண்டியதிருக்கிறது. இவ்விதம் வரப்புப் போடுவதால் அநாவசியமாக இடம் நஷ்டமாகிறது.

(5) அடுத்த வயல்காரன் எந்த வேளாண்மை செய்கிறானோ அதைத்தான் இவனும் செய்யவேண்டும். ஏதோ காரணத்தால் அவன் நான்கு மாதத்தில் விளையக்கூடிய இளம் வித்தை விதைக்கிறான் அல்லது நடுகிறான் என்று வைத்துக் கொள்வோம். இந்த விவசாயினுடைய நிலம், ஆறு மாதத்தில் விளையக்கூடிய வலுத்த வித்தாக விதைத்தால், அல்லது நடவுசெய்தால் நல்லபலன் கிடைக்கக்கூடியதாயிருக்கிறது. ஆனால் இந்த விவசாயி அப்படிச் செய்யமுடியாது. பக்கத்து நிலப்பயிர் நான்கு மாதத்தில் கதிர்விட்டுப் பழுத்து விடும். அறுத்துக் கொண்டு போய்விடுவான். இவனுடைய நிலப்பயிர் ஆடு மாடுகளால் அழிந்து போகும். அடுத்த நிலக்காரன கொஞ்சம் சோம்பேரியாயிருந்தால் அவனுடைய நிலத்தில் மண்டும் களைகள் இங்கும் குடியேறி விடும்.

(6) சிறிய சிறிய தளைகளாக இருந்தால் சரியானபடி உரம் வைக்கவும் முடியாது. "உரம் செய்வான் உண்பான்" என்பது விவசாயிகளுடைய பழமொழி. சாதாரணமாக கிராமங்களில் பழக்கமுள்ளவர்கள், நிலங்களில் "ஆட்டுக் கிடை" நிறுத்துவதைத் தெரிந்திருப்பார்கள். ஒரு நிலத்தில் ஆடுகள் படுத்து அவற்றின் மூச்சுக் காற்றுப்படுவதாலும், நீர் விடுவதாலும் நிலத்திற்கு நல்ல உரம் ஏற்படுகிறதென்பது விவசாயிகளின் நம்பிக்கை. அவர்களுக்கு விஞ்ஞானமோ ரசாயனமோ தெரியாதிருந்தாலுங்கூட அநுபவ பூர்வமாக இதை அவர்கள் கண்டிருக்கிறார்கள். சிறிய சிறிய நிலங்களாயிருந்தால் அவற்றில் ஆட்டுக் கிடையை மறிப்பதெப்படி? இவ்விதமுள்ள நிலங்களில் விஞ்ஞான முறைப்படி விவசாயத்தை அபிவிருத்தி செய்ய முடியுமா?

நம்முடைய தேசத்தில் நிலங்கள் ஏன் இவ்விதம் சின்னம் சின்னமாகப் பங்கிடப் படுகின்றன? ஏற்கனவே பெரிதாயிருந்த நிலங்கள்தானே இவ்விதம் சிறிது சிறிதாகப் பங்கிடப் பட்டுச் சிறுத்து விட்டன? இதற்கு

முக்கியமான காரணம், நம்முடைய தேசத்தில் ஹிந்து, முஸ்லீம் சட்டப்படி, தகப்பனுடைய சொத்து அவனுடைய பிள்ளைகள்யாவருக்கும் சமமாகக் கிடைக்க வேண்டும். ஒரு தகப்பனுக்கு, நான்கு இடத்தில் நான்கு ஏக்கர் நிலங்களிருக்கின்றன. அவனுக்கு நான்கு மக்கள். அவர்கள் தங்களுடைய தகப்பனுக்குப்பின் மேற்கண்ட சொத்துக்களைப் பங்கிடும்போது, அந்த ஒவ்வொரு நிலத்தையும் நான்காகத் தடுத்து பதினாறு துண்டுகளாகச் செயது விடுகிறார்கள். இவர்கள் ஒவ்வொருவரும் ஒவ்வொரு நிலமாக எடுத்துக் கொள்ளக்கூடாதா என்று கேட்டு விடாதீர்கள். ஒரு நிலம் நல்லதாயிருக்கலாம். மற்றது மட்டமாயிருக்கலாம். அப்படியானால் பிரிக்க வேண்டியதைத் தவிர வேறு வழியில்லை. அவர்கள் ஒவ்வொருவரும் ஒவ்வொரு நிலத்தையும் பிரித்து எடுத்துக் கொள்ளத்தான் விரும்புவார்கள்; இது சகஜம். மேனாட்டு நாகரிகம் நம்முடைய தேசத்தில் பரவப்பரவ, தனிக் குடும்பமோகம் மிஞ்சிவிட்டது. கூட்டுக் குடும்ப அமைப்பு சிதைந்து போய் பிதுரார்ஜித சொத்துக்களாகிய நிலங்கள் சிறிது சிறிதாகப் பிரிக்கப்பட்டு நாளடைவில் சின்னபின்னமாகக் கிடக்கின்றன!

இவ்விதம் நிலங்கள் பிரிக்கப் பட்டு நஷ்டமாவதைக் கண்டு பல அறிஞர்கள் கவலை கொள்கிறார்கள் என்பதை நான் அறிவேன். ஆனால் இதைத் தடுப்பதற்கான சிறந்த பரிகாரந்தான் இது வரை ஒருவராலும் கண்டு பிடிக்கப்படவில்லை. தகப்பனுடையசொத்து மூத்தபிள்ளைக்குத்தான் கிடைக்க வேண்டுமென்றுசட்டம் செய்து விட்டால் இந்த அல்லலைத் தடுத்து விடலாமே என்று சிலர் சொல்லலாம். மற்ற சகோதரர்களுடைய கதி யென்னுவது? அவர்கள் வயிறு வளர்க்க வேண்டுமே? நம்முடைய தேசத்தில் உள்ள ஹிந்துக் குடும்பங்களோ, முஸ்லீம் குடும்பங்களோ இவ்விதச் சட்டத்தை ஒப்புக் கொள்ள மாட்டார்கள்; கண்டிப்பாக எதிர்ப்பார்கள். சில வருஷங்களுக்கு முன்னே, பம்பாய் மாகாண சர்க்கார் இந்தப் பிரச்னையைத் தீர்ப்பதற்கு "ஸ்மால் ஹோல்டிங்க்ஸ் ஆக்ட்" (சிறு தனைகள் சட்டம்) என்று ஒரு சட்டம் கொண்டு வருவதற்கு முயற்சித்தார்கள். அந்தச் சட்டப்படி, குறிப்பிட்ட ஒரு நிலம் இவ்வளவு விஸ்தீரணம் உடையதாயிருக்க வேண்டும் என்று நிர்ணயிக்கப்படும். அப்படி நிர்ணயிக்கப்பட்ட நிலத்தை ரிஜிஸ்தர் செய்ய வேண்டும். அவ்விதம் நிர்ணயிக்கப்பட்ட நிலத்தை எதிர் காலத்தில் எந்தக் காரணத்தைக் கொண்டும் பிரிக்கக் கூடாது. ஆனால் இந்த சட்டத்தை, ஹிந்து முஸ்லீம்கள் யாவரும் சேர்ந்து எதிர்த்தார்கள். சர்க்கார் தங்களுடைய் முயற்சியைக் கைவிட்டார்கள். மூத்தவன், தன்னுடைய மற்ற சகோதரர்களுடைய பாகத்தையும் விலைக்கு வாங்கிக் கொண்டால் என்ன என்று சில பேர் கேட்கலாம். முதலாவது, மூத்த சகோதரனுக்கு, தன்னுடைய மற்றச் சகோதரர்களுடைய நிலத்தையும் வாங்குவதற்குப் பணம் வேண்டும். சரி, தன்னுடைய பங்கு நிலத்தை அடகு வைத்தோ, கடன் வாங்கியோ மற்றச் சகோதரர்களுடைய பாகத்தையும் விலை கொடுத்து வாங்கி விடுவதாக வைத்துக் கொள்வோம். இளைய

சகோதரர்கள் அந்தப் பணத்தை வாங்கி யென்ன செய்வது? கொஞ்ச நாளில் பணத்தைச் செலவு செய்து ஊதி விட்டுக் கஞ்சிக்குத் திண்டாடு வார்கள். ஆனதால், தேசத்தில் தொழில் முயற்சி அபிவிர்த்திக்கு வழி தேடாமல் மேற் கண்டபடி எவ்விதச் சட்டம் செய்தும் இதற்குப் பரிகாரம் தேட முடியாது.

பிரிந்து கிடக்கும் நிலங்களின் பிரச்னையைத் தீர்ப்பதற்கு ஒரு வழி கண்டு பிடிக்கப்பட்டது. விவசாயிகள் தங்களுக்குள், நிலங்களைப் பரிவர்த்தனை செய்து கொள்ளும்படியான முறை கையாளப்பட்டது. ஆரம்பத்தில் பஞ்சாபிலும், பின்னே ஐக்கிய மாகாணம், மத்திய மாகாணம், இந்த மாகாணங்களிலும், காஷ்மீர், பரோடா சமஸ்தானங்களிலும் இந்த முறை அமுலுக்கு வருவதற்குப் பிரயத்தனம் செய்யப் பட்டது. அதாவது இந்த முறையென்ன வென்றால், ஒவ்வொரு விவசாயிக்குப் சேர்ந்தாற் போல் நிலங்களைப் பரிவர்த்தனை செய்து கொடுப்பதே. பஞ்சாப் மாகாணத்தில் இந்த முறை அமுலுக்கு வந்து, கூடியவரை நல்ல பலன் விளைந் திருக்கிற தென்றே சொல்ல வேண்டும். ஆனால் மற்ற மாகாணங்களிலும், சமஸ்தானங்களிலும் இந்த முறை வெற்றியைத் தரவில்லை. நிலங்களை ஒவ்வொரு விவசாயிக்கும் சேர்ந்தாற் போல் பரிவர்த்தனை செய்துகொடுப்பது கூடியவரை நல்ல முறையாயிருந்தாலுங்கூட, பின்னே, அந்த விவசாயிகளுடைய மக்கள் அந்த நிலங்களைத் துண்டு துண்டாகப் பிரித்துக் கொள்ளாமல் தடுக்கும்படியான விதி யொன்றும் இல்லை. இதனால் பழயபடி யும் இப்பிரச்னை கிளம்புவதற்கு வழியிருக்கிறது.

இந்தப் பிரச்னையை நல்ல முறையில் தீர்ப்பதற்கு இன்னொரு முறையைக் கையாளலாம். அதாவது நிலங்களைக் கூட்டுப் பண்ணை முறையில் சாகுபடி செய்வது. சோவியத் ருஷ்யாவில் நூற்றுக்குத் தொண்ணூறு பங்கு நிலங்களில் இந்தக் கூட்டுப் பண்ணைமுறை அமுலுக்குக் கொண்டு வரப்பட்டு இதனால், தான்ய உற்பத்தி யும் வெகு தூரம் அபிவிர்த்தி யடைந் திருக்கிறது. சோவியத் ருஷ்யாவில், கூட்டு முறையில் எப்படி விவசாயம் செய்யபபடுகிற தென்பதைச் சுருக்கமாய்ப் பார்ப்போம்.

ருஷ்யாவில் கூட்டுப் பண்ணைக்காக, நிலங்களைப் பகுதி பகுதியாக கிராம வீதம் பிரித்திருக்கிறார்கள். இவ்விதம் பிரித்திருப்பதில் நிலைமைக்குத் தக்கவாறு இரண்டு மூன்று கிராமங்களின் நிலங்களும் சேர்ந்திருக்கின்றன. விவசாயிகள் ஒவ்வொருவரும் இதில் மெம்பர்கள். அவர்களால் தெரிந்தெடுக்கப் பட்ட அங்கத்தினர்களைக் கொண்ட பஞ்சாயத்து சபை இந்தப் பண்ணைகளை மேற் பார்வை செய்கிறது. எவ்வளவு நிலத்தில் எவ்வளவு தான்யம் உற்பத்தி செய்யப்பட வேண்டும் என்பதை இந்தப் பஞ்சாயத்துச் சபையானது, சர்க்காருடைய விவசாய இலாகாவின் யோசனையைக் கேட்டுச் செய்கிறது. சர்க்காருடைய தொழில் ஸ்தாபனங்கள் தங்களுக்கு இவ்வளவு மூலப் பொருள்கள், அதாவது பண்டமாகாத விவசாய உற்பத்திப் பொருள்கள் வேண்டுமென்பதாய் முதலிலேயே அந்தக் கூட்டுப்பண்ணைகளுக்கு

ஆர்டர் கொடுத்து விடுகின்றன. ஒவ்வொரு மெம்பரும் வயல்களில் வேலை செய்ய வேண்டும். வேலை செய்யும் இவர்களுக்கு நிர்ணயஞ் செய்யப்பட்டிருக்கிற ஒரு கூலி கொடுக்கப்படுகிறது. ஒவ்வொரு இடத்திலும் விவசாய இலாகாவானது, விவசாயத் தொழிலுக்குத் தேவையான இயந்திர ஸ்டோர்கள் வைத்திருக்கிறது. இந்த இயந்திர சாலைகளிலிருந்து பண்ணைகளுக்குத் தேவையான இயந்திரச் சாமான்கள் வாடகைக்குக் கொடுக்கப்படுகின்றன. மேற் கண்ட இயந்திர சாலைகளில் பல நிபுணர்கள் வைக்கப்பட்டிருக்கின்றனர். அவர்கள் விவசாய சம்பந்தமான அபிவிர்த்தி யோசனைகளை விவசாயக் கூட்டுப் பண்ணைகளுக்குத் தெரிவிக்கின்றனர். இவ்விதம் யோசனை சொல்லும் நிபுணர்களுக்கு ஒரு தொகை கொடுக்கப்படுகிறது. எல்லாப் பண்ணைகளுக்கும், விவசாயத் தொழிலுக்கு அவசியமான விதை, உரம், இயந்திரங்கள், இதர பொருள்கள், ஏர் உழுவதற்கு மிருகங்கள் இவையாவுமிருக்கின்றன. இப் பண்ணைகளில் வேலை செய்யும் அங்கத்தினர் ஒவ்வொருவருக்கும் அவர்களுடைய யோக்கியதைக்குத் தகுந்தவாறு கூலி கொடுக்கப்படுகிறது.

நிலங்களுக்காக, சர்க்காருக்குச் செலுத்தும்வரிக்காவும், இயந்திர சாலைகளுக்குக் கொடுக்கும் வாடகைக்காகவும், விவசாய வேலை செய்யும் அங்கத்தினர்களுக்குக் கொடுக்கப்படும் கூலிக்காகவும் பணம் வேண்டு மல்லவா? இந்தப் பணத்திற்காக: கூட்டுப் பண்ணைகள், நிலங்களில் மூலப் பொருள்களை உற்பத்தி செய்து அவற்றைச் சர்க்காருடைய தொழிற்சாலைகளுக்கு விற்று விடுகின்றன. இது தவிர கொஞ்ச நிலங்களில், அந்தந்தக் கிராமங்களுக்குத் தேவையான உணவுப் பொருள்களை உற்பத்தி செய்து அவற்றை அப்பண்ணையில் வேலை செய்யும் எல்லா அங்கத்தினர்களுக்கும் சமமாகப் பங்கிட்டுக் கொடுக்கிறார்கள். இவ்விதமாக ருஷ்யாவில் கூட்டு முறையில் விவசாயத் தொழில் நடத்தப் பெறுவதால் நல்ல பலன் கிடைத்திருக்கிறதென்பதில் சந்தேகமேயில்லை.

ஆனால் இதே முறையை நம்முடைய தேசத்திலும் அமுலுக்குக் கொண்டு வருவதற்குப் பல கஷ்டங்களிருக்கின்றன. இந்த முறை வெற்றி பெற வேண்டுமானால் சர்க்காருடைய பூரண ஒத்துழைப்பு வேண்டும். இதோடு, பொருள்களைத் தயாரிக்கிற மில்களுக்கும், இந்தக் கூட்டுப் பண்ணைகளுக்கும் நேரடியான சம்பந்தமிருக்க வேண்டும். அப்போதுதான் அப்பண்ணைகளில் தயாரிக்கப்படுகிற தான்யங்களுக்கு, அதாவது மூலப் பொருள்களுக்கு நல்ல விலை கிடைக்க முடியும். ஆனால் நம்முடைய தேசத்தில் இந்தக் கூட்டுப் பண்ணை முறையைச் சில கிராமங்களிலே வேண்டுமானால் பரீட்சார்த்தமாக நடத்திப் பார்க்கலாம். சமீபத்திலே நிலங்களுள்ள விவசாயிகள் தங்களுக்குள் ஒன்று சேர்ந்து கூட்டு முறையில் நிலங்களைப் பயிரிடலாம். அவ்விதம் பயிரிட்டு விளையும் தான்யங்களைத் தங்களுக்குள் பிரித்துக் கொள்ளலாம். இப்படி அவர்கள் ஒன்று சேர்ந்து செய்வதால் நல்ல லாபத்தை அவர்கள் அடையமுடியும். நல்ல விளைவுண்டாகும். விளைவு அதிகமானால் விவசாயம் செய்வதற்குத் தேவையான பணம் அவர்களுக்கு குறைந்த

வட்டிக்குலேசாகக்கிடைக்க வழியேற்படும். இதனால் அவர்களுக்குப் பொருளாதாரத் துறையில் நல்ல பயன் கிடைப்பதோடு, தாங்கள் ஒன்று சேர்ந்திருப்பதால் உண்டாகும் சக்தியையும் விவசாயிகள் தெரிந்துகொள்ள முடியும். தங்களுடைய குழந்தைகளை அவர்கள் நல்ல முறையில் படிப்பிக்க முடியும். நிலங்கள் துண்டு துண்டாக பிரிந்துகிடப்பதால் இன்று எவ்வளவு கஷ்ட நஷ்டங்கள் இருக்கின்றனவோ அவைகள் விலகிப்போய் விவசாயிகள் க்ஷேமமடைவார்கள். ஆனால் இவ்விதம் விவசாயிகள் தங்களுக்குள் ஒன்று சேர்வதற்கு, முதலில் நம்பிக்கை வேண்டும்; கூட்டு முறையிலுள்ள சக்தியை அவர்களுக்கு உணர்த்த வேண்டும். அவர்களுக்கு அறிவைப் போதிக்க வேண்டும்.

ஆனால் இவ்விதம் கூட்டு முறையில் செய்யப்படும் விவசாய விஷயமாய் சில ஆட்சேபனைகளும் சொல்லபடுகின்றன. கூட்டு முறையில் நிலங்கள் பகுக்கப்படுமானால் சில விவசாயிகளுக்கு வேலையில்லாது போய்விடுமே, அவர்களுடைய ஜீவனத்துக்கு வழியென்ன என்று கேட்கப்படலாம். சில கைத்தொழில்களை யேற்படுத்தி அவர்களுக்கு வேலை கிடைக்கும்படி செய்ய வேண்டும். ஆனால் ஒன்று மட்டும் நிச்சயம். தேசத்தில் விவசாயத் தொழில் உன்னதியடைய வேண்டுமானால், தொழிற்சாலைகளும் பெருகவேண்டும். இந்த இரு தொழிலும் சேர்ந்தே அபிவிர்த்தியடைந்தால்தான் தேசம் க்ஷேமமாக முடியும். ஆனால் நம்முடைய தேசத்திலே, குடிசைத் தொழில்களைப் பெருக்குவதா? அல்லது பெரிய பெரிய மில்களை ஸ்தாபிப்பதா என்ற விஷயத்தில் மிகுந்த தர்க்கங்கள் நடக்கின்றன. தேசத்தின் அங்காங்குள்ள நிலைமைகளுக்குத் தகுந்தவாறு இந்த இரு தொழில்களுமே நடைபெறுவதற்கு முயற்சி செய்ய வேண்டும். தேசப் பற்றும் உலக ஞானமும் உள்ள அறிஞர்கள் இந்த விஷயத்தில் தங்களுடைய கவனத்தைச் செலுத்த வேண்டுமென்பது என் பிரார்த்தனை.

உங்களுக்குச் சுதந்திரம் வேண்டுமா, அல்லது வயிற்றுக்குக் கஞ்சி வேண்டுமா என்று விவசாயிகளை நோக்கிக் கேட்டால், ஐயா, எங்களுக்குக் கஞ்சிதான் வேண்டும் என்று அவர்கள் பதில் கூறுவார்கள். இந்தியாவில் முதலில் தீர்க்கப்பட வேண்டிய பிரச்னை வயிற்றுப் பிரச்னைதான்.

—ஜவஹர்லால் நேரு.

—மா. சர்மா B. A. (Hons.)

சிலப்பதிகாரம்:-விதி காட்டிய வழி

போக்கு

விடியற்காலம். மதி மறைந்து விட்டது. சூரியன் இன்னும் உதிக்கவில்லை. இருள் செறிந்து இருக்கிறது. ஊழ்வினை உள்ளத்தை ஓட்டியதால் கோவலனும் கண்ணகியும் வீட்டை விட்டுப் புறப்பட்டனர். விஷ்ணுவாலயத்தை வலங் கொண்டு, காலை வேளையில் காவிரியில் குளிக்கப் போவார் போல, யாவருங் காணாதபடி மறைந்து சென்று நகரத்தைக் கடந்தனர். காவிரி நதியின் வட கரையே ஒரு காத தூரம் நடந்து சென்றனர். எப்பொழுதும் வீட்டை விட்டு வெளியே சென்ற வழக்கமில்லாதவளாதலால் கண்ணகிக்கு வழி நடந்த வருத்தம் அதிகமாயிற்று. உதய சூரியனின் வெப்பமும் அவளால் தாங்க முடியவில்லை. ஆகையால் வழியில் இருந்த ஒரு சோலையில் இளைப்பாறத் தங்கினர்.

நிழலின் அருமை வெய்யிலிற் சென்றோர்க்குத்தான் தெரியும். நிழலையடைந்த பிறகு வெப்பத்தின் அளவும் மிக்குத்தோன்றும் அது போல நடத்தலின் வருத்தம் இளைப்பாறும் போது தான் தெரியும். கண்ணகிக்கு ஒரு காத தூரம் நடந்து வந்த கஷ்டம் சோலையைச் சேர்ந்த பிறகு தெரிந்தது. 'இனி மதுரைக்கு எவ்வளவு தூரம் நடக்க வேண்டுமோ' என்பதை நினைக்கும் போது அவளுக்கு ஏற்கனவே இருந்த கஷ்டம் அதிகப்பட்டுத் தோன்றிற்று. தன் மனத்திலிருந்த வருத்தத்தை மறைத்துக் கொண்டு, புன்னகை புரிந்து 'மதுரைக்கு இன்னும் எவ்வளவு தூரம் இருக்கிறது' எனக் கேட்டாள். அவள் சிரித்துக் கொண்டு கேட்ட போதிலும், கோவலனுக்கு அக்கேள்வி அவள் வருத்தம் காரணமாய் எழுந்தது என நன்றாய்த் தெரிந்தது. ஆகவே சமீபத்தில் இருக்கிறது என்று அவள் நினைத்துக் கொள்வதற்காக முப்பது காதம் என்னாமல் 'ஆறு ஐந்து காதந்தான்' என்றான்.

கவுந்தியடிகளைக் கண்டது

அவர்கள் தங்கிய சோலையில் ஒரு அருகன் ஆலயம் இருந்தது. அதைக் காணக் காதலரிருவரும் சென்றனர். அக்கோயிலின் ஒரு பக்கத்தில் வீற்றிருந்த கவுந்தியடிகள் என்னும் பெரியாரைக் கண்டு வணங்கினர். "அழகு குடிப் பிறப்பு, ஒழுக்கம் இவைகளையுடைய நீங்கள் தரித்திரத்தால் பிடிக்கப்பட்டார் போல வெளிக் கிளம்பிய காரணம் என்ன" எனக் கவுந்தியடிகள் கேட்டார். "மதுரைக்குச் சென்று பொருள் ஈட்டக் கருதி வந்தோம்" எனக் கோவலன் கூறினான் இதைக் கேட்ட கவுந்தி இரக்கமுற்று "ஐயோ! பரற் கற்கள் பொருந்திய காட்டு வழியையும் நாட்டு வழியையும். இவள் எப்படிக் கடப்பாள்? இவளை உடனழைத்துச் செல்லுதல் குடிப் பிறப்புக்கு ஏலாதது. ஆகவே போதலைத் தவிர்த்து உங்கள் ஊரைச் சேருங்கள்" எனக் கூறினார். கோவ

லனும் கண்ணகியும் இப்புத்தி மதியை ஏற்றுக் கொள்பவர்களாய்க் காணவில்லை. ஆகவே கவுந்தியடிகள் 'இனி விதி என்னென்ன செய்யுமோ என வருத்தப்பட்டவளாய்க் கோவலனை நோக்கி, "யானும் பெரியோரிடம் ஆகம நூல்களைப் பயில மதுரைக்குப் போக வேண்டுமென்றிருக்கிறேன். உம்முடன் வருகிறேன்" எனக் கூறினாள். கவுந்தியடிகள் சொன்னது கோவலனுக்கு மட்டற்ற மகிழ்ச்சியை அளித்தது. கண்ணகிக்கு ஒரு நல்ல துணை கிடைத்தது. பெரியோரைச் சேர்ந்திருக்கும் பாக்கியமும் அவர்களுக்குக் கிடைத்தது. ஆகவே அவன் கவுந்தியடிகளை நோக்கி "நீர் எங்களுடன் வருவதாகச் சொல்லியவுடனேயே, இவள் துயரெல்லாம் போக்கினேன்" என மகிழ்ச்சியுடன் மொழிந்தான்.

வழியினருமை

வெயிலின் நிழலைக் கண்ணுற் காணவும் பொறாதவள் கண்ணகி. ஆகவே பூக்கள் நிறைந்த குளிர்ந்த சோலை வழியாகச் செல்ல வேண்டும். அச்சோலைகளில் வள்ளிக் கிழங்கை வெட்டியெடுத்த குழிகளில் செண்பக மலர்கள் நிறைந்திருக்கும். குழிகள் இருப்பது தெரியாது சென்றால் அவற்றில் விழுந்து கஷ்டப்பட வேண்டி வரும். ஒருவாறு குழிகளை அறிந்து ஒதுங்கிச் சென்றால் தாழ்ந்த கிளைகளில் தொங்கிக் கொண்டிருக்கும் முற்றிய பலாப் பழங்கள் போவார் தலையில் முட்டும். இக் கஷ்டங்களுக்குப் பயந்து மரங்களில்லாத தோட்ட வழிகளில் சென்றால், பாத்திகளில் சருகுகளால் மூடப்பட்டிருக்கும் மஞ்சள் முளைகளும், பலாக் கொட்டைகளும் காலிற் குத்தி வருத்தும்.

சோலை வழியையும் தோட்ட வழியையும் விட்டு விட்டு வயல் வழியே சென்றால் மீனைத் தேடித் திரியும் நீர் நாய்களையும், கம்புள் சண்டை செய்யும் கயல் மீன்கள் புரளுவதையும் வாளை மீன்கள் பாய்வதையும், மலங்கு மீன்கள் மிளிர்தலையும் கண்ணகி கண்டு கலக்கமடைவாள். வயல்களிலெல்லாம் கரும்பு செழித்து வளர்ந்திருக்கும். அவற்றில தேன் வண்டுகள் கட்டிய தேனடைகளினின்றும் வழியும் தேன், வாய்க்கால்களில் ஓடும் ஜலத்துடன் கலந்திருக்கும். அதிக தாகம் ஏற்படும்போது தேன் கலந்த நீரைக் குடிக்கும் கஷ்டம் நேரும். இவைகளோடு ஒழியாது வரப்புகளிலெல்லாம் களைபறிப்பார் பறித்துப் போட்ட குவளை மலர்கள் நிறைந்திருக்கும். அக்குவளை மலர்களில் தேனை உண்ட வண்டுகள் மயங்கி அவற்றுடன் கிடக்கும். அவ்வழியே செல்வோர் தம்மையுமறியாமல் அவ் வண்டுகளைக் கொல்ல நேரிடும்;

வயற்பாதையை விட்டு கால்வாய்ப் பாதை வழியாய்ச் சென்றால், நண்டும் நத்தையும் தம்முடைய முடிவை எதிர்பாராமலே நடப்போர் கால்களில் வந்து தட்டும். அவை இறந்தால் அவற்றைக் கொன்ற பாவம் வழிச் செல்பவருக்கு நேரும். இவைகளைத் தவிர வேறு வழிகளுமில்லை. ஆகவே எல்லோரும் வழிநடக்கும்போது மிக ஜாக்கிரதையுடன் செல்ல வேண்டுமென வழியினருமையைக் கவுந்தியடிகள் அவர்களுக்கு எடுத்துரைத்தார்.

காவிரிக் கரையின் காட்சி

"கரியவன் புகையினும் புகைக்-
கொடி தோன்றினும்
விரிகதிர் வெள்ளி தென்புலம்-
படரினும்"

நீர்வளம் குறையாதுஓடுவது காவிரி. அதன் கரைகளில் செந்நெற் கழனிகள் சிறப்புடன் விளங்கும். கரும்பு எங்கும் பெருத்து உயர்ந்து வளர்ந்திருக்கும். கரும்புத் தோட்டங்களுக்கும், செந்நெற் கழனிகளுக்கும் இடையே பல நீர் நிலைகள் தாமரைப் புஷ்பங்கள் நிறைந்தனவாய் இருக்கும். அத்தாமரைக் காடுகளில் சம்பங் கோழியும் நாரையும் தம்முள் போர் செய்யும். சிவந்த கால்களையுடைய அன்னப் பக்ஷிகளும் கொக்குகளும் தம்முட் சண்டை செய்யும். கானக் கோழியும் நீர்க் காக்கையும் தத்தம் வலிமையின் அளவை பரீக்ஷிக்கும். உள்ளானும் குருகையும், கணந்துட் புள்ளும் மரக்கால் நாரையும், ஒரு பக்கத்தில் தங்களுக்குள் சண்டை செய்யும்போது ஏற்படும் முழக்கம் இரண்டு பெரிய வேந்தர் தம்முள் போர் செய்யும்போது ஏற்படும் ஆரவாரத்தை ஒக்கும்.

எருமைகள் சேறுபடிந்த உடம்பின் தினவைப் போக்க நெற் "பொரியை" உராய்வதால், புரிதேய்ந்து நெல் வயல்களில் விளைந்து கிடக்கின்ற செந்நெற்கதிர்த் தலையில் சிந்தும். சிந்தும் நெல்லைத் திரட்டிவரும் உழவர் உழத்தியர் ஒலி முழங்கும் ஒருபுறம். கழனிகளில் களைபறிப்பார் பாடும் பாட்டுக்களின் சப்தமும், ஏர் உழும் உழவர் பாடும் ஏர்ப்பாட்டுக்களின் சப்தமும் சேர்ந்து ஒலிக்கும் ஒருபுறம். களங்களிலே நெல்லை முகந்து அளப்பார் பாடும் முகவைப் பாட்டும், யாசகத்திற்கு வந்த பாணர் பாடும் பாட்டும் கலந்தொலிக்கும் ஒருபுறம். இங்ஙனம் எப்பொழுதும் பாட்டின் ஒலி ஒழியாது இருக்கும் காவிரிக் கரையை கவந்தியடிகளும் மற்றவரும் நடந்து சென்றனர். அவர்கள் கண்ட காக்ஷிகளும், கேட்ட முழக்கங்களும் வழிநடக்கும் வருத்தத்தை நீக்கின.

திருவரங்கம்

திருவரங்க நகரின் புறத்துள்ள ஒரு சோலையில் கவுந்தியடிகள் முதலியோர் தங்கியிருக்கையில் தருமஞ் சாற்றும் சாரணர் இருவர் வந்து தோன்றினர். 'முன்செய்த வினைகளெல்லாம் கெட்டோடுக' என்று உட்கொண்டு மூவரும் அச்சாரணரை வணங்கித் தொழுதனர். கவுந்தியை நோக்கி "காற்றில் வைத்த விளக்கைப்போல் உடலில் உயிர் நிற்காது. விளை நிலத்திட்ட வித்து போல நல்வினை தீவினைகள் பயன்தரும். அவற்றைத் தடுக்க முடியாது. அறவாழி அந்தணன் ஓதிய ஆகமங்களாகிய விளக்கொளியைப் பெற்றாலல்லது யாவரும் பிறவியாகிய சிறையினின்றும் வெளியேற முடியாது" என்ற நல்லுரைகளைச் சாரணர் அருளினர். அவர்களை நோக்கிக் கவுந்தி "என் செவிகள் காமவெகுளி மயக்கங்களை அறுத்தவன் நாமங்களை யல்லால் மற்றவைகளைக் கேட்க திறக்கமாட்டா. என் நாக்கு 'மலர் மிசை ஏகினவனுடைய' ஆயிரத்தெட்டு நாமங்களையே சொல்லும். என் கண்கள் 'பொறிவாயில் ஐந்தவித்தோன் அடிகளைத் தவிர வேறொன்றையும் காணமாட்டா. என் யாக்கை

அருளுருவோன் திருவுருவத்தை வணங்கவே நிலத்தே பதியும். என் இரு கைகளையும் அருகனுக்கே தூக்கி வணங்குவேன். என் தலையும் அவன் பாதமலர்களையே சூட்டிக்கொள்ள விரும்பும். என் மனமும் அந்தமில் இன்பத்தையடைய இறைவனருளிச் செய்த ஆகமத்தை உருவேற்றுமே யன்றி பிறிதொரு மொழியும் புகலாது என அருகனை ஏத்தலும், சாரணர் இருவரும் அவளுக்குப் பிறப்பைத் தரும் பாசம் கெடுக" என்று அருள் செய்துவிட்டுச் சென்றனர். பின் மூவரும் ஓடமேறி காவிரியின் தென் கரையை யடைந்து ஒரு சோலையினி டத்தே தங்கினர்.

ஒரு வறுமொழியாளனும், பரத்தை ஒருத்தியும் அங்கே வந்தனர். கண்ணகியும் கோவலனும் அவர்களுக்கு இரதியும் காமனும்போல் தோன்றினர். அவர்கள் யாரென அறிய ஆவல் எழுந்தது. கவுந்தியடிகளை நெருங்கிக் 'காமனும் இரதியும் போல் காட்சிதரும் இவர்கள் யார்?' எனக் கேட்டனர். "அவர்கள் எம் மக்கள். நீங்கள் கருதியபடி காமனும் இரதியும் அல்லர். அவர்களை அணுகாது அகன்று செல்லுங்கள்" எனக் கவுந்தி கூறினள். இதைக்கேட்ட மூடர் இருவரும் நகைத்து, மீண்டும் அடிகளை நோக்கி "ஒருவயிற்றிற் பிறந்தவர் புருஷனும் மனைவியுமாய் வாழ்வதுண்டென்று நீர் கற்ற நூல்களில் சொல்லியிருக்கிறதா?" என்று கேட்டனர். இத் தீமொழிகளைக்கேட்ட கண்ணகி நடுங்கிக் காதைப் புதைத்துக்கொண்டாள். கவுந்தியடிகளுக்குக் கோபமூண்டது. அவர்கள் நரிகளாகும் படிச் சபித்துவிட்டனர். இருவரும் குறுநரிகளாகிச் சத்தமிட்டதைக் கேட்ட கண்ணகிக்கும் கோவலனுக்கும் அவர்கள் மேல் இரக்கமூண்டாயிற்று.

நெறியி னீங்கியோர் நீரல கூறினு
அது அவர்கள்

அறியாமையென்றறியல் வேண்டும் என்று நினைத்து, கவுந்தியடிகளை வணங்கி அவர்களுக்குச் சாபவீடு தருமாறு வேண்டினர். கவுந்தியடிகளும் அவர்கள் வேண்டுகோளுக்கிணங்க ஒரு வருடங் கழித்துப் பழைய வடிவம் எய்துவர் என அருளினார். பின்வழிக்கொண்டு சென்று உறையூரை யடைந்தனர்.

மாடலன்

உறையூரில் ஓரிரவு தங்கி, மறுநாட் காலையில் மதுரைக்கு வழிக்கொண்டு பொழுதேறியவுடன் ஒரு சோலையில் இளைப்பாறத் தங்கினர். 'பழம் பகை காரணமாய்க் கடல் பஃறுளி யாற்றுடன் தன்நாட்டில் ஒரு பாகத்தைக் கவர்ந்துகொள்ள, நாடுபிடிக்க வடதிசையிற் சென்று கங்கை நதியையும் இமய மலையையும் அடுத்த தேசங்களைத் தனதாக்கிக் கொண்டு, தென் திசை யாண்டவனும், இந்திரன் அணிவித்த வலிபொருந்திய ஆரத்தைப் பூண்டவனும, மழையைப் பிணித்தாண்ட மன்னனுமாகிய பாண்டியன் பல ஊழிக்காலம் உலகைப் புரக்க வாழ்க' என்று பாடியபடி மாடலன் என்னும் மறையவன் வந்து சேர்ந்தான். அவனைக் கோவலன் "உன் ஊர் யாது? இங்கு வந்த காரணம் என்ன?" எனக் கேட்க, மாடலன்

தன் ஊர் மேற்கு மலைப்பிரதேசத்தி லுள்ள மாங்காடு எனக் கூறினான்.

திருமால் கிடந்த வண்ணம்

திருமகளை மார்பில் உடைய திருமால் தேவர்கள் தொழுதேத்த திரை விரியும் காவிரி யாற்றிடைக் குறையில் வலிமை பொருந்திய ஆயிரம் தலைகளையுடைய ஆதிசேஷன் மீது துயில்கின்றான். அக்காட்சி ஓங்கிய பொன் மலையின் மீது நீல நிறம் பொருந்திய மேகம் பக்கங்களில் விரிந்து மிகாமல் ஒக்கப் படிந்ததுபோல் அழகுடன் திகழும்.

நீல மேக நெடும்பொற் குன்றத்துப்
பால்விரிந் தகலாது படிந்தது போல
ஆயிரம் விரித்தெழு தலையுடை
யருந்திறல்
பாயற் பள்ளிப் பலர்தொழு தேத்த
விரிதிரைக் காவிரி வியன்பெருந்
துருத்தித்
திருவமர் மார்பன் கிடந்த
வண்ணமும்.

திருமால் நின்ற வண்ணம்

அருவிநீர் மிக்குடைய வேங்கட மென்னும் மலையின் மீது பகையை வருத்தும் சக்கரத்தையும் சங்கையும் அழகிய தாமண் மலர்போன்ற கைகளில் முறையே வலனுமிடனுமாக ஏந்தி, அழகொழுகும் ஆரத்தை திருமார்பிற் பூண்டு, பொன்னாலாய பீதாம்பரத்தை யணிந்து திருமால் நிற்கிறான். அது சூரியனும் சந்திரனும் இரண்டு பக்கங்களில் பிரகாசிக்க, இடை நிலத்தே நின்ற நல்ல நீல நிறமுடைய மேகம், வான வில்லாகிய ஆபரணத்தைப் பூண்டு, மின்னலாகிய புதுப் புடவையை யுடுத்து நிற்பது போன்ற அழகிய காட்சியை ஒக்கும்.

ஓங்குயர் மலையத் துச்சி
மீமிசை
விரிகதிர் ஞாயிறுந் திங்களும்
விளங்கி
இருமருங்கு ஓங்கிய இடைநிலைத்
தானத்து
மின்னுக்கொடி உடுத்து
விளங்குவிற் பூண்டு
நன்னிற மேகம் நின்றது
போலப்
பகையணங் காழியும் பால்வெண்
சங்கமும்
தகைபெறு தாமரைக் கையின்
ஏந்தி
நலங்கிளர் ஆரம் மார்பிற்
பூண்டு
பொலம்பூ ஆடையிற் பொலிந்து
தோன்றிய
செங்கண் நெடியோன் நின்ற
வண்ணமும்.

மதுரைக்கு வழி

இவ்விரண்டு கோலங்களையும் கண்கள் காண வேண்டு மென்று, அவன் உள்ளத்தைக் கலக்கின என்றும் அதனால் அவற்றைக் கண்ணாரக் காணப் புறப்பட்டவன் பாண்டியன் சிறப்பையும் செய்கையையும் கண் குளிரக் கண்டதனால் அவனை வாழ்த்தியபடி வந்ததாகவும் மாடலன் தெரிவித்தான். பாண்டிய நாட்டிலிருந்து வருபவனாதலால் அவனைக் கோவலன் மதுரைக்குச் செல்லும் வழியைச் சொல்லுமாறு கேட்டான்.

வன்கணமை பொருந்தியவர், குடியோம்பும் குணமில்லாதார். அப்படிப்பட்ட அமைச்சரை அடக்கி ஆளாது, அவர் சென்ற வழியே அரசனும் நின்றான். தாங்க முடியாத வரிகள் விதிக்கப்பட்டன. செல்வம் பொருந்திச் சிறப்புடன் வாழ்ந்த குடிகள் தரித்திர தசை யடைந்தனர். நாடு வளம் குன்றிப் பாழ்பட்டது. அத்தேச அமைச்சர் போல வன்கண்மை பொருந்தியது வேனிற் காலம். அவ்வேனிற் காலத்தை அமைச்சனாகக் கொண்டான் சூரியன். சூரியன் இயற்கையிலேயே வெப்பத்தைத் தரும் இயல்புடையவன். அமைச்சனும் அவனை ஊக்கவே தாங்க முடியாத வெப்பத்தை வெளிப்படுத்தினான். மலைகளிலும் காடுகளிலும் இருந்த அழகிய மரங்களும் செடிகளும் வாடி உலர்ந்தன. அருவிகளும், கானாறுகளும் நீர்வற்றின. வெப்பத்தினால் நிலம் பிளந்து மேற் பரப்புப் பாளம் பாளமாய்க் கிடந்தது. வேனிற் காலத்துக்கு அழகு பொருந்திக் கண்டோர் விரும்பும் காட்சிகளை உடைத்தாயிருந்த காடுகளும் மலைகளும், இப்பொழுது சேர்ந்தாரை வருத்தும் பாலை நிலத் தன்மையை யடைந்தன.

"கோத்தொழில் ஆளரொடு
கொற்றவன் கோடி
வேத்தியல் இழந்த வியனிலம்
போல
வேனலங் கிழவனொடு வெங்கதிர்
வேந்தன்
தானலர் திருகத் தன்மையிற்
குன்றி
முல்லையுங் குறிஞ்சியு
முறைமையிற் றிரிந்து
நல்லியல்பு இழந்து
நடுங்குதுயர் உறுத்தும்
பாலை யென்பதோர்
படிவங் கொள்ளும்"

இப்படிப்பட்ட காலத்தில் இவ்வழியே மென்மைத் தன்மையுடைய இப்பெண்ணுடன் வந்தீரே! வழியெல்லாம் சிறிய கற்களும் மண்ணும் சேர்ந்து சிறிய குன்றுகள் போல் குவிந்து கிடக்கும். வழிகள் பல பிரிவதால் எந்த பாதையிற் போவது என்ற மயக்கம் போவோர்க்கு ஏற்படும். வழிப்பறி செய்யும் வேடர் நிறைந்தது. இவ்வளவு கஷ்டங்களுடைய இப்பாலை வனம் போன்ற பிரதேசத்தைக் கடந்து கொடும்பாளூர் நெடுங்குளம் என்னும் இரண்டு ஊர்களுக்கும் பொதுவான ஏரி தோன்றும். அவ் ஏரியின் கரையைக் கடந்த பின், சிவன் ஏந்திய சூலம் போல மூன்று வழிகள் பிரிந்து போகும்.

வலப்பக்க வழி

வலப்பக்கத்து வழியில் சென்றால் விரிந்த தலைகளை உடைய வெண் கடம்பும், ஓமையும், வாகையும், மூங்கிலும், அடர்ந்த காடுகள் காணப்படும். மால் மரங்களும் நீர்வற்றிக் கிடக்கும். உண்ணா நீர் அகப்படாது உழைமான் உளைக்கும். வேடர் வதியும் சிற்றூர்கள் ஆங்காங்கே இருக்கும். அவற்றைக் கடந்து போனால் தென்னன் மலை தென்படும். அம்மலைச் சாரலில் முற்றியிருக்கும் நெல்லையும், வெட்டும் பருவத்தையுடைய கரும்பும், கொய்யக் கூடிய தினையும், வரகும், வெள்ளுள்ளியும், மஞ்சளும் நிறைந்து இருக்கும். தாழ்ந்த குலைகளையுடைய வாழையும், கமுகும், தெங்கும்,

மாவும், பலாவும் அடர்ந்து வளர்ந்திருக்கும். அவ்வளப்பம் பொருந்திய மலையை வலப்பக்கமாகக் கொண்டு, அதன் இடப் பக்கத்தில் செல்லும் வழியிற் சென்றால் மதுரையை அடையலாம்.

இடப்பக்கவழி:

இடப்பகக வழியில் வண்டுகள் மகிழ்ந்து பாடும் சோலைகளும், தோட்டங்களும், வயல்களும் நிரம்பியிருக்கும் அவற்றைக் கடந்து சென்றால் திருமால் குன்றம் தோன்றும். அம்மலையில் மயக்கந்தரும் குகை வழி ஒன்றுண்டு. மலைக்கண் உள்ள திருமாலின் சேவடிகளைக் கையால் தொழுது மனத்தால் நினைத்து, வாக்கால் துதித்து அம்மலையை மூன்று முறை வலம் வந்தால் அழகிய பெண் ஒருத்தி தோன்றுவாள். அவள்

"இம்மைக் கின்பமும்
மறுமைக் கின்பமும்
இம்மையு மறுமையும்
இரண்டும் இன்றியோர்
செம்மையின் நிற்பதும்
செப்புமின் நீயிர்"

எனக்கேட்பாள். அவளுக்கு விடையாக முறையே புகழ், புண்ணியம், மோக்ஷம் எனச் சொன்னால், குகைக்குச் செல்லும் வழியில் விடுப்பாள். அவ்வழியில் பல இடை வாயில்கள் உண்டு. அவற்றின் கடைசியில் இரண்டு கதவுகள் இணைந்த வாயிலில் ஒரு பெண் தோன்றுவாள். அவள் கேட்கும் இறுதியில் இன்பம் யாது? எனுங் கேள்விக்குப் பதில் கூறியவுடன், சிறப்புடைய மூன்று பொய்கைகளைக் காட்டி அவைகளின் சிறப்பையும் கூறுவாள். புண்ணிய சரவணம் எனும் பொய்கையில் மூழ்கினால் ஐந்திர வியாகரணத்தை அறியலாம். பவகாரணி எனும் பொய்கையில் ஆடினால் பழம் பிறப்பைத் தெரிந்து கொள்ளலாம். இட்ட சித்தி எனும் மூன்றாம் பொய்கையில் மூழ்கினால் நினைத்ததை எல்லாம் எய்தலாம். குகை வழியில் செல்ல விருப்பமில்லாதவர் திருமால் குன்றத்துக் கடவுளை வணங்கிப் பின் மதுரையைச் சேரலாம்.

நடு வழி

இவ்விரண்டு வழிகளைக் காட்டிலும் இடைப்பட்ட வழி நல்லது. அவ்வழியில் இனிய பொழில்களும், நெடிய வயல்களும் சூழ்ந்த ஊர்களும், அவற்றின் இடையிடையே கனியும் கிழங்கும் கணக்கின்றித் தரும் காடுகளும் பல உண்டு. அவற்றைக் கடந்து செல்லும் போது வழியில் போவாரைத் தடுக்குந் தெய்வம் ஒன்று உண்டு அதையும் தப்பிச் சென்றால் மதுரைக்குப் போகும் பெருவழியை அடையலாம். இவ்வாறு மதுரைக்குச் செல்லும் வழிகளையும், வழிகளில் உள்ள காட்சிகளையும் கூறி நானும் 'என் வழியே போகிறேன்' எனச் சொல்லி மாடலன் எழுந்தான்.

கவுந்தியின் கட்டுரை:

மாடல மறையவனை நோக்கி, "நல் ஒழுக்கத்தையும், வேதவித் பத்தியையுமுடையவனே! தேவர்கள் தலைவனாகிய இந்திரன் இயற்றிய ஐந்திர வியாகரணத்துள்ளவைகளை எம் அருகன் அருளிய பரமாகமத்தில் காணலாம். அதற்காகப் புண்ணிய சரவணத்தில் மூழ்க வேண்டாம். மூற்

பிறப்பிற் செய்தவற்றை இப்பிறப்பிற் காண்கின்றாய் அல்லவா? பவகாரணியில் ஏன் படிய வேண்டும்? வாய்மை, கொல்லாமை இவ்விரண்டையும் வழுவாது ஓம்புவார்க்கு இவ்வுலகில் எய்த முடியாதது ஒன்றுண்டோ? இட்டசித்தியில் குளித்தல் ஏன்? ஆகையால் குகை வழியே செல்ல வேண்டிய அவசியமில்லை. நீ விரும்பும் தெய்வத்தைக் கண்டு தொழ உன் வழியே செல். நாங்களும் எங்களுக்கு விருப்பமான வழியே செல்லுகிறோம்' எனக் கவுந்தியடிகள் கூறினார்.

நலம்புரி கொள்கை
நான்மறை யாளா
பிலம்புக வேண்டும்
பெற்றியீங் கில்லை
கப்பத் திந்திரன்
காட்டிய நூலின்
மெய்ப்பாட் டியற்கையின்
விளங்கக் காணாய்
இறந்த பிறப்பின்
எய்திய எல்லாம்
பிறந்த பிறப்பிற்
காணாயோநீ
வாய்மையின் வழாது
மன்னுயிர் ஓம்புநர்க்கு
யாவது முண்டோ
எய்தா அரும்பொருள்.

மறையவனை அனுப்பி விட்டு மூவரும் இடை வழியே சென்றனர். கண்ணகியும் கவுந்தியடிகளும் வழி நடந்த வருத்தத்தால் ஓரிடத்தில் தங்கவும், அவர்களுக்குத் தண்ணீர் கொண்டு வரக் கோவலன் ஒரு பொய்கைக்குச் சென்றான்.

காணுறை தெய்வம்

மாடலன் கூறிய தெய்வம் மாதவியின் தோழியாகிய வயந்த மாலையின் வடிவில் தோன்றியது. காற்றால் நடுங்கிய கொடிபோல கோவலன் கால்களில் வீழ்ந்து பொய்க் கண்ணீரை உகுத்தது. "நான் எழுதிய ஓலையில் ஒரு தவறும் இல்லை. நீ அவரிடத்துக் கூறியவைகள் தவறுபோலும். அதனாலல்லவா கோவலன் எனக்குக் கொடுமை செய்தான் என்று செல்லி மாதவி என்முன்னே மயங்கி வீழ்ந்தாள். வீழ்ந்தவள் முனிவரும்' கற்றோரும் கல்லாது நன்மை தீமை யறிவோரும் இது மனதை ஒறுக்கும் வியாதி என்று கொண்டு பழிக்கும் இக்கணிகையர் வாழ்க்கை மிகக் கீழ்மைத் தனமுடையது' என்று சொல்லி கண்களில் முத்துப்போன்ற துளிகளைச் சொரிந்து தன்னுடைய அணிகலன்களை அகற்றியதோடு என்னையும் துரத்தி விட்டாள். நீங்கள மதுரைக்குப் போவதை, எதிர்ப்பட்டோர் சொல்லக் கேட்டு, வணிகர் கூட்டத்துடன் வந்தேன். அருளுக." என அத்தெய்வம் மிக உருக்கமாய் உரைத்தது. இக்காட்டில் மயக்கும் தெய்வமுண்டு என்று மாடலன் உரைத்ததை ஞாபகப்படுத்திக் கொண்டு கோவலன், 'அது தெய்வமா' வசந்தமாலையா? என்று அறிய ஒரு மந்திரத்தை ஜெபித்தான். அவன் கூறியது வலிமை பொருந்திய மந்திரமாதலால், காட்டுத் தெய்வம் அஞ்சி, தன் வரலாற்றை அவனிடம் கூறி, அது செய்த பிழையைக் கண்ணகிக்கும் கவுந்தியடிகளுக்கும் கூற வேண்டாமென்று கேட்டுக் கொண்டு விலகிப் போயிற்று.

பின் மூவரும் வழிக் கொண்டு சூரியன் மிக்க வெப்பத்துடன் காய ஆரம்பித்ததும், வழிப்பறிகொள்வதையே தொழிலாகக் கொண்ட வேடருக்கு வெற்றியைத் தரும் ஒரு காளி கோயிலில் தங்கினர்.

கவி யார்?

உலகம், எதை துக்கமாக மதிக்கிறதோ, அது கவிக்கு சுகம். தனம், உருவம், பலம், கல்வி புத்தி இந்த ஐஸ்வர்யங்களெல்லாம் மகா சிரேஷ்டமானவைகள்தான். உலகம் இந்த ஐஸ்வர்யங்களிலே தேன் வண்டுபோல மொய்த்துக் கிடக்கிறது. ஆனால், கவி இவற்றைச் சட்டை செய்வதில்லை. இவனை ஆகர்ஷிக்கும் சக்தி அந்த ஐஸ்வர்யங்களுக் கிடையா. கவி எந்த வஸ்துக்களை ஆலிங்கனம் செய்து கொள்கிறான்? எந்தப் பொருள்களை அவன் காதலிக்கிறான்?

அணைந்து கிடக்கும் நம்பிக்கைகள், இடிந்து கிடக்கும் எண்ணங்கள், ஒடிந்து கிடக்கும் இதயத்தின் கண்ணீர். இவைகளே அவன் ஆலிங்கனம் செய்யும் வஸ்துக்கள் காதலிக்கும் பொருள்கள். இவைகளில் பிரியமில்லாதவன், இவைகளில் ஒன்றிப் போகாதவன், அலங்காரமான புலவனுமிருக்கலாம்; ஆனால் கவியாக மாட்டான். வாழ்க்கையின் ரகசியமான இயற்கைக் காட்சிகளை, இயற்கை அழகுகளை, இவ்வுலகம் விநோதப் பொருளாகக் கருதுகிறது. ஆனால், அவற்றிலே லயித்து விடுகிறான் கவி.

——பிரேம்சந்த்

—"சுவாமி துரியானந்தர்"

சாதனை பயில்வாருக்கு

(ஆசிரமவாசி நிர்வேதசைதன்யர் மொழி பெயர்ப்பு)

இந்து தர்மம் முழுவதும் வேதங்களை ஆதாரமாகக் கொண்டது. ஆகையால் புராணம், தாந்திரீகம் என்னும் வித்தியாசமான கொள்கைகள் வேதங்களுக்கு முரணானவையல்ல. இவையெல்லாவற்றிற்கும் வேதங்களே அடிப்படையாகும். சாதகன் இலகுவில் விஷயங்களை விளங்குவதற்காக இருஷிகள் பல்வேறு வியாக்கியானங்களை எழுதி அத்துடன் அநுஷ்டிக்கவேண்டிய அநுபவமுறைகளையும் சேர்த்துள்ளார். சாஸ்திரங்களை எழுதியவர், தங்கள் கொள்கைகள் வேதங்களை ஆதாரமாகக்கொண்டவை எனக் கூறுகின்றனர். வேதங்கள் முழுமையும் ஆராய்ச்சி செய்யாமல் 'இது வேதங்களிற் காணப்படவில்லை' என நாம் கூறினால் நமது வார்த்தை பிழையாகும் என்பதில் சந்தேகமேயில்லை. ஆனால் வெறும் சாஸ்திரப் படிப்பு பிரயோஜனமற்றது. ஒருவன் சாதனை பயிலவேண்டும்: அப்பொழுது குருவின் கிருபையினால் சாஸ்திரங்களின் மறைபொருள அவனுக்குத் தெள்ளிதில் விளங்கும். வெறுமனே 'கஞ்சா! கஞ்சா!' என்று கூறினால் வெறியுண்டாகுமா! ஒருவன் கஞ்சாவை வாங்கி தயார்பண்ணி புகைத்தாலல்லவா வெறியுண்டாகும். அப்பொழுது மயக்க மிகுதியால் 'காளிக்கு ஜே! காளிக்கு ஜே!' என்று கூத்தாடுவான்' என்று ஸ்ரீ ராமகிருஷ்ணர் கூறியுள்ளார்.

வீண் வாக்குவாதம் நன்மை பயப்பனவல்ல என்று சாஸ்திரங்கள் கூறுகின்றன. விஷயங்கள் தெளிவாக விளங்குவதற்கு வாக்குவாதம் ஒரு அளவுக்கு வேண்டியதுதான்; ஆனால் ஒருவன் சாதனையைத் தொடங்கிவிட்டால் அவனுடைய சந்தேகங்களெல்லாம் நிவர்த்தியாகின்றன. சாதனையின்றி சந்தேகங்கள் ஒழியாது. சந்தேகங்கள் எங்ஙனம் உள்ளத்தில் எழுந்ததோ, அதேபோன்று சாதகன் உண்மையை உணர்ந்தவுடன், அவை அவனைவிட்டு நீங்குகின்றன. இதுவே சாந்திநிலை என்று கூறப்படுவது. இறைவனின் திருவருளை எவன் பெறுகின்றானோ அவனே உண்மையை உணர்ந்தவன். வெறும் தர்க்கத்தினால் அல்லது வாக்குவாதத்தினால் ஒருவரும் இந்த நிலையை யடையவில்லை. தர்க்கம், புத்தி, பாண்டித்தியம் என்பவற்றினால் இந்த ஆத்மனை யடையமுடியாது என்பது வேதவாக்கு. இதைப் போன்ற நூற்றுக்கணக்கான சுலோகங்கள் இதற்குச் சான்றாகும். ஆராய்ந்துபார்க்கின் சாஸ்திரங்கள் தானென்ன? ஸ்ரீ ராமகிருஷ்ணர் சாஸ்திரங்களை சாமான் வாங்குஞ் சீட்டுகளுக்கு ஒப்பிடுவது வழக்கம். எல்லாச்

சாமான்களும் சரியாய் வந்துவிட்டதா என்று கணக்குப் பார்ப்பதற்கு அச் சீட்டு பிரயோஜனமாயிருக்கிறது. அதற்கப்பால் அது நமக்கு வேண்டியதில்லை. சாமான்கள் கிடைத்ததும் சீட்டை வீசிவிடுகிறோம். வீடு பெருக்கும்போது ஒருவர் கையில் அச் சீட்டு அகப்பட்டால் அதை அவர் பார்வையிட்டு 'அதெல்லாம் வாங்கியாயிற்று; சீட்டை வீசு' என்று வாசித்தவர் கூறுவார். சாஸ்திரங்களும் அதைப் போன்றவைதான். ஞானமும் சக்தியும் ஒருவனுக்குண்டாயின் அவனுக்கு என்ன பலன் கிடைக்குமென்பதைச் சாஸ்திரங்கள் கூறுகின்றன. நமது அநுபவங்களைச் சாஸ்திரத்தோடு ஒத்துப பார்க்கவேண்டும். நமது அநுபவங்களின்முடிபுகள் சாஸ்திரங்களில கூறப்படாவிடின் நமது இலட்சியத்தை யடைவதற்கு இன்னும் முயலுதல் வேண்டும். நமது அநுபவம் சாஸ்திரத்தில் கூறப்பட்டிருந்தால், நாம் சாஸ்திரங்களை வீசவேண்டியதுதான். இதுகாரணம்பற்றியே 'பிரம்ம ஞானத்தை அடைந்தவனுக்குச் சாஸ்திரமும் துரும்பு' எனக் கூறப்பட்டிருக்கின்றது. 'புராணம், வேதம், தாந்திரீகம் என்பனவற்றிலுள் ளஉண்மையைத் தனக்கு ஜெகன்மாதாவாகிய அம்பிகை காட்டியுள்ளாள்' என்று ஸ்ரீ ராமகிருஷ்ணர் கூறுவது வழக்கம். ஆதலினாலேதான் கல்வியறிவில்லாத போதிலும் பண்டிதர்களின் கல்விச் செருக்கை அவரால் அடக்க முடிந்தது. 'கலைவாணியாகிய அன்னையிடத்திலிருந்து ஒரு அறிவுக்கதிர் ஒருவனையடையின், புத்தகப் படிப்பெல்லாம் அதன் முன் எதிர் நிற்கமுடியாமல் மழுங்கிப் போகின்றன. அவ்வறிவொளியைப் பெற்றவனுக்கு கல்விக் குறைவில்லை' என்று ஸ்ரீ ராமகிருஷ்ணர் சொல்லியிருக்கிறார்.

பஞ்சேந்திரியங்களை அடக்குவது மிகவும் கஷ்டமான காரியம்; ஆனால் அதைவிட வேறு வழியுமில்லை. எந்த இந்திரியங்கள் முதலாவதாக வசப்படுத்த வேண்டுமென்று நீங்கள் கேட்கலாம். பகவான் எல்லா இந்திரியங்களையும் அடக்கவேண்டுமென்று கீதையில் கூறுகின்றார். ஒரு இந்திரியந்தானும் அடங்காததாகில் வேகாத மட்பாத்திரத்திலுள்ள ஜலம் ஒழுகுவது போல அறிவானது அந்த இந்திரிய வாயிலாக வெளிச் செல்லுகின்றது என்று மனு கூறுகின்றார். ஆகையால் எல்லா இந்திரியங்களையும் அடக்குதல் வேண்டும். எல்லா இந்திரியங்களையும் அடக்குதல் அரிது; ஆயினும் சுவை போகம் என்பனவற்றை அடக்குதல் அரிதினும் அரிதென்பதில் சந்தேகமேயில்லை. ஒருவன் எல்லா இந்திரியங்களையும் அடக்கியபோதிலும், தனது நாக்கைக் கட்டமுடியாதவன் இந்திரியங்களை அடக்கியவனுகான்; நா வசப்பட்டால் எல்லா இந்திரியங்களும் வசப்படும் என்று பாகவதங் கூறுகின்றது. ஆகையினால் சுவையை முதன்முதலாக வெல்ல முயலுதல் வேண்டும். ஆனால் பகவான் இன்னுமொன்று கூறுகின்றார். 'இந்திரியங்களை அடக்கியவனின்முன், பொருள்கள் தம் வசீகர சக்தியை யிழந்தபோதிலும், அவனுக்குப் பொருள்களின் மீது வாஞ்சையிருக்கத்தான்செய்யும்; ஆனால் இத் தரிசனம் பெற்றவனுக்கு இந்த வாஞ்சையும் ஒழிந்துபோகின்றது. அதாவது தபஞ் செய்யும்

போது ஒருவன் உண்ணாவிரதம் பூணுகின்றான் அச் சமயம் இந்திரியங்கள் உணவை ஒழிக்கப்போகிறது, உணவின்மீதுள்ள வாஞ்சை அழிக்கப்படவில்லை. கடவுள் தரிசனங் கிடைக்க பின்தான் அந்த வாஞ்சை நீங்கும். இதைக் குறித்தே ஸ்ரீ ராமகிருஷ்ணரும் 'கற்கண்டின் பாகைச் சுவைத்தவன் சர்க்கரையை ஒருபோதும் விரும்பான்' என்று கூறியது. அதாவது ஆண்டவனின்மீது பேரன்பு பூண்டவனுக்கு உலகின்மீது ஒருவித வாஞ்சையுமில்லை. இறைவனை நேசித்து அதன் மூலம் அவன் அன்பைப் பெறின் உலகப் பொருள்களின் வசீகர சக்தி ஒழிந்துபோகும். எல்லாப் பொருள்களும் பயனற்றதாகவும், வெறுக்கத்தக்கதாகவும் தோன்றும் 'எவ்வளவுக்குக் கீழ்த் திசையை நோக்கி செல்லுகின்றாயோ அவ்வளவுக்கு மேற்றிசையிலிருந்து அப்பால் செல்வாய்; அதேபோன்று எவ்வளவுக்கு ஆண்டவனை அணுகுகின்றாயோ அவ்வளவுக்கு உலகைவிட்டுச் செல்லுவாய்'. இது வெகு காலத்தில் நடக்கின்ற விஷயம். நாம் இதற்காக முயலவேண்டியதில்லை. இறைவனை நாடுதலே ஒரே எண்ணமாயிருக்கவேண்டும். நாம் இந்திரியங்களை அடக்கப் பிரயாசைப்படவேண்டியதில்லை; அவை தாமாகவே அடங்கும். ஆண்டவனை வழிபடுவதென்றால் அவனுக்கு நம்மை முற்றும் அர்ப்பணஞ் செய்வது என்பது பொருள் எல்லாவற்றிற்கும் மேலாக ஆண்டவனொருவனே எமது அன்புக்குரியவனாகவேண்டும். அவருடைய திருவருளை ஒருவன் பெறவேண்டும்; அதில்லாவிடத்து அவனால் ஒன்றும் முடியாது. 'ஒருவன் ஆண்டவனை நோக்கி ஒரு அடி எடுத்துவைத்தால், ஆண்டவன் அவனை நோக்கி பத்து அடி எடுத்து வைப்பார்' என்று ஸ்ரீ ராமகிருஷ்ணர் கூறுகின்றார். அதே ஒரு திடமான நம்பிக்கையுடன் ஆண்டவனை நேசிக்க முயலுவாயானால் அவருடைய கிருபையைப் பெறுவாய்.

சாப்பாட்டு விஷயத்தில் விசேஷ கவனஞ் செலுத்தவேண்டிய அவசியமில்லை. அற்பமான இச்சைகளைத் திருப்தி செய்வது அவ்வளவு பாதகமான காரியமல்ல ஆனால் அத்துடன் பகுத்தறிவு மிகுக்கவேண்டும். ஆண்டவனைத் தவிர வேறொன்றிலும் பற்று வைக்காமல் கவனமாயிரு. சாது சங்கம், கடவுளைப்பற்றிய நூல்கள், நற் சங்க கீர்த்தி என்பன பக்திக்கு ஏதுக்களாகும். ஆண்டவனை நோக்கிச் செல்ல முயல்வாயாகின் உனக்கு ஒரு அபாயமுமிராது. நீ அவரிடத்துச் சரணாகதியடைந்தால் உனது மனக்கவலையும் அபாயமும் நீங்கும். 'அவருடைய திருவருளினாலே சாந்தம், சாஸ்வதம் என்பவற்றை அடைவாய். ஆண்டவனுக்கு உன்னை அர்ப்பணஞ் செய்வாயானால் பேரானந்தப் பெரிய சுகம் உனக்குக் கிடைக்கும்.

மனைவி மக்களைப் பற்றி நீ ஏன் கவலைப்படவேண்டும்? அவனருளாலே அவனருள் வணங்கி உனக்குரிய எல்லாவற்றையும் ஆண்டவனிடத்து ஒப்படைத்துவிட்டுக் கவலையினின்றும் நீங்குவாயாக. மனைவி மக்கள், மற்றும் பொருள்கள் அனைத்தும் ஆண்டவனுடையவைதான. அவர்களைப் பாதுகாப்பதுமட்டும் உன்னுடைய கடமையாகும். 'ஒரு பணக்காரனின் வீட்டு வேலைக்காரி தனது எஜமான

னின் குழந்தையை 'எனது ஹரி' என்று கூப்பிடுவாள். ஆனால் அது தனது குழந்தையல்லவென்றும் அதை வளர்ப்பதே அவளுடைய கடமையென்றும் தனது சொந்த வீடு தூரத்திலேயுள்ள கிராமத்திலிருக்கிறதென்பதையும் அவள் நன்கு உணர்வாள் என்று ஸ்ரீ ராமகிருஷ்ணர் சொல்வது வழக்கம். எல்லாம் ஆண்டவனுடையதென்பதை யுணர்ந்து பற்றற்றிருப்பதே அகத் தியாகம். அத்தியாகம் உள்ளத்தைப் பொறுத்தது. புறத்தியாகம் அல்லது வெளித் தியாகம் இல்வாழ்வானுக்குரியதல்ல; அது துறவிகளுக்கே உரியது. இல்வாழ்வானுக்கு பகவான் கீதையில் அவர்கள் மீதுள்ள இரக்கத்தினாலே அவர் சிந்தைகளில் குடிகொண்டு அவர் நெஞ்சின் பயக்கிறமெல்லாம் பற்றயின் ஞான விளக்கொளியாலே பற்றறுவிப்பன்' என்றும் 'என்மீது மனதைச் செலுத்தியவர்களைச் சாவது முதலாயுள்ள துயர்க் கடலின்றுந் தாங்கி காலஞ் சிறிதிலே யெடுக்கின்றேன்' என்றும் 'பாவையினுள் மறைப்பரிய, பொருளினையே பற்றுகப் பற்றினால் பிறவிக், கருமேலை கடத்தேறக் கைதருவேன் கதிர் வேலோய்' என்றும் கூறுகின்றார்

எல்லோருடைய பொறுப்புகளையும் ஆண்டவர் ஏற்றுக் கொள்ளுகிறார். தாபசிகளின் சுமைகளை அவர் தாங்குகின்றார். ஞானிகள் பிறப்பை அஞ்சுகின்றனர். பக்தர்கள் பக்தியுடையரு பாறு இன்றமை இறைஞ்சுகின்றனர். "ஓ கேசவா! புழு பறவை விலங்கு, ராக்ஷஸன், பிசாசு, மனிதன் என்றும் எப்பிறவியில் பிறந்தாலும், உன்னுடைய கருணையினாலே நான் பக்தியில் உறுதியாக நிலைபெற்றிருப்பேனாக" என்று பக்தன் கூறுகின்றான். ஸ்ரீ ராமகிருஷ்ணர் எனக்கு ஒருமுறை பின் வருமாறு கூறினார்:— சிறுபான்மையுடையோரே நிர்வாண நிலையை விரும்புவர். அவர்கள் எப்பொழுதும் பயந்தவர்கள். சொக்கட்டான் விளையாடுவோர் தங்கள் காயத்தை (இலை) வீட்டுக்குக் கொண்டுபோக முயலுகின்றார். வீடு சேர்ந்தபின் காயங்களை வெளியே எடுக்க அவர்கள் விரும்புவதில்லை. இவர்கள் சாதாரண விளையாட்டுக்காரர் ஆவர். ஆனால் விளையாட்டில் கை தேர்ந்தவர், மற்றவர்களின் காயங்களைக் கொல்வதற்காக வீடு சேர்ந்த காயங்களையும் வெளியே எடுக்கப் பின்வாங்க மாட்டார்கள். அதன் பின்னர் வேண்டிய புள்ளியை வீசிக் காயங்களை வீட்டுக்குக் கொண்டு சேர்ப்பர். காயம் அவர்கள் வசமாயிருக்கிறது. காயத்தை எறிந்தவுடன் எந்தப்புள்ளி வேண்டுமோ அந்தப் புள்ளி அவர்களுக்கு விழும். ஆகையினால் அவர்கள் அச்சமின்றி விளையாடுகின்றனர்" இது உண்மையாக நடக்கிற காரியமா" என்று குருநாதரைக் கேட்டேன். "ஆம். அன்னையின் கிருபையினால் அப்படி நிலை ஏற்படுகின்றது. மிதமிஞ்சி விளையாடுவோரை அன்னை ஆனந்தமாய் மிகவும் விரும்புகின்றாள். நிர்வாணத்தை விரும்பி விளையாட்டை முடிப்பவர்களோடு அவர்களுக்கு அவ்வளவு விருப்பமில்லை. அன்னை லீலையை விரும்புகிறாள். ஆதலினாலே தான் பக்தர்கள் நிர்வாண நிலையை விரும்புவதில்லை" ஓ மனமே நீ சர்க்கரையாக வேண்டாம், நான் சர்க்

கரையைச் சுவைக்க விரும்புகிறேன்" என்றான் பக்தன்.

கடவுள் தரிசனம் பெறுவதற்கு அபரிமிதமான வாஞ்சை இருக்க வேண்டியது அவசியந்தான். ஆனால் மனமானது சாந்தி யடையவில்லையே என்று கலக்க மடைதல் நல்லதன்று. ஆண்டவரைத் தனது இலட்சியமாக் கொண்டு அவரை யடைவதற்கு மிகவும் பொறுமையாயிருக்க முடியுமானால் அதே பெரும் பாக்கியம் என்பதை ஒருவன் உணரவேண்டும். ஈஸ்வரன் தன்னை நினைக்கும்படி உன்னை ஏவுகின்றான்; இதே அவருடைய பெருங் கருணையைக் காட்டுகின்றதல்லவா? மனதைச் சாந்தமாக்குவதும் அமைதியினமாக்குவதும் இவருடைய கையில் தான் தங்கி யிருக்கின்றது. அவரை நினைக்கும்படி நம்மை ஏவுவதே நமக்குப் போதுமானது. அவருடைய வழிபாட்டில் சதா ஈடுபட்டிருக்கும்படி நீ பிரார்த்தனை செய். மனம் அமைதி யடைய வேண்டுமென்று மன்றாடுவதேன்? பரம்பரையான கமக்காரன் காலந்தனக்குப் பாதகமாயிருப்பினும், தனது தொழிலைக் கைவிடமாட்டான்; அதேபோன்று எப்போதும் இறைவனை நினைந்துத் தியானஞ் செய், என்பது ஸ்ரீ ராம கிருஷ்ணரின் போதனையாகும். அவரைத் தியானிக்க முடியுமானால் நீ பெரும் பாக்கியசாலி யென்பதை உணருவாயாக. இன்பமாயினுஞ் சரி துன்பமாயினுஞ் சரி, சாந்தியாயினுஞ் சரி அமைதியீனமாயினுஞ் சரி ஏதுவரினும் அவருடைய பாதங்களுக்கு அர்ப்பணஞ் செய்; அவர் உன்னை எந்த நிலைபரத்தில் வைக்கின்றாரோ அதில் சமாதானமாயிரு. அவரை வணங்குவதற்கு அவரே உனக்கு உதவி செய்கிறாரென்று பிரார்த்தனை செய்யப் பழகு; சாந்தி தானே உன்னை வந்தடையும். நீ மனச் சாந்திக்காகப் பிரார்த்தனை செய்ய வேண்டும். ஆனால் அவருடைய வழிபாட்டில் உன்னை ஈடு பட்டிருக்கச் செய்யும்படி பிரார்த்தனை செய். பணங் கொடுத்து வாங்கும் பொருள்களை போல ஈஸ்வரனை வாங்க முடியாது. சாதனைகளுக்கு முடிவில்லை; ஆகையினாலே இந்த முறையினால்தான் அவரை அடையலா மென்று கூற முடியாது. உனக்குரியனவற்றை யெல்லாம் ஆண்டவனுக்கு அர்ப்பணஞ் செய்துவிட்டு, அவருடைய திருவருளைப் பெறுவதற்கு அமைதியாகப் பொறுத்திருக்க வேண்டும். அவர் அருள் தானே உன்னை வந்தடையும். பிராணாயாம அப்பியாசத்தினாலாவது அல்லது வேறெந்தமுறைகளினாலாவது ஒருவரும் ஆண்டவனைக்காண முடியாது கடவுள் தரிசனம் பெற்றவன் அவருடைய திருவருளின் மூலம் பெறுகின்றான். அவருடைய வாசற்படியில் அவர் உன்னைக்காத்திருக்கச் செய்வதே அவருடைய கிருபையாகும். சாதனையென்னும் பதத்தின் வேறு கருத்தென்ன? மனம், மொழி, மெய்யினால் இறைவனை இறைஞ்சுவதே சாதனமாகும். பொய்யை ஒழி; உண்மை முயல். அதே போதுமானது. இதைவிட வேறு சாதனை தேவைப்படின் ஆண்டவன் அதைப் பயிலும்படி உன்னைத் தூண்டுவார்.

சில அறிவு மொழிகள்

(ஃ)

ஒரு மனிதனுடைய உண்மையான குணத்தை எப்பொழுது கண்டுபிடிக்கலாம்? அவனுக்கு அதிகாரம் இருக்கிறபொழுது.

—பிட்டாகஸ்

முட்டாள்தான் தன் மனதிலிருக்கிறதையெல்லாம் கொட்டிவிடுகிறான். புத்திசாலி அப்படிச்செய்வதில்லை.

—சாலோமன்

யுத்தகளத்தில் ஒரு போர்வீரன், தான் யுத்தஞ் செய்வது சரியா, தவறாவென்று சிந்திக்கத் தொடங்கிவிடுவானாகில், அந்தச் சிந்தனையே அவனுடைய வாளாயுதத்தை விழுங்கிவிடுகிறது.

—ஷேக்ஸ்பியர்

உலகத்திலே சில மகான்கள் இருக்கிறார்கள்; அவர்கள் சிரசில் ராஜமகுடம் இருப்பதில்லை; ஆனால் அவர்கள்முகத்தில் ராஜகளை இருக்கிறது.

—பேட்டன்

காதலை எப்பொழுதும் பரிசோதனை செய்து பாராதே

—சீனப் பழமொழி

ஏணியின் மேல் படியை அடையவேண்டுமானால் அதன் கீழ்ப்படியிலிருந்துதான் ஆரம்பிக்கவேண்டும். அப்படித்தான் வாழக்கையிலும்.

—பைத்தாகோரஸ்

ஜெர்மன் வேவுகாரி மடாம் நிஸாய்

யுத்தத்தில், ஜெயிப்பதும் தோற்பதும், மனித சக்தியையோ ஆயுத சக்தியையோ மட்டுந்தான் பொறுத்திருக்கிறதா? இல்லை. யுத்தத்தை முன்னுக்கோ, அல்லது பின்னுக்கோ தள்ளுவதற்கு மற்றொரு சக்தியின் துணையும் நாடப்படுகிறது. அப்படியானால் அந்தச் சக்திதான் என்ன? என்பதற்கு,

ஜெர்மன் வேவுகாரி மடாம் நிஸாய் என்ற நூலைப் படியுங்கள்.

கிடைக்குமிடம்: வேதம் அன்கோ, 89 மோகல் வீதி இரங்கூன்

எல்லாப் புத்தக சாலைகளிலும் பெற்றுக் கொள்ளலாம். விலை அணு 6.

மூன்றாவது வருஷம்
"ஜோதி"யின்
பைண்டு வால்யூம்
இரண்டு புஸ்தகங்களாக
தயாராகிவிட்டது
விலை ரூபா 4—8—0

தபால் செலவு
பர்மாவுக்கு 0-6-0 இந்தியாவுக்கு 0-8-0
மலேயா முதலிய வெளி நாடுகளுக்கு ரூ. 2
தபால் செலவுடன் மணியார்டர் செய்யுங்கள்
ஜோதி பப்ளிஷிங் கம்பெனி, லிமிடெட்
47, 31-வது வீதி, இரங்கோன்.